உ

திருச்சிற்றம்பலம்.

# திருமயிலைக் கலம்பகம்.

புரசை-அஷ்டாவதானம்

சபாபதி முதலியாரவர்கள் மாணாக்கர்,

திருமயிலை வித்வான்,

சண்முகம் பிள்ளையவர்களாற்

பரிசோதிக்கப்பட்டு,

---

வடியூர் - சு. சொக்கலிங்கம் பிள்ளையவர்களால்

எம்பரர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

---

சோபகிருது வரு

மகரரவி.

Copy-right Rigistered.

உ

வேலுமயிலுந்துணை.

## சிறப்புப்பாயிரம்.

திருமயிலை வித்வான்,

**சண்முகம்பிள்ளையவர்கள் மாணாக்கரும்,**

சென்னை எஸ். பி. ஜி ஹைஸ்கூல தமிழ்ப்பண்டிதருமாகிய

**கா. நமச்சிவாய முதலியார் பாடிய**

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சிலம்பகந்தோறும் விளையாட்டயர்குகனைத் தருமயிலைத் தேவதேவனை, கலம்பகத்தைப்பிழைதபுத்துத்தருதியெனக்கமழ் சீரகத்திஞெங்கு, மிலம்பகமேபுனைமாயிற்றோனறியோன் சொக்கலிங்கவேந்தலகேட்பத், தலம்பகருமிருமையிலும்புகழாமென்றுசெய்துதந்தானம்மா.

அனையனியாரெனினறைதுமாறுமாமுகத்திறைக்கேயனைபூண்டோன், முனிவிகந்தெற்கிலக்கியமுமிலக்கணமுங்கனிவினெடுமொழிபுரீரான், கனியொருமும்மையுங்கனியக்கவிபாடுங்கவிநலத்தோனகற்றுங்கென்று, மனையவடக்குமுங்கூட்டப்பொருந்துஞ்சண்முகநாமத்தழகியோனே.

கணபதிதுணை

# திருமயிலைக்கலம்பகம்.

## காப்பு.

### கட்டளைக்கலித்துறை.

கயிலைக்கிறைவர்கபாலீசர்தஞ்சொற்கலம்பகமயா
னயிலைப்பயிலுமறிவுபெற்றேறுதவமிர்தவல்லி
குயிலைத்தழுவியசிங்காரவேலற்குயாதுணையா
மயிலைப்பதிவளர்குஞ்சரச்செஞ்சரண்வாழ்த்துவனே.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிரு

பூத்தாடும்பயின்மலராற்பூசிப்பான்மயிலுருவாய்
கீத்தாமெபருமகதிநாரதனிந்திரனவிரிஞ்சனிசை
காத்தாமெவருந்திறெனுமயிலேசன்கலம்பகத்தை
கூத்தாமெபிள்ளைதிருவடிமலரைமுடிசூட்டிக்கொ

## நூல்.

### வண்ணகவொத்தாழிசைக்கொச்சகக்கலிப்பா.

சீர்கொண்டசதுர்மறையுந்தெள்ளமுதப்பெருங்கடலவாழ
கார்கொண்டமணிவண்ணன்கடவுளருந்தொழுதிறைஞ்சப்
பொன்னிமையப்பொருப்பரசன்புரிதவத்தாலுதித்தருளுங்
கன்னிமையனாருங்கூந்தற்கவுரியுளங்களிசிறப்பக்
குரகதமேழுறப்பூட்டுங்கொடிஞ்சியந்தேர்விலகவிமிர
மரகதப்பாசடைப்புன்னைவளர்மயிலையுறைந்தனையே.

செல்காலமெதிர்காலந்தெரிந்துயிர்களைத்தினுக்கும்
பலபோகந்தனுகரணமடைந்தும்வினைப்பகுப்பறிந்து
யீங்கிதுநாமிழைத்திடினமேலிஃதுறுமென்றெண்ணாது
தீங்குபுரிந்திடுமவேதனைசெய்தவினைக்கீடாக
வாங்கவன்றனணிமுடியோரைந்தினிலொன்றினைநீக்கி
யோங்குகபாலீசனெனவொருநாமந்தரித்தனையே.

இவை ஆறடித்தரவுகள்.

தென்னிலங்கைவாழ்நிருதன் றிறலழுங்கத் திருந்துசெய்
மின்னிலங்கைவாயரவின் மேனடித்தாற்கீந்தனையே.
புயற்றினமார்பொழின்மயிலாபுரியிலாணிசிவிராக
மியற்றினரெமபதத்துறைவரெனத்திருவாய்மலர்ந்தனையே.
பற்றியவித்திடுஞ்சூரபற்பனைப்பன்முனைசாட
வெற்றியயில்சிங்காரவேலவனுக்கருளினையே.
உலந்தரனேயெனப்பாவியொருங்கிமையோரபயமிடச்
சலந்தரனைமிடல்சாயத்தடிந்தருளிச்செய்தனையே.
ஓராழியினைவிரும்பியொளிர்விழிசாத்திடாறும்பா
னீராழியினில்வளருநெடியோனுக்களித்தனையே.
காரங்கதனிலணிந்தடுங்கமுனிவரா விடுத்த
சாரங்கதனைநினதுதனிக்கரதிற்பிடித்தனையே.

இவை ஈரடித்தாழிசைகள்.

மடநடையனமெனநடைபயில்விருடியா
மடவியர்மனைதொறுமேபலிபுரிந்தனை.
கடிகமழ்கமுகினெடுறெழதருகளமிசை
கடவிடைபடுநெடுமரவிடயணிந்தனை.
அடலெழுதடயதினமிடைதரவிடைவள
ரடையலர்திரிபுரநீறெழமுனிந்தனை.
இடியொலிபடருறவெடிபடுகனைகுரா
லெயினனதுருவொடுகானிடைநடந்தனை.

இவை ஈரடி அராகங்கள்.

உலகநீயொருவனென்றுரைக்குமாயினை
அலகிலாவுயிர்க்குயிராகிநின்றனை.
வன்புசெய்யைம்புலப்பகையைமாற்றினை
இன்பமுந்துன்பமுமெனதெனவேறுதினை.

இவை நாற்சீரடி அம்போதரங்கம்-பேரெண்.

கதிரமறைச்சிலம்பினைக்காலிற்பூண்டனை.
அதிரபுலியதளினையரையிறுங்கினை.

முதுமையொடிளமைமுகக்கா லுகைத்தனை.
பொதியிருட்கரியுரிமுழுதும்போர்த்தனை.

இவை நாற்சீர் ஓரடி அம்போதரங்கம்-அளவெண.

அறநெறிமுழுதும்விரித்தனை.
அடியவர்வினைகெடொறுத்தனை.
மறைவளர்சடிலமுடித்தனை,
பெருமைகொள்சபையினடித்தனை.
முறைநிறைமனனிலுதித்தனை.
முயலகனமுதுகினமிதித்தனை.
இறையவளுறையுமிடத்தினை.
இணையகறிகிரிநடத்தினை.

இவை முச்சீர் ஓரடி அம்போதரங்கம்-இடையெண.

நிறையளித்தனை-பொறையளித்தனை-
யளித்தனை-அறவுளத்தனை-மறைவளர்த்தனை-
விசைத்தனை - ஆறணிந்தனை-நீறணிந்தனை-அ
யாயினை-ஏறுகந்தனை-மாறிகந்தனை-இல்லதாயி

இவை இருசீர் ஓரடிப்பதினறம்போதரங்கம்-சிற்றெண.

எனவாங்கு-தனிச்சொல்.

கயிலையிற்கயிலைசெயமயிலைமாநகரிற்
கனியிதழுடனுணடினிதுறைதேவ
நாலவகைத்தோற்றப்பாலவகைப்பிறந்த
வெழுவகைப்பிறப்பினுழிவறமுழுகி
யெழுந்திடற்கரிதாயழுந்திடக்கூடிடுந்
திருவடிப்பிழையாவொருபெருந்தன்மை
தழைந்தருளினானவிழைந்திடுமெவாமே. (1)

இவை ஏழடி நிலைமண்டிலவாசிரியச்சுரிதகம்.

வெண்பா.

மேலானதெய்வமினிமேதினியில்வேறுண்டோ
தூலானதுப்பகருநுண்பொருளு-நாலான

ருமயிலைககலமபகம.

வேதங்கடநதுநினறான்மேவுமயிலாபுரியான்
பாதங்கடநதுநின்றனபார. (2)

**கட்டளைக்கலித்துறை.**

பாரிடஞ்சூழ்நதொளிவெணமுத்தமீனுமபசியபுன்னை
வேரிடங்காணிகொணடாரமயிலாபுரிமேவினரே
லாரிடநதோறறுமெழிலவளாமெனமைகண்டாய்நதலவோ
சீரிடங்கொணடவுருமாறிமாரனறிரிகின்றதே. (3)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம.

தேங்கமழுமலர்ச்சோலைத்தெனமயிலாபுரிவாழுநதேவரேநீ [தீர்
ரோங்கிவருமறலிதனககொருவருககுங கிடையாதவொருதாளீந
பூங்கமலமலர்சொரிநதபூவாளிதனையெரிததீர்புவியினமீதே
யீங்குமதுசெய்கையினுலுமக்கடிமைபபடுவரினியாவர்தாமே. (4)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியச் சந்தவிருத்தம.

தானவருநதொழமேவியிருநததயாநிதிநண்பர்கபாலீசர்
வானிமிர்கினறபுன்னைகவனநதனிலவாவிமருங்கினிலவாழ்நாராய்
நானவரினபுறுநாளினவினறனநாதாமறநதனாநீரேனுங
கூனவிளமபிறைமாருதமுங்கொடிதாயவருகினறதுகூறீரே. (5)

பதின்மூன்குசீாககழிநெடிலடியாசிரியவிருத்தம.

கூரிருக்குமவிழியலையடநதையொருகூறிருக்கவுதிசிதளங்
குலவுகஙகைகமுடிமீதுவநதுகுடிகொணடிருககவுமவளஙகெழுஞ்
சீரிருககுமவடிவமபசநதொருபுறஞசிவநதுவிரததிறை [மேக
றீவிழிததவுமையேயாகியெனறுதுதிசெயவாபாவமிஃதெனசொல
னூரிருககுமுததனமறைககுமறிவரியநுணபொருளதாகியே
யகிலலோகமுமளிததுயிாககுயிாதாயிருநதருளசெய்யரே
யேயிருக்குநளினபபொகுட்டினிலிருககுமிநதிரையிருக்குநல
லெழிலிருக்குமயிலாபுரிககுளினிதாயிருககுமகிலேசமே. (6)

பதினறுசீாககழிநெடிலடியாசிரியவிருத்தம.

தாரேழுமருமநதனிறறுயலவரைபபகைதடிநதுலகமொரு
குடைநிழற் - றஙகவினிதரசாள்வாபொனனுலகையாள்வரொனிர்

தணகயிலைகாணிகொளவா, காரேழுமவெள்கக்கவின்செய்[…]றுங்கு
ழறகறையரமகளிாகாநதட்கைததலநதனிலயாழெடுததுவளரு
கிரிறகளிநதமுதமூறுவரலபோ, லோரேழினிசையமைநதினன
ரமபுளரவளரொளளொளிதருமயிமிளிருமூயர்மவுலியிமையவர்க
ள்கறபகபபூமாரிபொழியாதெழுநதுபொழிய, வாரேழ்வகைபபெ
ருமபிறவிநோயதீாததருளவணிமயிலைவீறறிருக்குமகிலாணடநா
யகாதிருபபணிசெயக்கருதியனபுகூாதருமவாகளே. (7)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம.

அலலொன்றுதிருமிடற்றாணிமயிலைப பதிவாழுமையரெ
ய்யும, விலலொனறுகாதலெடுததவேடனைக்காயநதனனெனறுவி
ளமபினற, சொலலொனறிவவுலகதனிறகேடபதலலாலவழொ
ழுக்கஞசோதிததேமால, வலலொனறுமுலைசசுவடுமெவளொததழு
மபுந திருமாயில வயஙகுநதானே. (8)

எணசீர்க்கழிநெடிலடியாசிரியச்சநதவிருததம.

தாடாரத்துவைத்துநெக்குடைநதிடக்குடைநதுபைந
தாதணைநதுநறவுகொபபுளிததெழுநதுகணமலாக
கோடுதோறுமவிளரிவணடினங்களிநதுபாணசெயுங
குளிாவளஙகொணமயிலைநாதரோதெரிநதுகூறுவீ
ராடகததொடிக்கையாலணைநதுமுததமிடடிவ
ளழகிருநதபவளவாயினமுதவூறலுணடிடற
றேடுவானவாககிரங்கிநீாகுடிததநஞசினுந
தீயதோதெவிட்டுமோதிருவுளககுறிபபதே. (9)

பனனிருசீாக்கழிநெடிலடியாசிரியவிருததம.

ஏராரிளவெணமதியமணிநதிருக்குஙகோவேகருக்கோவை
யெளிதிற்கழிக்கததிருநோக்கமெனறுமளிககுமணிக்குன்றே
யாராவமுதேயருடகடலேயணிபிறகணிபபகணமணிதேய
யகிலபுவனங்களுநதுதிபபவாமனையூருமபசுநதேனே
காராாகணடததாணடகைமுககணணுபயவளவணணுசெய்
கயலாாவிழிக்கறபகக்கொடிசூழ்காவேயமராதொழுநதேவ
தீராயடியேனகவலையினைத்தெளிவாருள்ளததெழுமொளியே
செநதாமரைமெனபொகுட்டிலுறைதிருவாழமயிலைபபெருவாழ
வே. (10)

கட்டளைக்கலிப்பா.

வாழுமவெள்ளிமலையொன் றிருக்கவும் வளரும்பொன்மலை
மேருவிருக்கவுந், தாழ்விலாதகுபேரனுந்தேவரீர் தமதுதோழமை
யாகியிருக்கவு,மாழிசூழ்புவிமீதிலறமபுரிந தருளமா துமிருக்கவுமா
ாநதிசை,யேழுஞசூழ்மயிலாபுரியையரே யிரக்கவநதெடுத்துரை
செயயிரே. (11)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எடுத்தயாகைகயினபயனபெறுகின்றிலரெறிதிரைக்கடனமேறபா
மடுத்துவணடினமேழிசைபயிறருமதுமலாபபொழிலவாவி [ண
யடுததெனமயிலாபுரியிலலுறைநதானநதபபெருவாழ்வு
கொடுததிடுஙகபாலீசனைநேசமாயகதுழைவுடனபணியாரே (12)

நேரிசைவெண்பா.

பணியாாமயிலைபபரமபொருளினபாாவை
பிணியாவையுநதுரத்திபபேர்ககும-மணிகடுக்கை
வாசததளையவிழககுமவாாசடைபபொறபாதமலர்
பாசததளையவிழ்க்குமபாா. (13)

அறுசீாககழிநெடிலடியாசிரியவிருததம.

பாராதரவுபிறிதறியாளபருவமறியாள்பிறாக்குறியா
டீராதரவககடலனலமபாறசெறிமாருததததிறகுடைநதாளென்
றூராதரவாயெடுததுரைபபாரணஙகிறகடுததகுணங்களெலாம
போாதரவுகுடியிருககுமபெமமானமயிலைபபெருமாறகே. (14)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருததம.

கேதனுயகனுலகினிலலமவரக்கெழுமியதுயாதீாபபான்
போதநாயகனமயிலைவாழநாயகனபுவனநாயகனபோநத
வேதநாயகனமெயபபொருளுயகனவிரிஞசனமாலபணியாத
காதநாயகனகிலலோகமுநதொழுநாயகனிவனறே. (15)

புயவகுபபு-ஆசிரியவணணவிருத்தம.

குரைகட விடியென வருமதகரியினை
யெறறிப பறறிப பிடிததடாநதன

இணையடி பரவிய வடியவர் மிடிதனை
யெட்டுத் திக்கப் புறத்தெறிந்தன
எழுதரு முமையவ ளிணைமுலை தழுவிய
ணிப்புற் றிப்பல புவிக்கிரங்கின
இலகிய சுவைதரு பதிகவி னிசைமொழி
யிச்சித் திச்சித் திசைக்கின்றன

குரைகழ லிகழ்வுசெய் தெழிலொரு மசமுயல
குற்றத் திற்குத் தலைக்கரிந்தன
கொலைபுரி மறலியை வலனுற புவிமிசை
குப்புற விட்டுக் கிடக்கவென்றன
குலவிய விரணிய னுரமடு குருதிகு
டித்துக் கொட்புற் றதிரத் துவிஞ்சிய
கொடுவெறி யுடனெதிர் வருமரி முகனுடல்
கொத்திக் கொத்திக் கிழித்தெறிந்தன

கரைபொரு கடல்விட மமுதுசெய்
கட்குச் சித்தத் துயர்க்களைந்த
கயிலையை யகழ்பவ னொருபது சிரமு
கத்தச் சற்றுக் கறுத்திருந்தன
கனிவுட னிருதொழி லரியயன் மனனிடை
கற்பத் துப்பொற் புறத்தமைந்தன
கருதர மகளிர்க ளிருபுடை கவரிக
ரத்திற் பற்றிச் சுழற்றுகின்றன

விரைகம ழிதழிவெண் முகையவிழ் தளவொடு
வெட்சிப் பிச்சித் தொடைக்கிசைந்தன
மிகுமதி நிறையுள முனிவரர் மடவியர்
வெட்கிப் புக்கப் பலிக்குநின்றன
விரவிய குளிர்பனி மிடைதரு தமனிய
வெற்பைப் பற்றிக் குனித்திருந்தன
விரிபொழி லிலவிய மயிலையி லிறையவர்
வெற்றிக் கொற்றத் திருப்புயங்களே. (16)

வெண்பா.

புயங்கந் தரித்த புனிதனைப்போற் றாசீர்
வயங்கந் தரித்தசெங்கண் மாலுந் - தியங்கி

விருப்பார்மயிலையிறைவனுக்கொன்றீயும்
விருப்பார் பாவிணைஞருவார். (17)

கட்டளைக்கலித்துறை.

வாராருங்கொங்கையுமைக்கொருபாகமவருக்களித்தார்
நீராருமங்கையுங்கேளாவுபாயநினைந்தலவோ
வேராருறுபயினிற்கெலலாஞ்சிறந்ததெனமகிழச்
சீராருஞ்சென்னியிற்றென்மயிலேசர்முன்சேர்த்தியதே. (18)

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

தேவதுந்துமியுடன்செயங்கொள்பேரிகையுமதிர்ந்
திடவிளங்குபொன்னிழைத்தசின்னமோடுகாளமு
மேவிராகமோடுவேடம்விட்டிடென்றிசைத்ததால்
வெட்கிலீரிரைக்குமிந்தவிருதுமக்கடுக்குமோ
பூவின்மேலுறைந்திருந்தபோதனுக்குமஞ்சிரம்
பொருந்திநிற்குமோவெனுமபொருமைவந்துவிளைதலாற்
பாவமுங்குறித்திடாதுபதறியொன்றுகிள்ளினீர்
பாலலோசனத்தரேகபாலகைத்தலத்தரே. (19)

மடக்கு-பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தள்ளிடக்குந்தாராவேதளிர்கைமலர்பபந்தாராவே
தவழ்வெண்ணிலவேதணியாதேதளருமிவள்சந்தணியாதே
துள்ளுமபுனற்பைந்தடங்காவேதுயரமுள்ளத்தடங்காவே
துளிகொண்டெழுந்தமருங்காரேதூற்றுமலரின்மருங்காரே
பிள்ளைச்சுரும்பார்கழுநீரேபெருகுமிவளுக்கழுநீரே
பிறங்குங்கடல்வாயிரங்கலையேபிரிந்தோர்க்கொருகாலிரங்கலையே
வள்ளககமலமபயிலனமேமறந்தாளிவளுணபயிலனமே
வளரும்புனைவனத்தாரேவழங்கார்கொன்றைவனத்தாரே (20)

தவம்-அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தாவுமரிமான்கிடந்தவனமீதிற்சருகருந்தித்தயங்கைந்தீயி
னுவிலொருவிரலூன்றிநின்றுமுயனறருந்தவங்கணயாதுநீணாள்
பாவிவருமோகமதமாச்சரியமொழிந்திளைத்தபடிவத்தோரே
தேவன்மயிலாபுரியைச்சிந்திப்போமெனினவினைகள்சிந்திப்போ
மே. (21)

கட்டளைக்கலித்துறை.

போதரிக்குங்கண்கைசூழ்மயிலைசென்பொற்றாமரைத்தா
ளோதரிக்குங்கிடையாதருணோக்கமவனதுன்னையென்று
மாதரிக்குங்கரமஞ்சேலஞ்சேலென்றபயநல்கும
வாதரிக்குநெஞ்சமேதஞ்சமாவதென்மறநிலையே. (22)

நேரிசைவெண்பா.

தெள்ளமபுனற்கங்கைசேர்மயிலைநாயகனை
யுள்ளநினைந்திடுகவோதுகவாய-கள்ளவிழுமு
வண்ணனையேகொண்டுவணங்குகவெண்கைவளர்முக்
கண்ணனையேகாணுகவென்கண். (23)

வஞ்சிவிருத்தம.

கண்ணுமாவியுமாயினு, ணண்ணலான்மயிலாபுரி
யெண்ணுவாரவினையாவையும, விண்ணிலோடு

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம கழிக்கை

திண்ணமயிலைவணங்காபோற்றீராக்கவலையுடனிற்பாய
நண்ணுநதுயரக்கடறபடிவாயநாடிததிசைபாரதேதாடிவநது
தண்ணமபுழுகுமபனிநீருஞசாததுமவிருபபாலிருபொழுதுங
கண்ணுமுறஙகாயுனக்குமரக்கலமேமணநதாரதணநதாரே. (25)

கட்டளைக்கலித்துறை.

ஓதிச்சிறநதிடுயகண்ணோகணலகையிலோஙகுமழு
பாததத்முதநதருமதிதேயததபழிகின்றதார
கோதற்றமேனமைவளர்மயிலாபுரிகோயிலகொணட
நாதறகருளவைத்திருக்குமிடநதனைநாடுவனே. (26)

வண்டுவிடுதூது-நேரிசைவெண்பா.

ஏஙகிபபுணமாலைகிளைத்தேனெனமாபிற
றுஙகிறசிறநதகொன்றைததாரமாலை வாங்கிப
பறநதுவருமோமயிலைபபைமபொழிறறேனுணடு
மறநதுவருமோமாதேமா. (27)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாமருவுற்றினிதிருந்துகிருதந்தஞ்செய்யு மயிலையினிலொரு பொழுதுவாசஞ்செய்தே, மேபாமனிதர்கொடுமையாவமபுரிந்தாரே னும்பொள்ளெனவேதுள்ளியன்போதுமுன்னஞ், சேமருவிததிரி சூலங்கரத்திலேந்தித் திருமுகத்திற குறுவெயாவுதிகழந்தோன் றக், காமரெழிறகற்பகப்பூங்கொடியினோடுங் கபாலீசரோடிவரக் காணலாமே. (28)

சந்தத்தாழிசை.

காலையம்புயஞ்சொரிந்தமுருகுயிர்கருகாதுவெனக்
கலங்கநெஞ்சுகயலைவென்றகணகணீர்ததும்பிட
வேலைமீதெழுந்தஞ்சுடனபிறந்துவந்திடும
வெண்ணிலாநெருபபிலேவெதுமபிவாடஞாயமோ
வாலகோமளச்சுதாகரபபெணீர்ததநிதமிடு
மயிலைமாநகாக்குள்வாழுமவாசரேயுலாசரே
யேலவார்குழற்கண்மங்கைநேசரேயெழிற்கபா
லீசரேயருட்கனிந்திலங்குமெய்பபிரகாசரே. (29)

கட்டளைக்கலித்துறை.

பிறைமுடிக்குஞ்சடையாரடியார்தமபெருமபிறவித்
துறைமுடிக்குந்திருநோககுடையாரருள்சூழமயிலை
நறைமுடிக்கும்பொழிற்பைங்கிளிகாளுள்ளநணபுவைத்தென்
குறைமுடிக்குமபடிகூறீர்மகரககுழைசசெவிககே. (30)

பதினறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மணிகொண்டவண்ணனுந்தணனெனுங்கமலத்தினவாசம புரிந்துபிரியா - மறையோனுமவணடுயராகிறையோனுமவாய்மை யெழின்மானவருமவானவருநற், பணிகொண்டபாதலம்பூதலத துறையுயிர்பபகுதியுந்தகுதியுறுமெய்ப-பணபுபெறவந்துநினறனுதி னமவணங்கிப்பணிந்துபறபலதுதிசெய்யு, மணிகொண்டதெனமயி லைநாதனைக்கள்ளவிழுமபுயமலர்பபாதனை - யண்டபகிரண்டமுந தண்டமுடிருவிளரணணறனையஞ்சலிப்பாம, பிணிகொண்டபிறவி ப்பெருங்கடறகுழிதனிறபெட்புறககொட்புறாது - போதமெயஞ் ஞானவமுதவாரிதியைபபெறறகருள்கிடைததருள்கவே. (31)

வஞ்சிவிருத்தம்.

கதியும் பெறுவார்-நிதியும் பெறுவார்
மதியன் மயிலைப்-பதிகண் டவரே. (32)

வேற்றொலிவெண்டுறை.

பத்திசெய்மயிலையிலவித்தகர்பத்மலர்பணியார்போ
லத்தமத்தனி லுறுகொற்றவர்சிலர்துக்கணடமியாரோ
சித்தசன்கணைதொளைத்திருக்கினைமேற்னைவந்
இத்திறமவருத்திமேயிருந்திருபிறந்துமே. (33)

கலிநிலைத்துறை.

ஏதமீக்கிநல்லனபாகடுன்புறத்தெழுங்காலன்
வாதைதீர்த்திடுமயிலைமாநகர்ப்பெருவாழ்வேயான்
காதலாற்குடியிருக்குமிக்கதாமடைப்பகைவிடுங்காலம்
பாதத்தாமரைத்தனிலிடங்கொடுப்பதுனபாரமாமே.

பதினாறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிரு

ஆரிருக்குமலர்சோதிருச்சடிலவையமேபுமதுசெய்கைநா [பொன்
னறிவனைங் கண்ணொடுத்து மாரனவரவனறு கணணினைவிழித்தி
ஞாரிருக்குமவரிதவழுறசிறகரொடுபறந்திடநடுங்கவே
நண்ணுமுப்புரமுனனெனறசேவகனகைப்பதாகியேமுடிந்ததா
லேரிருக்குமழுநெடியசூலமேனெடுத்துவீணிலேசுமக்குமீ
னெனபாவமிம்மேத்தனுமகுழைசெய்மொழிப்பசுடரிலங்குபொன்
வாரிருக்குமுலைமலைமடந்தைமணவாளசுந்தரரே திரு
மகளிருக்குமயிலாபுரிக்குளருளாவந்திருக்குநிறைவாநதரே. (35)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வண்ணமபசந்தசிலையெடுத்துவளைத்துமலர்வாளிபைத்தொடுத்துத், துண்ணெனறனங்கனவரிலமேவறுதுணை பிமயிலையிற்குணடோ,பண்ணண்புறுமஞ்சிறைபளிகளைடைந்தாதளைநதினனிசைசபாடந, தண்ணமபசுந்தெழுக்ழ்ந்தார்மோகந்தீரே. (36)

பதின்மூன்றுசீர்க்கழிநெடிலடியாசிரியசந்தவிருத்தம்.

கருத்தாமகளிர்கரங்கணமீதொளிவிரிகதிர்கிலவுமிழ்கினறசாம

ரை கவிஞெருசுழுப்பகினறுவானவா துதிகூற, வரியொடுபேரமன்வ
ணங்கிணைமுடிவருடவிஞெனிசெய்சிவந்தாளின ரலைகடலவரு
விடமுண்டநாயகர்மயிலேச, ரிருவிழிசொரிபுனலசிந்துதாரைகளி
னைமுலைமுழுகிவழிந்துவீழ்தர விளகிலாமனதுபிரிந்துபோயினா
கழியூடே, குதுகுலமறவருகொணடலைலிறைமுருகவிழுமலாசொ
ரிகணடலேபிரி குருந்துயாறிதருபனறிலேகடனுரையீரோ. (37)

கட்டளைக்கலிப்பா.

கண்டுசேர்ககரை தேனினினித்திடுங
காமாமெனகுதலைசசிறுமென்மொழித
தொணடைவாயககிளிவாடிததவிததிடத
துயயதென்மயிலாபுரியையனை
யணடுதீயபுனறகஙகைவிரவியும
வளருஞ்சநதாகிரணமருவியு
முணடிருநதவிடத்தினமகிமையோ
வுளங்குளிர்நதருகாதிடுமுணமையே. (38)

எணசீரக்கழிநெடிலடியாசிரியவிருத்தம.

உருமலர்ககணைத்தழற்கிலக்கமாயவெதுமபின
டோவிவடஙகரிநதுசாநதுலாநதுவாய்புலாநதுமின
றிருமலாக்கணீாததுமபவெணணுகினறதுயாநீ
டெழிலவளஙகொணமயிலையினகணிரையருநதுருகுகாள
அருமலைபபெணணாமிசைககலநதசெபபெலாத்திரண
டணிகலஞசுமநதெழுநதினருளசுரநதுபெருகிடுந
திருமுலைபபாலமுதமுணடுபாடலசெயதசெநதமிழுத
தேனுகாநதிருநதவணணலசெஞசெவிககிசைபபீரே. (39)

அம்மானை-கலித்தாழிசை.

விலவநதிருச்சடிலமேவுமயிலாபுரியார்
செலவநதழைததுநிறைசெலவாகாணமமானை
செலவநதழைததுநிறைசெலவரேயாமாகி
லிலலங்கடோறுமிரபபரோவமமானை
யிரநதாயிததலைவநதேறலாலமமானை. (40)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மானிருக்குங்கரதலத்தின் மரகதப்பைங்கிளியிருக்குமறமேரூ
கையிற, நேனிருக்குங்கருங்கூந்தறசெஞ்சடையுஞ்சோநதிருக்கு
ஞசிரத்தினமீதி, வானிருக்குஞ்சந்நிதியிலருளிருக்குந்திருமுகத்
திலகத்திலேயகா, நானிருக்குமவர்க்கரியநாமயிலையினிலிருக்குநா
தனறமே. (41)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தண்ணிததிலமணியேயொளிதனைவிட்டகணமணிபே
தவழுமபருவனைமயேநிறைதளருஞசரிவனைமயே
நண்ணிததருமயிலாபுரியணணறகொருமொழிகோ
நவிலப்பெறுவேனோதனிகவலைப்பெறுமேனோ
வுணணிறகுறுகிளியேயுடலகணணிதெறுமொளியே
யுறவிட்டழைகுயிலேமகளறவிட்டனகுயிலே
விணணிறசெலுநாராயதுயாபெணணிறகருளகூறாய
விளாமெயகருகினோயிவணமெலிவிறதருகினே

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குனிக்குமபுருவககொழுஙகயறகடகுமுதவிதழ்தநெணம
யிலைவளா, பணிககுஙகுமக்கொஙகையையிடப்பாற்பரிநதாருள்ள
மபொருந்தாரோ, றொனிக்குநதெனறறமேறாகட விசசுருமபுழுமலே
ங்கணைதொடுதமே, யினிக்குநதவாகொணடணஙகனவரினியினியா
ரிவருக்கினிபாமா. (43)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியசந்தவிருத்தம

இனியிருக்கினுலறிநதுமெட்டொணுதநாதனு
ரிருதயததிரககமினெனசசட்டாட்டவிக்குளே
குனியிருக்குமவெணபிறைககொழுநதனறறவழ்நதிடுங
கொடியமாருததததொடுங்குலாவிநினறுவருந்தலாற
றனியிருக்குமஙகையாக்கிருக்கவிநதவூாது
தக்கதனறிதனறியாயிரநதலைபபொனமாசுண
கனியிருக்குமாழிவாயினகாகினைநததாதலான
ஞாயமுணடோமயிலையிருக்குமெனனுமே. (44)

MAHAMAHOPADHYAYA ... LIBRARY

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்-பாண்.

இருசரண மயிலேசர் புகழ்பாடியின்னிசையாழெடுக்கும் பாணா
பரிசிலதுபக வென்று நேங்கவென்றேனவிழித்திடுமோபாரக்கவெள
[ரு
டிருகுசினக் களிறென்றே னெவ்வாற்றிற பிடிக்கதெனச்சிரித்தா
னின்றாள், வருமொருமா தயக்கமென்றே னங்கமெலாமகிழ்ந்தோடி
வருகின்றாளே. (15)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

கைகலந்தகூலமொன்றுகைகலந்தநேசனூர்
 வாசனூர்சிறந்தபுன்னைவனமவிளங்குமீசனூர்
மெய்கலந்துபுகழ்சொரிந்துபாடுகின்றபாணனான
 மேவிவந்தபரிசுகண்டிராசனென்றுவீணனீ
கைகலந்துபாடண்புசெய்யவிந்தவயலினைக்
 கடந்துநின்றுபார்மலர்த்தடங்கிடங்குகவினுமேற
பொய்கலந்தமொழிசொலாதநிறைமனத்தர்மயிலைகாண
 புறவைமோடிதானையானைபெறுவைதோடிபாடியே. (46)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏராருங்கற்பகப்பூங்கொடிவாமத்தி
 லிடங்கொடுத்தகுயாந்துவளர்ந்திடங்கண்பூர்ந்த
காராருங்கண்டருயரண்டர்போற்றுங்
 கபாலீசர்சந்நிதிப்பிறகவினுந்தீர்த்த
நீராரவொருபோதுமூழ்கித்தூய
 நீறணிந்தநிருமலனைநினைக்கின்றோர்க
டீராதபெருமபிறவிக்கடலின்மூழ்கித்
 திளையார்களிளையார்கள்சிந்தைதானே. (47)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

தாதளைந்துமகரந்தநுகர்ந்தேதாவிநின்றுகுயில்கூவியிருந்
தே, கோதுமென்றளிகண்மீதுமிடைந்தேகூடுதண்பொழிலினூ
டுமகிழ்ந்தே, யேதமின்றிவளருஞ்சிறைவண்டேயீசர்தென்மயிலை
நேசமெலிந்தே, சீதவார்குழலபசந்தனளென்றேசென்றுகண்டு
தொழுவென்னுரையின்றே. (48)

மதங்கி - அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இலங்கையர சிருபதுதோ ணெரிதர வன்றடர்த்த மயிலேசன் றாய
வலங்கெழுசீர் புகழ்பாடி வளமறுகில் விளையாடு மதங்கியாரே
துலங்குமுக வசிகரங்கண் டெமதாவி யுதைத்தனதோ டிச்சோரா தேநீர்
கலங்கவசிகர மெடுத்துக் காட்டி வருகின்றதென்ன கணக்குத்தானே. (49)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

குண்டலந்திகழ்ந்தசைந்து மின்றிலங்கு காதனார்
கூறுமவேதகீதனார் குளிர்ந்தபற்பபாதனார்
வண்டலம்பு கொன்றைமாலை பின்னைகொண்ட செஞ்சடை
மயிலைநாதர் செயனிகழ்த்தென் மயலடர்ந்து கூறுவீர்
கண்டலந்துறைக்கணின் றிரங்குகின்ற வன்றில்காள்
கழியினமீ னருந்துகின்ற குருகுகாள் விழுமுகை
விண்டலர்ந்த பங்கயப்பொ குட்டிருந்த புள்ளுவாய்
மிளிர்பசும்பொ னொளிதழைந்து மின்னுதூவியன்ன (50)

வலைச்சியார் - அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வயலேறுசெழுந்தளிர்கள் விரிபொழில்சூழ் திருமயிலைப்
புயலேறுகருங்கூந்தற் புன்முறுவல் வலைச்சியரே புகலுங்கள் யாவும்
மயலேறநடந்துவந்து மணிமாடவீதியிற்கண் வலைவைவீசி
கயலேறுகழியிருக்க வாவியின்மீன் பிடிக்கவந்த தழகிதாமே. (51)

நேரிசைவெண்பா.

ஏதுமொழியாமலெடுத்தேந்துகால் வந்தபோற்
காதிவரும்விடத்தைக் கண்டஞ்சி - மேவத்தெருண்டு
விண்ணோரலறியடைந்து வெண்டலைபோலமேவுற்றதப்ப
முண்டோன் மயிலையுறை. (52)

கட்டளைக்கலித்துறை.

உரைந்தேகிடக்குமயனமான மகுடமுறைத்துறைத்துக்
கரைந்தேமயிலைப்பெருமானடிதொழு நாலுதரிமேல்
யிரைந்தேகிடக்குங் களுழுமவந்தோன் னராவம்படா
விலைந்தேகிடந்தவிடத் திமிராந்தின் வெண்மதியே. (53)

ஆய்ச்சியார் - அறுசீர்க்கழிநெடிலவிருத்தம்.

ஏவலருமவிழியுமையாளிடப் பாகாமயிலைசெழினன்மூதூ
ரிற், கோவலர்தமமடமயிலேயமுத குடமொன்றெடுத்துக் கொண்டு
போந்தீர், பூவலருங் கருங்குழன்மேற் பொருந்துகுடமவிலையென்
னபுகலவீர்பின்னர், மேவலருமிருகுடமும் விறபீரோற்றிறந்துவி
லைகாட்டுவீரே. (54)

கனவுநிலையுரைத்தல்-கட்டளைக்கலித்துறை.

வினையாழவீடுசெரும்பெருமானவியன்மாமயிலை
யனையாயுறைதற்கரியார்மடியிலணைத்துமுத்தந்
தனையாரமுதமெனத்தந்தனராவிழித்தேன்றனித்தேன்
நினையாதனைநினைந்தேனோமுன்னியெந்நேரமுமே. (55)

கொற்றியார்-அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முரசதிருநெடுவீதிவளர்மயிலாபுரிவேதமுதலவனவாய்ந்த,
ஆரவமலர்த்தொடையான்றன் புகழ்பாடித்துளவமணிகொற்றியா
ரே, வாமதியமுகமீதின்மாலகாட்டிபம்பொனகூட்டிவருநீராமாபி,
லரவசயனமுங்காட்டிற் பள்ளிகொள்ளவாருமெனபோமன்பாயத
தானே. (56)

கட்டளைக்கலித்துறை.

தானவந்திருந்தெனையாட்கொள்ளுநாதன்றயங்குபஞ்ச
தேனவந்திருந்தமொழிபாகன்றென்மயிலைசனெருநு
மானவந்திருந்தகாத்தானடியேன்மனத்திருக்க
வேனவந்திருந்தனையோகமன்றாதனெனவுரைத்தே. (57)

பிச்சியார்-அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏறிடுணற்றடஞ்செஞ்சாலியிலகுத்தண்பணைசூழ்ந்தென்று
நிறைதருமயிலைமூதூர்நெடுநெடுந்தெருவீதியீதிற்
றுறவுகொண்டாடிநின்றுதுணைத்தெழூஉவர்க்கங்காட்ட
வுறவுகொள்பிச்சியாரேயுமையெவர்பிச்சியாரே. (58)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

யாரவராயினுந்தென்மயிலைசன்றனிணையடிபணிவாரேற்
றேவராகுவர்முனிவராகுவர்திசைமுகன்முதலான

மூவராகுவரிவர்ப்பதஞ்சலித்ததென்முடிவினின்புறுவீட்டிற்
போவராகுவராதுவிடுத்தவனியிற்புகுமவழியறியாரே. (59)

கைக்கிளை-கட்டளைக்கலித்துறை.

ஏத்தாதவர்நெஞ்சிலெட்டாதவீசனெம்மானருள்போற்
கூத்தாடுவண்டினங்கூந்தலிற்சிற்றடிக்கோகனகப்
பூத்தாழும்பூவிலவருமிருநோக்குமபுடைபெயரு
மாத்தாருமபொன்னணங்கல்லணமயிலைவளாமுதே. (60)

சித்து-அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம.

அங்கயல்சேர்மலர்வாவிபொங்கர்சூழுமபொன் மயிலாபு
ரியிற்பமபிவாழ்வீர, வங்கமறிதிரைககடலசூழ்புவியின்மீதுவண
மீதுமலைமீது வாசஞ்செய்து, நங்கணமரபிணுக்குரியராகினறநவ
கோடிசித்தா வித்தைநவிலவலலேந, தங்குமிளைப பாயினைமபிடி.
சோதீநதாறருக்குவேம பசியாதமருநதுதானே. (61)

சித்து-நேரிசைவெண்பா

தானேறிச்செலவநதழைககுமயிலாபுரிபி
னானேறினனசிததரேமபபா-வானேறிப
போநதுபளிங்கைபபுகழ்வெள்ளியாககிவைதமேதம்
வாயநதகுளிகைநேராமல. (62)

நேரிசைவெண்பா.

மன்னுமயிலைசனைகைவநதசிததிவலலமையா
லநிலததிறகணடமிருளாக்கிச-செனனிபெலாீ
நீராக்கிக்கண்ணைநெருபபாக்கிபபெணணுருவ
மோர்பாதியாக்கிவைததோமே. (63)

அறுசீரககழிநெடிலடியாசிரியவிருததம.

வைத்ததோரநேசததார்க்குவருமபிறபபதனைமாறறு
நிததனவாழமயிலைமூதூரநிலைபெறுசிததரோமயாம
அத்திபூமபாவைய ரயவநதவதரிததிடவஞ்ஞானறெம
விதனைபோலொன்றுகாழிவேநதாநாடடிடவுமநதோமே. ( )

### ஊசல்-எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காதலுறுதேன்சொரிபூங்கடுக்கைபாடிக்
காராருங்கண்டாவருங்காட்சிபாடி
நாதர்பெருந்தொண்டைவளநாடுபாடி
நற்கனகமலைவளைத்தநலமும்பாடி
நீதிபெறும்வென்றிவிடைக்கொடியும்பாடி
நீடேழ்வாழ்தருமவெண்ணீறுபாடிப்
போதுலவுங்கருங்குழலீராடிரூசல
புகழ்மயிலாபுரிபாடியாடிரூசல (65)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சங்கிலிபொற்சரப்பணிதண முததமாலை
தமனியக் கொங்கையிறறவழ்ந்துதவிழ்ந்தேயாடச்
செங்கையினிலேந்தியபைங்கிளியுமாடச்
செழுமபவளஞசரிகடகந்திகழ்ந்தேயாடப
பொங்கெழிலுற்றதிகமினணிறபொலிந்தேயாடப
புனைநுதலினநுமணிபபொற்சுட்டியாட
வங்கயல்பாய்மலாத்திருவேயாடிரூச
லணிமயிலாபுரிமயிலேயாடிரூசல. (66)

### எணசீாக்கழிநெடிலடியாசிரியவிருத்தம.

ஆலவிழிக்கடை புரளவாடிரூசல
அணிமகரக்குழையசையவாடிரூசல்
பாலொளிமூக்குறறிமினனவாடிரூசல
பதுமமலா முகமவெயர்பபவாடிரூசல
ஒலிநூபுரமவிளங்கவாடிரூச
லொளிர்கோலச்சிலமபொலிபபவாடிரூசல
ஏலநறுங்குழலிலங்கவாடிரூச
லெழினமயிலையிளங்குயிலேயாடிரூசல. (67)

### கட்டளைக்கலிப்பா.

சகலவேதமளித்தவனைநதுழாய் தனையணிநது களிதத
வன்றன்மனத்,தகலகின்றிடுமையனைப்பொய்கைசூழணிகொடண
மயிலாபுரிமெய்யனைப், புகலமேன்மைதருந்தருமங்களிறபுநதிசெ
ல்லபபணிததிடுமவெங்கதிாப், பகலைநோக்கியதணபணிபோலவே
பாவநீககிப பலிகுமெயஞ்ஞானமே. (68)

குறம்-அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குகற்குமகட்கொடுத்தகுலக்குறத்திநானம்மேயென்றன்குறிதப் பாது, முகக்குறியிடைக் கணமிகத்துடிக்குதுனக்கதுவன்றிமுறத் தேவைத்துப, பகுத்திடுநற்சுளகுதனிலொறறைபட்டுவருகுதிதை படாராய்நானே, மகுத்துவங் கொண்டிருந்த திருமயிலேசருண வா சலவரக்காணபாயே. (69)

சந்தத்தாழிசை.

பாலனுக்கிரங்கியென்றுபசசிர த்தமொழுகிடும
பற்கறிததெழுந்தனறபொறிபறக்கவநதுறுங்
காலனைக்கவிழந்துகுபபுறக்கிடக்கவெமபிய
கஞசநாணமலாபபதங்கருத்துணிறகவருள்செய்யீர்
ஆலிருநதுநாலவருக்கரும்பொருளபகாநதிடு
மையரேசெய்மெய்யரேவெவ்வனவி ...
சேலலமபுவாவியோடைசெழுமலா த்தரு...
டி சைவிளஙகுமயிலைமனறமிசைவிளங

களி-அறுசீர்க்கழிநெடிலடியாசிரியம்.

வரியரவமகிழ்நதணிபுமயிலேசனகளியேம்யாமடத்துளே னீர், புரிசிவபூசனையிபறறும பேரதெலலாஙகளளினரேடிகலவீரு ங்க, டிருமனையாரவிழியிரணடிங்கெணடையனரே சாரயநதீண் டிடாரோ, வுரிமையுயிர பெறுஞ்சைவருண விட்டாறபிழைபாரோ வுலகினமாதே. (71)

கட்டளைக்கலித்துறை.

உருதரங்காணிதுபோகுமுனமேனலனுறுதிபெற
வருதரங்காநதிருழமயிலேசனைவாழ்ந்துநெஞ்சே
கிருதரஙகாருடலபோலுமவினைகளாநதனக்குக்
கருதரஙகாணிதினீவரமாகக்கடிநதிடுமே. (72)

அடிமடக்கு-எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம.

கருத்தினைக்கருத்தைக்கவாநதனைகவற்சிகண்டனை கண் டனைவிழித்தே, யெரிததனையெரிவைததிருநதனையிருநதாரெய்தி

னையெய்திலாதவரைச, சிரித்தனைசிரிகதத்திருநதலன்றிருந்தச்செ
ய்தனைசெய்யவெங்கதிர்சூழ், வருததனைவருமபொனமயிலையினைம
யிலையின்கணாமயிலைவாழநதனையே. (73)

கடைமடக்கு-அறுசீரககழிநெடிலாசிரியவிருத்தம.

† தனிநணபுறுநாவாசனே தரிககுங்களபவாசனே
தறுகணணுழுவைவாசனே தயஙகுநதிரிபுரவாசனே
புனிதநிலைமிஞசகளமேபொருநதிடுவனஞசகளமே
புகழ்பெறறனநஞசகளமே போக்குமனவஞசகளமே
நினையினவருமெககாலுமே நீஙகிபிடுமெககாலுமே
நிலவுமதியஙகாலுமே நிகாக்குங்கமலஙகாலுமே
யினையினமகவுமபிலையேயெறியெடுக்கு மயிலையே
* * * * * * * * * யிருககுமூருமயிலையே. (74)

இடைமடககு-நேரிசைவெணபா.

இருணமயக்கமெலலாமறறிமமாயவாழ்க்கைப
பொருளபயபபதுணடோபுகலவீர-அருளபயககு
மாதிடததான மாதிடததாளவாழ்மயிலைமாமணியென
றேறுதிடததானபோதுமொளி (75)

எழுசீரக்கழிநெடிலடியாசிரியவிருத்தம.

ஒளியுருவநதனைபபடைத்தமயிலைநாதருபயசரணாவிநதமோ
தியோாநது, தெளியுருவநதாமபோகுமுனனேசொனனேனறென
றிசையோனவநதிடுவானறேமபிக்கணணிற, றுளியருவிவீழவழுதி
டிஞுஙகேளானதொடுவானகைசசூலவிமையிடுவாளசூழநதே,யளி
யுருகுதிருதநெஞசேதஞசமாமெனறுசிபபாயணிமலராற பூசிபபா
யே. (76)

உலா-நேரிசைவெணபா

பூசித்திருக்குநருமபூமலருமேடவிழத்து
வாசிததிருககுமயிலையே-நேசித்தே
யமபெருமானறனனையழகுபெறபபிடித்த
வெம்பெருமானசேருமிடம. (77)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சோந்தபராசத்தியருட்கருணைதோன்றத்திருந்துகுடிலையி
னூதஞ்செழித்துத்தோன்றத், தோயந்திடுயிந்துவிறசாதாக்கியந்தா
னமேன்றத்துலங்குசுத்தவித்தைமயேச்சுரத்திறமேன்ற,வாய்ந்த
சுத்தமாயையுடன் சுத்தந்தோன்றவவைகலந்தபிரவஞ்சமனைத்து
ந்தோன்ற, வாய்ந்தபராஞ்சுடர்தோன்றும்பொழுதுகூடவந்துதோ
ன்றியதுதிருமயிலைமூதூர். (78)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தூயவெண்டிருநீற்றிஞனெற்றியானசுடர்செய்வெண்மதிவேணி
யையனவையமீன்றருளுமையவளொடுமொந்தினிதுறைகோயில
செய்யலாந்தசெந்தாமரைமலரெனசசிறையளிதிரண்டோடி
மையிலங்குகண்மாதர்வாண்முகமபயினமயிலைமாநகர்தானே. (79)

### நேரிசைவெண்பா.

தாதவிழ்பூங்கொன்றையணிதன்மையனைத...
நாதனையெண்கண்மணிமைநோவார்-வோதுகி
ருண்ணிணைந்திரலலீருழுமோப்பகதிதா
ரெண்ணிணைந்தீர மண்ணிலிருந்து. (80)

### மறம்-எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

துன்னிமிளிர்வையடவங்களுடன்போர்செய்து
தொலலரசரொருகோடிசூழ்ந்தாவிண்மேல
மன்னர்திருமுகங்கொண்டுவந்ததூதா
மறவாதமகக்குறவுமுண்டோமயிலைமீதி
லென்னமதியாயவந்தாயதூதனென்று
மெண்ணூர்களிவாக்கிணைபாரிதனைக்கேட்டாற்
கன்னிதனைமணமபேசநாக்குழங்குங்
கைதனையுமிக்கண்மேகொய்வர்மெய்யே. (81)

### கைக்கிளை-மருட்பா.

வனசமலரடியுமவையகத்திற்றோயும்
கனகமணிப்பூணுங்கவினு-மினதாற்
றெருளுதிமயிலையிற்றெய்வமாதல்லள்
மருவளாகூந்தலித்திருநெடுந்தலே. (82)

கட்டளைக்கலித்துறை.

திருக்குதலைக்கண்டசரந்தரித்தசிவன்விழியாற்
கருக்குதலைக்கண்டகாமனெனக்கண்கலங்கிநின்று
வருக்குதலைக்கண்டர்சூழ்மயிலைச்சாமனமிரங்கா
ருக்குதலைக்கண்டதினியாரெனக்கொலாற்றுவளே. (83)

காக்காலம்-எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏலநறுங்குழலிரதிமாரனோபோர்செய
திட்டவதிர்ந்துகடன்முழவமீட்டுங்காலம்
கோலமயில்சிறைகைவிரித்தாட்டுங்காலம்
குயில்களித்துக்கூவாதுவாட்டுங்காலம்
ஆலவிழிசொரியருவிமாறியோடி
யாடவரைத்தேடிமனநாட்டுங்காலம்
காலகபாலீசரவர்க்காணுவென்னைக்
கண்டுநின்றுகொண்டலப்பயங்காட்டுங்காலம். (84)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காரளிகள்பண்களித்துப்பாடுங்காலங்கதிர்மணிப்பொன்னூசல்விளையாடுங்காலம், வீரவிரிவுறவுளத்திஞுடுங்காலம் விரகமட்டுவாரக்குவந்து கூடுங்காலம், ஆர்தமிழ்மயிலைச்சர் சூடுங்காலமணிமுகைகள்வீழ்ந்துமணநீடுங்கால, மாரனமலர்க்கணைசொரிந்துபொழியுங்காலம்வசந்தக்காலம்மஞ்ஞையாடுங்காலம். (85)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியச் சந்தவிருத்தம்.

பருத்ததாரித்தேசுழித்தேறியந்தண்மதித்தோணிசாடொணபுனற்கூடினு, ரிருப்பாரவிருப்பாய்மயிற்பூசைகொண்டேயிவட்சோகலாரெனப்பொறுப்பாளசொல்லீர், திருத்தாமரைப்போதென்னைக்காணினின்பஞ்செழித்தாருநீள்கண்பசப்பூரவே, கருத்தானினைத்தானொருப்பாரியெனப்பெண்கனிக்காலமாமவெண்பனிக்காலமே.

நேரிசையாசிரியப்பா.

காமர்பூங்கமலமாமலர்ப்பொகுட்டிற
பொன்னிறத்தூவியன்னமவீற்றிருக்கும்
வாவிசூழ்மயிலையிற்காவியங்கருங்கட்
கற்பகக்கொடியுடன்பொற்புறவிருந்த

மணிப்பிணைபபணியாடபிணிமனத்தூன
பண்டருமழலைவண்டினமட்புலமப
மங்குலுற்றெழுந்தபொங்கர்க்கடோறுங்
கொடுஞ்சிறைக்குருகினமொடுங்கினவிருப்பத்
தெறுங்கனறபொறியிறகுறுந்துளிபிலிற்றி
நறுந்தண்வாடைவரூஉங்
கொங்கவிழகூந்தறகென்கொலாமினிமே. (87)

சந்ததாழிசை.

ஏடவிழ்ந்துவிளரிவண்டினங்களிந்துபாடமுன
னிலகுகினறபைந்தருக்களிணர்கரிந்துசொரிந்தலா
லோடிவந்துநீர்சொரிந்துபோதலர்ந்ததோவெனு
வொளிவளைக்கைமின்னனார்களுனனிமனனுமயிலையிற்
றேடவிழ்ந்தமலலிகைச்சரமபுனைந்துமாணமதந்
தோய்ந்துதண்ணருமபனீர்கடொடடளை-
லாடவர்பபுணர்ந்துமுத்தமிட்டணைத்திருக்க
மயிலிருக்கும்விழியினாரைவெயிலுருககுக

கட்டளைக்கலித்துறை.

காப்பிட்டபிள்ளைக்கறிக்கிச்சைப்படுவைகைக்க....மயமா
மாபபிட்டுகந்தமயிலைசர்ரமலையானவுமமைக்
கூபபிட்டுநின்றுகுனிந்தொருகோலககொமபாறறடவிப
பூபபிட்டகண்ணிசசயமாயினனலைமபபயலவண்ணனே (89)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம.

வண்ணம்பசந்தாளெனுமவார்த்தைவழங்காய்தேனேவறிதுமன
முண்ணமறந்தாளெனவுண்ணின்றுருகுமனமேயுரையாயோ
கண்ணனயனுந்தேடியின்றுங்காணவரியனுயக்கயற்கட்
பெண்ணுக்களியனுபமயிலைபிரியாதிருக்குமபிரானுறகே. (90)

சந்த விருத்தம.

† ஆரிதழித்தொடையார்காரிதழிதொடையா
ரைங்கணைவேள்செருவென்றிங்கணையார்குருகே
பாருவரிக்கயலைபாயுமவரிக்கயலை
பரிவிலுறங்கிலமேபரியதிமிங்கிலமே

வாருதித்திரையேவந் திலகித்திரையே
மயிலையிலமயப்புயமேநீ நறைபுட்குலமே * * * * *
நோக்கதிருட்குலமேநின் நிலகித்திலமே * * * * *
* * * * * * * * * * *
நீள்பொழில்சூழலரேநீந்தரியாளலரே. (91)

கட்டளைக்கலித்துறை.

ஆசித்திருக்குமறிவரியானஞ்சிறையளிகண்
மூசித்திருக்கும்பொழில்சூழ்மயிலைமுதலவனருள்
பேசித்திருக்குமொழித்திடலாம்பெரும்புவிக்க
ணேசித்திருக்குமுடலேசதமென்றுநீரகிதமே. (92)

தழை-கட்டளைக்கலித்துறை.

மேடைக்குணமாமயினின்றாடக்கண்டவாமெல்லியலாம்
பேடைக்குயிலுக்கருணமயிலேசனைபபெட்புறுகின்
றோடைக்குமேற்குமணங்கோகமையெடுததேயருநதுங்
கோடைக்குமாரிக்குமேமருநதாமிக்குளிதழையே. (93)

நேரிசையாசிரியப்பா.

தழைசெவிபபுகாமுகத்தறுகட்சிறுகவுட்
கைம்மாவினைதெரீஇச்செமமாநதிருநத
கழைபுதாததுறுகனன்முழைக்கணினறெழுந்து
வாலுகிாமடங்கலசாலவநதியஙகும
முளிபடுகானதொளிவேலேநதிக்
கடுவாரதுவழியடாபுனனீகதிப
பொன்மதிலுடுத்ததென்மயிலேசனை
நோனார்மனமபுரைபாறைட்கங்குலி
னையநீவருதியாயிற்
பொய்படுமருங்குலுய்வதோவரிதே. (94)

சந்தத்தாழிசை.

வீட்டாடவிருகண்மீதுமயிலைநாடவறிவிலே
யாடநெஞ்சிலவநதடைநதுகாசயோடவே
கிலேதளாந்துசரணமோடமுரணறுங்
வருமுணங்கடைக்கணேடவருள்செய்வீர
ஙகடந்தசேடனேடவுநதியிற

செனித்தவேதனோடவஞ்சிறைப்புளோடவெருவியே
துநவனொடொணுதெழுந்துதுளபமாயனோடவே
துரத்திமேயாடுநஞ்சமுண்டதூபகந்தரத்தரே. (95)

இரங்கல்-தாழிசை.

கந்தரங்கந்தனையணைந்து முத்தாடியகிழ்பெருமான்கதிர்வெ
ணடியங்க, ஞந்தரங்கத்திருமணிந்துகந்தபிரானடிகாணுதுலைந்தேதே
டி, வந்தரங்கதிருந்தநிருமாலவனங்குந்திலாங்கமயிலைபனடப, நந்
தாயங்குறுந்தனராலாறறுவளோபுணமாலைநணங்குநதாமனே. (96)

சம்பிரதம-பதினொருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கைவிட்டுவிடவொருலகமதகழ்ந்து வாரகடலின்றிறபோ
டுவனெடுங் - கனகமாலவரைபோடுகயிலைமாலவரையுங் கரந்தி
டையெடுத்தாட்டுவன,பொய்விட்டபேருறை
கோளமுமபேதிப்பனிப - புலவுநாறுவரியுந்தெ
டுகவினிது விதைதயலவே, மைவிட்டிாதகட
வாசமபுரிந்துபிரியா-வளமருவுமாடமாளிகை
மயிலைமாநகரின்மீது, மெயவிட்டபோதமமை
தமெயபபொருளதாகினறு- மேவிவளரானந்தவடிவா யிருந்தரு
ளுமவிமலாபதமடைவிப்பனே. (97)

தலைவனகார்முந்துறுதலகணடு கூறல-

கட்டளைக்கலித்துறை.

பன்னுகமபூண்டபாம்மயிலைசன்பரிந்துறையும்
புனனுகசசோலைபபுதுமலாநோக்கிபபொனபூத்திருந்து
தன்னுணிறையொடுகெற்புடைமாதர்தனியிடத்தின
முனனுகடபோதலகனவாவுக்கொனறுமுறைமையனறே.

தூது நிலைமண்டிலவாசிரியப்பா.

மையரிமதர்க்கட்செய்யவ
திருந்தமபுரியபபொ
பொனமதிலு
கொரு

னொண்ணாரூயிர்க்குங்கண்ணொண்விருந்தே
யிடக்கண்களைந்துகொடுக்குமின்னருளெனத்
தனசெயலவிரித்துவஞ்சனைபுகன்ற
ஐயனின்னருளுமைமெய்யெனவிருந்து
கைவளையிழந்தனைதபனுதெனத்
திருச்செவிகுரைத்தியாலவரிச்சிறைப்பனமே (99)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாரியாருமலர்ச்சோலைவளர்மயிலாபுரியானைவருமாதங்க, வூரி
யானையோர்குகபாலீசனெனுந்தெள்ளமுதையுள்ளத்தோர்கால,
மரியாது போற்றினார்தாஞ்சிவஞானமேபெறுவர் செகத்தினமீது,
ரியாதுபூமகளுநாமகளும்பணிற்றிருக்கப்பெறுவர்மே. (100)

வாழி.

வாழிநான்மறைகள்போற்றவளர்கபாலீசர்வாழி
காழியார்கமுதமூட்டுங் கற்பகவல்லிவாழி
ஆழிசூழுலகமவாழியறமுடையார்கள்வாழி
கேழிளர்தருமச்செங்கோலிளர்புவியகத்துவாழி.

திருமயிலைக்கலம்பகம் முற்றுப்பெற்றது.

ஸ்ரீமெய்கண்டதேசிகர் திருவடிவாழ்க.

| பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௫௫ | ௧௦ | உறைதற்கரியார் | உரைத்தற்கரியார் |
| ௭௦ | ௧௪ | செய்மெய்யா | செம்மெய்யர், |

† இக்குறியுள்ள ௭௪-௧௧ ஆம்பாட்டுகளிற் சில சீர்களிறந்து விட்டன; கிடைத்தபடியே அச்சிட்டேன். இ-ச.

ாடவிரு
யாடநெஞ்சம்
திலைதளர்ந்துசரண
அருமுனங்கடைக்கண்டு
ங்கடந்தசேடனோடவுந்தியிற

# நாரதர் கலகம்

## மூன்றாம் பாகம்.

இது

சிறுமணவூர் - முனிசாமி முதலியார்

அவர்கள் இயற்றியது

...KSHANDAR...

இரண்டாம் பதிப்பு 1500-காபி

[illegible]

விலை அணா 6

1913

சென்னை

[illegible]

முனிசாமி முதலியார் அண்டு ஸன்ஸ்

[illegible]

சிவகாமி விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கடவுள் துணை.

# நாரதர் கலகம்

## மூன்றாம் பாகம்.

### 1. நாரதர் பூர்வ பிறப்பும் சாபமும்

நடந்தேறிய நான்குயுகமாக நாரதர் நாரதர் என்று புகழ்ப் பெற்றுவரும் நாரதமாமுனிக்கு கடந்த மகாப்பிரளயத்திற்கு முந்திய மகா கற்பத்தில் இவருக்கு நாரதரென்கிற பெயரேகிடை யாது. சென்றிருந்த இருபத்தெட்டு சதுர்யுகங்களுக்கு முந்தி சாமவேதத்தில் கூறப்பட்ட வல்லமையென்று அறியப்பட்டிய ஆயிரத் தெட்டு அண்டங்களிலும் பரவியிருந்த பிரமத்தை மோகித்து லய மாகத்தக்க வீணாகானத்திற் சிறந்த உபமினென்னும் கந்தருவனுக் குப் புத்திரனாய்ப்பிறந்து உபவர்க்கனென்னும் திருநாமமுடைய வராய் ஐயாயிரத்து நானூறாயிரம் இராக தாள இயலிசை யில் மிகச்சிறந்தவரென்று எல்லாத் தலத்திலும், எல்லாயாகத்தி லும், எல்லாச் சுபகாரியத்திலும் வீணாகானத்தில் ஒப்பாரில்லை யென்று சொல்பவர்களால் எப்பாரிலும் கீர்த்திபெற்று வருகின்ற அக்காலத்திலே, பிரமசிரேஷ்டனென்னும் ஒரு பிராமணர்செய்த யாகத்திற் போயிருந்து இவர் செய்த சாமகானத்து இயலிசை யின் குயிலோசையை உள்ளபடி இசைக்கின்ற குயிற்போடு கவ

னித்திருந்த மகா சுந்தரம்பொருந்திய ஒரு பிராமணக் கன்னிகையை வசியஞ்செய்து அவளைப்புணர்ந்து போயினன். இவைகளை விழிகோசகனாலும் மனோசுகனாலும் உணர்ந்திருந்த பிரமசிரேஷ்டனென்னும் பிராமணனானவர் சினந்தெழுந்து விழி நெரித்து உறுத்துப்பார்த்து அடா உபவருகனா! நில்லு நில்லு காலெடாதே! உன் குலமென்ன? உன்தொழிலென்ன? இப்போர்க்கொத்த மாயாகசமுகத்திலே பிராமணக்கன்னிகையை சுறப்பிக்கத் துணிந்தாயல்லவா? பாபீ! காககாக்ஷவப்பிரஷ்டா! சங்கிரம பிரதாவே! (அடாது செய்தவன் படாது படுவன்) என்று கேட்டிலையோ? மோனமாயனே! சாம்வசியா! சனிகையைப்போன்ற மவுலியும், பிறையைப்போன்ற நெற்றியும், வில்லைப்போன்ற புருவமும், முலைகளைப்போன்ற பாருவும், வெயிலைப்போன்ற பாலையும், ஆகாயவீதியிற் செல்லும்படியான விமானமென்றதும் உன்னையாளனே [illegible] இழந்துபோகக்கடவை! இதோ சாபங் கொடுக்கிறேன் [illegible] இன்றோடு உன்னுடைய அழகும் அதிகாரமும் மாய்ந்துபோனது இறுமாப்பும் இப்பிறவியோடே நாசமடையக்கடவது; நீ சூத்திரகுலத்திற் பிறந்து எக்காலமும் சஞ்சரித்து கட்டையுமில்லாமல் அலையக்கடவாய் ஓடிப்போ [illegible] என்று சபித்தனர்.

வேறொரு பிராமணத்தபசியார் கொடுத்தசாபத்தை தலைமேற்கொண்டு மேனமும் ஜாலாசியை நிந்தித்திருந்த உபவருகனென்னும் காந்தர்வன் பின்னையத்திலும் பிரதியகருப்பத்தில் சூத்திரஸ்திரீக்கு பிறந்தனன். முற்பிறப்பிலிருந்த வினையாலும் முன்பிறவியில் அனுசாரஞ்செய்த பூர்வஜென்மத்தின் புண்ணியவசத்தால் தன்னையறியாதபடி கொண்டமையால் மகா தபசிரேஷ்டனாகி நெடுங்காலம் அரியதவங்களைச்செய்து பிரமமானசபுத்திரனென்னும் ஸ்தானத்தைப்பெற்று பிறந்து தவசியும் கலகப்பிரியனுமாகி தட்சப்பிரஜாபதி பிள்ளைகள் யாவருக்கும் ஞானோபதேசஞ்செய்து சிருஷ்டி தொழிலுக்குப் பிரதிகூலஞ்செய்ததினால் அதுகண்ட தட்சன் கோபித்து முன்ஜென்மத்தில் பிராமணதபசி சபித்ததுபோலவே ஓய்நாரதமுனியே! நீயெக்காலமும் சந்ததியில்லாமல் நில்லாமல் நிலையற்று அலையக்கடவாயென்று சபித்தான். அன்றுமுதல் இவர் திரிலோகமும் செல்பவராகி, தான் காதிற்கேட்டதை பெருக்கி சொல்லாதிருப்ப

தில்லை, தேவசபை ராஜசபை யாகசபை தவச்சாலைமுதலிய வெல்லாவிடங்களிலும் தடையின்றி செல்லுமவரத்தினனுகி ஒருசபையிற்பேசிய விரகசியத்தைப் பலசபையிலும பலசபைகளிற பேசியதை ஒருசபையிலும் தேவலோகத்திறபேசியதை அசுரலோகத்திலும அசுரலோகத்திற் பேசியதை தேவலோகத்திலும தவத்தோர் பேசியதை தானவருக்கும சானவா பேசியதை வானவருக்கும் முடிமிட்டு இல்லாத சொல்லெல்லாம கலகைபபோல் திருமித்த தீராபபோரைவிளைக்கவும நாதபோகவும பாயஙகளசொலலவும் வீணையில் ஒப்பாருமில்லாத பாண்டித்தியமுள்ளவரும் நாரதரேயாம். இந்த நாரதமுனிதான ஸ்ரீகிருஷ்ணவதாரத்தை சகுசனுக்குச்சொல்லி கலகமூண்டாக்கினவர் இவர் பிரமமானசபுத்திரனுகபபிறந்தபிறகு நாரதரென்ற பெயாபெறறுறன்றி முந்திய ஜனமம ருத்திரனும மூன்றும ஜனமம காசதருவருமாம்.

நாரதா பூாவ பிறபபும் சாபமும்-முற்றிறறு.

---

## 2. நாரதர் இந்திராணி லக்ஷ்மி பார்வதி சரஸ்வதி இவர்களிடத்தில் செய்தகலகம்.

ஒருநாள் நாரதமகாமுனிவரானவா கொஞ்சம் இருப்புக்கடலை செய்துகொண்டு அதை இந்திராணி இடத்தில கொடுத்து இந்தக்கடலையை வறுத்துக்கொடம்மா என்றுசொனனுர். அதை இந்திராணி வாஙகிபபார்த்துவிட்டு சுவாமி இது இருப்புககடலையலலவோ இது எபபடி வறுபடும் முடியாது எனறு சொல்ல, அதை வாஙகிக்கொணடு சரஸ்வதியிடத்தில் கொண்டுபோய் இந்தக்கடலையை வறுத்துககொடயமா என்றுசொலல, சரஸ்வதிவாங்கிப பார்த்துவிட்டு சுவாமீ இது இருபபுககடலையல்லவோ இது எபபடி வறுபடும முடியாது என்றுசொல்ல, நாரத மகாமுனிவரானவா அந்தக்கடலையை வாஙகிககொண்டு லக்ஷ்மியிடத்தில் கொண்டுபோய் இநதககடலையை வறுத்துககொடம்மா என்று கேட்க லக்ஷ்மி அதை வாங்கிபபார்த்து சுவாமி இது இருப்புக்கடலை யல்லவா இது எப்படிவறுபடும் முடியாது என்றுசொல்ல நாரதர் கடலையைவாங்கிக்கொண்டு பார்வதியிடம்போய் என்னிடத்தில் கொஞ்சம் கடலையிருக்கின்றது இதைவறுத்துக்கொடம்

மா என்று சொல்ல, பார்வதி அந்தக்கடலையை வாங்கிப்பார்த்து இது இருப்புக்கடலையானதால் வறுக்கமுடியாது என்றுசொல்ல, நாரதர் அந்தக்கடலையை வாங்கிக்கொண்டு பூலோகத்திற்குவந்து அத்திரி மகாருஷியினுடைய பத்தினியாகிய அநுசூயையம்மணியிடத்தில் கொண்டுவந்து அம்மணி இந்தக்கடலையை வறுத்துக் கொடுக்க வேண்டும் என்று கொடுத்தார். அந்தக்கடலையை அநுசூயை அம்மன தன்பர்த்தாவை மனதில ஸ்மரித்துக்கொண்டே வாங்கி சட்டியில்போட்டு வறுத்தாள். அந்த அம்மனின் பதிவிரதா மகத்துவத்தினால அந்த இருப்புக்கடலையானது நன்றாய் வறுபட்டது. அதை அந்த அநுசூயை அம்மன கொண்டுவந்து நாரத மகா முனிவரிடத்தில கொடுத்தாள். அவர் அதை வாங்கி ஒவ்வொன்றாய் கொறித்துக்கொண்டே முறையே பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி, இந்திராணி ஆகிய நாலவரிடம்போய் என்தாய்மார்களே அடியேன் கொண்டுவந்த இருப்புக்கடலையை என ஆசைதீர உண்பதற்கு வறுக்கமுடியாதென்று தாங்கள் நாலவரும ஒரேமனதாய என இஷ்டத்தை அபலமாக்கிவிட்டீர்கள் அல்லவா இதோ என இஷ்டத்தைப பூர்த்திசெய்வித்த உத்தமியை என்னென்று புகழுவேன என்றுசொல்ல, சுவாமி இதையார் வறுத்துக் கொடுத்தது என்றனர். அம்மணி பூலோகத்திலிருக்கிற அத்திரிமகா ரிஷியினுடைய பத்தினியாகிய அநுசூயை அம்மன வறுத்துக்கொடுத்தாள் என்று கூறி மூவரையும முகநாணசசெய்து நாரதமகாமுனிவர் போய்விட்டார்.

லக்ஷ்மி பார்வதி இவர்களிடம் செய்தகலகம் முற்றிற்று.

## 3. நாரதரால் திரிமூர்த்திகள் சிசுக்களானவை.

இவ்வாறு நாரதமுனி செய்த கலகத்தினால் பார்வதிதேவியானவள் நம்மைவிட பதிவிரதா சிரோமணியும் இருக்கின்றாளோ? எனச்சினந்து அவளைக் கறபழித்துவர வேண்டுமென்று தன் நாயகனாகிய பரமசிவனிடத்திற சொல்லினள். இலக்ஷ்மியும் அப்படியே அவளுடைய கற்பைக் கெடுக்கவேண்டுமென்று தன் நாயகனிடத்திற் சொலலி மகாவிஷ்ணுவை அனுப்பினள். சரஸ்வதியும் பிரமனிடத்திற் சொல்லி அவரையும் அனுப்பினள். இவ

ர்கள் மூவரும் தனித்தனியாய்ப் போகும்பொழுது மகாவிஷ்ணும் பரமசிவனும் ஒருவர்க்கொருவர் சந்திக்க மகாவிஷ்ணு பரமசிவனை நோக்கித் தாங்கள் எவ்விடம் போகிறீர் என்று கேட்க, நான் பூலோகத்திலிருக்கிற அத்திரிமகாருஷியினுடைய பத்தினியாகிய அநுசூயை அம்மனுடைய கற்பை யழிக்கப்போகிறேன் என்று சொல்லிவிட்டு, நீர் எங்கேபோகிறீர் என்று மகாவிஷ்ணுவைக் கேட்க நானும் பூலோகத்திலிருக்கிற அத்திரிமகாருஷியினுடைய பத்தினியாகிய அநுசூயை அம்மனுடைய கற்பைக் கலைக்கத்தான் போகிறேன் என்று சொல்லிக்கொண்டு இருவரும் போகும்போது, பிரமனும் அவ்விடத்தில் வந்தார் இந்த இரண்டுபேரும் பிரமனைப்பார்த்து நீர் எங்கேபோகிறீர் என்று கேட்க அவரும் அப்படியேசொல்ல, ஆனால் நாங்களும் அந்த அத்திரி மகாருஷியினுடைய பத்தினியாகிய அநுசூயை அம்மனுடைய கற்பைக் கெடுக்கத்தான் போகிறோம் என்று மூவரும் (தொண்ணூறு) (90) வயதுசென்ற ருஷிகள்போன்ற கபட வேடங்கொண்டு அந்த அம்மனிடத்தில் தள்ளாடித் தள்ளாடிப்போய அம்மணீ எங்களுக்கு மிகவும் பசியாயிருக்கிறது போசனம அன்னம்பாலிக்க வேண்டுமென்று கேட்க மகாபாக்கியமென்று சொல்லி அந்த அநுசூயை அம்மனவள் பதிவிரதா சிரோமணியானதால் பெரியோர்களைச் சுற்றிவந்து நமஸ்காரம் செய்தனள். அப்போது மகாவிஷ்ணுவானவர் அம்மணீ எங்களுக்கு ஒருவிரதமுண்டு அப்படி செய்தால்தான் சாப்பிடுவோம் என்று சொல்ல, அப்படியே செய்கிறேன் அந்தவிரதத்தைச் சொல்லுங்களென்று கேட்க, மகாவிஷ்ணுவானவர் அந்த அநுசூயை அம்மனைப்பார்த்து எங்களுக்கு அன்னமிடும்போது நிர்வாணமாக இருந்து அன்னமிடல் வேண்டும் இதுதான் எங்களுடைய விரதம் என்றனர். ஆனால் நல்லதாகட்டுமென்றுசொல்லி வீட்டிற்குள்போய் அவர்கள் பெரியோர்கள் அல்லவோ ஏதாவது விரதமிருக்கும் என்று நினைத்துக்கொண்டு சேலையைக்களைந்து வைத்துவிட்டு தன்னுடைய கூந்தலை அவிழ்த்து விட்டுவிட்டாள். நீண்ட கூந்தலானபடியினால் பாதம்வரையிலும் மறைத்துக்கொண்டது. அன்னத்தை எடுத்துக்கொண்டுவந்து மூவருக்கும் பரிமாறினாள். அப்போது மகாவிஷ்ணுவின்சூழ்ச்சியால் பெருங்காற்று வீச கூந்தலானது சற்று விலகிற்று உடனே அநுசூயை அம்மனவள் இதேது இவ்விட

த்தில் காற்றடிக்கவேண்டிய காரணம் என்னவென்று தன்னுடைய ஞானதிருஷ்டியினாலே பார்த்து இவர்கள் மூவரும் நம்மைக் சற்பழிக்கவந்த தேவர்கள் என்று தெரிந்துகொண்டு பாலகுடிக்கும் இளங்குழந்தைகளாகச் சபித்துவிட்டு உடனேபோய் தன்னுடைய சேலையை எடுத்து உடுத்திக்கொண்டனள்.

இப்படி இருக்க நாரதரானவர் பார்வதி சரஸ்வதி இலக்ஷுமி இந்த மூன்றுபேர்களிடத்திலும் போய் உங்கள் நாயகர்கள் மூன்றுபேரையும் அந்த அத்திரிமகாருஷியினுடைய பத்தினியாகிய அநுசூயை அம்மன் இளங்குழந்தைகளாகச் சபித்துவிட்டாள் என்று சொல்லவும், அவர்கள் மூவரும் ஒன்றாகூடி அந்த அநுசூயை அம்மனை எப்படி நாம்போய் கேட்பது என்று விடியற்காலையில் வந்து அநுசூயையினுடைய வீட்டுவாசலைப் பெருக்கிவிட்டுப் போய்விடுவார்கள் அநுசூயைஅம்மன் இதேது தினந்தோறும் யாரோவந்து நம்முடைய வேலையைச் செய்துவிட்டு போகிறார்கள் என்று ஒருநாள் காத்திருந்து அவர்களைப்பிடித்து என்னகோரிக்கையைக்கொண்டு நீங்கள் என்னுடைய வேலையைச் செய்துவிட்டுப் போகிறீர்கள் என்றுகேட்க, அம்மணீ இவ்விடத்தில் குழந்தையாகிக் கிடப்பவர்கள் எங்களுடைய நாயகர்கள் ஆசையினாலே எங்களுக்கு முந்தாணிப்பிக்ஷை தாவேண்டுமென்று இரந்து கேட்க அநுசூயை மனமிளகி மூவரையும் குழந்தைவடிவத்தைவிட்டு தேவர்களாகும்படி மாற்றிக்கொடுத்து விட்டுப்போய்விட்டாள் பிறகு அவர்கள் தங்கள் தங்கள் யதாஸ்தானத்துக்குப் போய்விட்டார்கள்.

நாரதரால் திரிமூர்த்திகள் சிசுக்களானவை முற்றிற்று.

## 4. நாரதர் நமனிடஞ் செய்தகலகம்.

ஒருநாள் இராவணன் தசரதமகாராஜனுடைய குலத்திலே பிறந்த யாவர்களிலும் சிறந்த கீர்த்தியுந் தபோமகிமையும் பலமும் சௌரியமும் பொருந்தியிருக்கும் அனரண்ணிய மகாராஜனைப்பார்த்து நீயெனக்குத் தோற்றேனென்று சொல்லுகிறாயா அல்லது யுத்தம்பண்ண வருகிறாயா என்ன சொல்லுகிறாயென்று கேட்டான் அதற்கவர் அவனைப்பார்த்து எங்கள் குலத்

திலுள்ளோ ரொருவரும் ஒருகாலத்திலுங் கேட்டறியாத பொல்லாதவார்த்தை சொன்னாயல்லவா ஆனதால் என்னுடையசேனையும் உன்னுடைய சேனையும் ஒன்றோடொன்று யுத்தம்பண்ணச் செய்து நாமிருவரும் படைத்துணையில்லாமலே தனித்துப் போர்செய்து வல்லமையறிவோமென்றுசொன்னார். அதற்கு இராவணனுஞ் சம்மதித்தான்.

அப்படியே அவர்கள் சேனைகளியாவும் ஒன்றோடொன்று சமுத்திரம்போலக்கலந்து மிகவுங்கொடுமையான யுத்தம்செய்து மடிய, அவர்களிருவரும் ஒருவரோடொருவ ரெதிர்த்து யுத்தம் பண்ணத் தொடங்கும்பொழுது இராவணன் முந்திப் பலபலவிதமாயுள்ள இலக்ஷ பாணங்களை யேககாலத்தில் சர்வருக்ஷமாகப் பொழிந்து அநேகஞ்சேனைகளுமடிய நொருக்கினான். அதுகண்டு அனரண்ணியராஜனு மிராவணனுடைய சரீரமும் விமானமும் எவ்வளவுந் தெரியாமல் மூடும்படி அநேகவித பாணங்களையும் பிரயோகித்து நொருக்கினான் அந்தப்பாணங்களையெல்லாந் தன்னுடைய பாணங்களினாலே அறுத்து விலக்கி விமானத்தை வேகமாக முடுக்கிக்கொண்டு வரும்பொழுது பின்னுமநேக பாணங்களைத்தொடுத்து அனரண்ணியராஜன் பாணமெடாதபடிக்குச் சரீரமுழுதும் ஜல்லடைக் கண்களாகத்துளைத்துத் தாவிப்பாய்ந்து ஒருதண்டாயுதத்தினாலே யடித்தான் அதினாலே சற்றுமூர்ச்சையையடைந்து கிடக்கும் அனரண்ணிய ராஜனைப்பார்த்து நீசெய்தசபதமெங்கே யுன்னுடைய பலமெங்கே நீ செயல்கெட்டு இப்படி விழத்தக்கதாக அடித்து உன்னுடைய சேனைகளெல்லாஞ் சின்னாபின்னப் பட்டழியும்படியாகச்செய்து வெற்றிகொண்ட என்னுடைய திறத்தினைக்கண்டா யல்லவா? நீ யெனக்குத் தோற்றதற்குச் சந்தேகமில்லையே யென்று சிரித்து நிந்தையாக விகழ்ந்து பேசினான்.

அதற்கு அனரண்ணிய ராஜா நீயிப்படியா நினைத்துக்கொண்டிருக்கிறாய், ஜெயமும் அபஜெயமு மெப்படியென்றால் போர்க்களத்திலெதிர் நிற்கமாட்டாமல் முதுகுகொடுத்தோடினவனல்லவோ தோற்றவன். அப்படி யோடாமல் முன்வைத்தகாலைப் பின்வாங்காம லெதிர்த்து யுத்தம் பண்ணிக்கொண் டிருக்கும பொழுதே மூர்ச்சையடைந்த வேளையிலே யென்னை நீதி தப்பிப்

பிழைபேசி யுன்னை நீயேபுகழ்ந்துகொண்டாய் காலகதியை யாவருங் கடக்கமாட்டார்களானாலும் அதர்மம் நிந்தித்தபடியினாலே என்னுடைய குலத்தி லினிமேற்பிறக்குந் தசரத குமாரனாகிய ஸ்ரீராமனுடைய பாணங்களினாலே யுன்னுடையபத்துத்தலைகளும் பனங்காய்போ லறுபட்டு விழக்கடவனென்று சாபங்கொடுத்தனர். அவர் கொடுத்த சாபத்தை யெள்ளளவுமெண்ணாமல் அவ்விடத்தினின்று நீங்கிவரும்பொழுது பின்னுமெதிர்ப்பட்ட அரசர்களெல்லாரையும் கொலைசெய் தழித்தான் அப்படி யநேகமான ராஜாக்களை யழித்தபெருமையினாலும் குபேரனைவென்று நவநிதிச் செல்வத்தையுங் கொள்ளைகொண்டோமென்கிற பெருமிதத்தினாலும் மிகவு மகங்காரத்தை யடைந்தவனாக வருமளவில் அந்த ராவணனுக் கெதிராக நாரதமகாமுனிவர் வந்தார் அவருக்குப சாரவந்தனங்கள் செய்து தேவரீரிங்குவந்த காரியமென்ன வென்றுகேட்க, நாரதமகாமுனிவர் இராவணனைப்பார்த்துத் தனக்கு நிகரில்லாத பலத்தைப்பொருந்திய சிங்கமானது ஒருநரியோடெதிர்த்ததுபோலவும் நீருமுடைய பலசௌரிய பராக்கிரமங்களிலே கோடியிலொரு பங்குக்காகிலும் நிகரில்லாதவர்களாய்ப் பசியினாலும் வியாதியினாலும் மூப்பினாலும் மற்றுமுள்ள அநேகவிதமான துன்பங்களினாலும் மெலிந்து பலங்கெட்டு யமனுடைய ஆஞ்ஞையைக்கடக்க மாட்டாதவர்களாகிய மனிதரைக்கொன்று வெற்றிகொண்டதினாலே யென்னபுகழுண்டாகும். பின்னை யெப்படியென்றால் உலகத்திலே எல்லோருக்கும் பகையா யாவரும் பயந்தொடுங்க, பெற்றவர் முதலாய் பிள்ளைகளுயிரையும் பிரித்துக்கொண்டுபோகிற கொடிய கூற்றுவன் முதலானவர்களை வென்றால் அதினாலே பெருமை யுண்டாகலாம் எனறுசொன்னார். அது கேட்டு நீர் சொன்னபடியே அந்த யமனைவென்று வெற்றிகொள்ளுகிறேனென்று மிகவுமுக்கியமான கோபங்கொண்டான். அப்படி இராவணனுக்கு யமனிடத்திலே கோபமுண்டாக மித்திரபேதஞ்செய்து கலகமுண்டாக்கி நாரதமுனிவர்போயினார். அந்த இராவணனும் அவ்விடத்தினின்று நீங்கி ஆகாசமார்க்கமாக விமானத்தைச் செலுத்திக்கொண்டு யமலோகத்தைத் தேடிப் போனான். இராவணன் யமலோகத்துக்கு வருமுன்னமே நாரத மகாமுனிவர் யமலோகத்துக்கு அதிசீக்கிரமாகப்போய் யமதருமராஜனைக்கண்டார். அவரும் மிகவும் வணக்கத்துடனே அநேக

வுபசாரங்கள் புரிந்து தேவரீரிப்பொழு திவ்விடத்துக் கெழுந்தரு
ளிய காரணமென்னவென்றுகேட்க, அதற்கு நாரதமுனிவர் யம
னைப்பார்த்துப் புலஸ்தியப் பிரமாவினுடைய குலத்திலேபிறந்த
இராவணன் பிரமதேவரிடத்திலும் பரமசிவனிடத்திலும் பெற்ற
வரத்தினாலே யெதிர்ப்பவ ரொருவருமில்லாமல் குபேரனைச் செ
யித்து மற்றுமுள்ள அநேகராஜாக்களையுமழித்து வெற்றிகொண்
டோம். பூலோகத்தி லினி யொருவருமில்லை தேவலோகத்திலே
சகலதேவர்களிலு மதிகமான பலபராக்கிரமம் பொருந்திய யம
னைச் செயித்தோமானால் மற்றுமுள்ள தேவர்களும் பயந்தடங்கி
வணங்குவார்களென்றெண்ணி யும்மைத்தேடி வருகிறோம். அந்த
தவிருத்தாந்தத்தை யுமக்குச்சொல்லவந்தோமென்று சொன்னார்.
அதுகேட்டு யமதர்மராசனும் அதிசயப்பட்டு தேவரீருடையவரு
ளை பொருந்தியிருக்குமென்னை யாவராலு மென்னசெய்யலாகு
மென்று நாரதமுனிவரைப் பார்த்தப்படிச் சொல்லி யுபசரிக்க
அவ்விடம்விட்டுப்போயினார். அந்தச்சமயத்திலே இராவணனா
வன் முன்பு தன்னுடனே யமனையிவ்விதங்களினாலே வெல்லவே
ணுமென்று நாரதர் சொல்லியபடியே அநேக வுபாயதந்திர பல
ங்களைச் செய்துகொண்டு தன்னுடைய பரிவாரசேனைகளுடனே
யமலோகத்திற் பிரவேசித்து வரும்பொழுது பூர்வஜன்மத்திலே
பாபத்துக்கேதுவான ஸ்திரீகளுடைய யோகத்தினாலே காமவிகா
ரத்திலழுந்தாத நல்லமனத்தை யுடையவர்களும், சரீரத்தை நிலை
யென றெண்ணாமல் அழியாத புகழாகிய சரீரத்தை விரும்பிய
புண்ணியத்தையே செய்தோர்களும், அந்தப்புண்ணிய தானங்
களை யேற்றுக்கொண்ட உத்தம புருஷர்களும், பிரமசந்நியாசி
கள் வாசஞ்செய்கிறதற்கு மடங்களும் கிருகஸ்தர் முதலானவர்
களுக்கு இடங்களுமுண்டாக்கிக் கொடுத்தோர்களும், கோடை
காலத்திலே தண்ணீர்ப்பந்தர் வைத்துத் தாகந்தீர்த்தவர்களும்,
பனிக்காலத்திலே குளிருக்கு வஸ்திரங்கொடுத்தோர்களும், இரு
க்குமிட மில்லாதவர்களுக்கு வீடுகொடுத்திருக்கச் செய்தோர்க
ளும்,வியாதிகளைத்தீர்த்துச்சௌக்கியப்படுத்தி வைத்தோர்களும்,
அறியாமையினாலே மூடரானவர்களிகழ்ந்துபேசுங் குற்றங்களை
ப்பொறுத்துக் கொள்ளும் பொறுமையுடைய பெரியோர்களும்,
பிராமணரையும் பசுக்களையு மாபத்துக்காலத்தி லிரக்ஷித்தோர்க
ளும், சுவர்க்கலோக வாசிகளாய்ச் சுவர்ணமயமான மண்டபங்

களிலே வீற்றிருப்பதைப்பார்த்து ஆச்சரியத்தையடைந்தப்புறம் போகும்பொழுதில் உலகத்திலே பொருளுக்காசைப்பட்டு நியாயப்பிழையாக வழக்குத்தீர்த்தவர்களும், பதிவிரதையான தன்னுடைய ஸ்திரீயைவிட்டுப் பரஸ்திரீகளை ஆசைப்பட்டவர்களும, உயிர்களைக்கொன்று தின்னுங்கொலையாளரும, கோட்சொல்லிக் குடிகெடுக்கும வஞ்சகரும் செய்நன்றிமறநதும் விசுவாசபாதகரும், கல்விகளைக்கற்று வல்லமைபொருநதிய அறிவுடைய பெரியோர்களை நிநதைசெய்த மூர்க்கர்களும், பெறறதாய் பசித்திருக்கவுண்ட பெருமபாவிகளும், களஙகமில்லாமல் நம்பியுறவுகொண்ட சிநேகிதனை வஞ்சிதது நடநத கபடர்களும், ஆபத்திலுதவுவானென்று நாள்தோறு மிரக்ஷிதது வைததிருநத ராஜத்துரோகிகளும், கோபததினாலே ஒருவனிடத்தில் வைரமவைத்துக் குடிகெடு செயதகணடகரும, மற்றொருவராலே மனக்கவலை யுற்று வந்தடைநதோரகளுககு ஆதரவுசெய்யாமல் அவாகளைச் சிறியிகழ்ந்த கொடியோர்களும, ஆபததானகாலத்திலே அடைக்கலமென்றடைநதோரகளை கைவிட்ட குணக்கேடரும, எலலோருக்குங் குற்றமபேசி யிகழுசசிசெயதவீணரும, பகுத்தறிவுடைய அரிய மானுடப் பிறப்பிலேபிறநது நல்வினைப்பெற்றிருநதும கடவுளைத் துதிததறியாத பாவிகளும, தெய்வநிநதைசெய்த தீயோர்களும பின்னும் பற்பலவிதமாயுளள பாவஙகளைசசெய்த கொடியோர்களும், உதிரமூநதசையும ஊளையும் வழும்பும் இநதிரியமுமாகச் சேறுபட்டுக் குழமபி நிறைநதிருக்கும கோரநரகங்களிலே நாவிலுஞ் சரீரத்திலும் புழுககள்சொரிய நெடுங்காலம் அழுந்தித் துன்பபபட்டுக் கிடப்பதைபபாரதது, நீஙகளெல்லோரும் யமனுக்கு பயப்படாமல் நரகததைவிட்டுக் கரையேறிப் போவீர்களென்று உத்தரவுசெய்தான் அவர்களும் இந்தப்புண்ணியவானாலே நாமெலலோரும் தபபிப்பிழைநதோமென்று அநதநரகங்களைவிட்டு நீங்கிப்போக, அதுகணடு அநதநரகங்களுக்குக் காவலாகவிருநத அநேகசேனைகள் நம்முடையவுலகததிலே யிப்படிக்குக் கட்டளை கடந்து வருகின்றவ னெவனோ எனறுரவாரிதது இடிபோலமுழங்கி யெதிர்க்கும்பொழுது இராவணனுங்கோபித்து மகோதரன் தூம்ராக்ஷன் மாரீசன் முதலானவர்களுடனேவநதெதிர்த்து ஆயுதபாணங்களினாலே யனேகஞ் சேனைகள் சிதைபட்டழியத் தாக்கும்பொழுது, அந்த யமனுடையசேனைகள் ஒருமித்துத்திரண்டு

இராவணனுடைய சரீரமுழுதும் உதிரமொழுகும்படி மோதியடி
த்தார்கள். அப்பொழுது அந்த விராவணனும் மிகவும் உக்கிரமா
னகோபங்கொண்டு பரமசிவன் திரிபுரத்தை யெரித்ததுபோல
அந்தயமன் சேனைமுழுதும் நீறாகும்படி கருச சிவாஸ்திரத்தைப்
பிரயோகம்பண்ணியழித்து வெற்றிகொண்டு ஆரவாரத்துடனே
அவ்விடத்தினின்று மேற்சென்றான்.

அதுகண்டு யமதருமராஜன் சங்காரகால வுருத்திரன்போல
உக்கிரகோபங்கொண்டு தண்டபாசமுதலான ஆயுதங்களேந்திக்
காலன்முதலான மந்திரி பரிவாரங்களும் அளவில்லாத சேனைக
ளும் முன்னே நடக்கவந்து அதிதகமாத்திரத்திலே இராவணன
சேனையும் யமன்சேனையுங் கடலுங்கடலுங் கலந்தாற்போல ஒன்
றோடொன்று கலந்து நெருங்கிப் போராமூண்டு அநேக சேனைகள்
மடியும்படி யுத்தம்பண்ண, இராவணனும் யமதருமராஜனும் எதி
ர்த்துக்கொண்டார்கள். அப்பொழுது யமதருமராஜன் முந்திச்
சூலம் வேலாட்டியாகிய மூன்றாயுதங்களை யேககாலத்திலே புறங்
கொண்டெறிந்து இராவணன் மார்பைப்பிளந்தான். இராவண
னுமதற் கெவ்வளவுஞ் சலியாமல் உடனே அக்கினிமயமான
அநேக பாணங்களைப் பிரயோகம்பண்ணி யமதருமராஜனுடைய
சரீரமுழுதுந் தட்டுருவும்படித் தொளைத்தான். அதற்கு யமதரு
மராஜன் சற்றுமசையாமற் பின்னுமநேக வாயுதங்களைப் பிரயோ
கம்பண்ணி யடித்தான்

அப்படியே இராவணனுமடித்தான். அப்படியே பின்னும்
பின்னு மொருவருக்கொருவரிளையாமல் அகோராத்திரமாக ஏழு
நாளோயாமல் மிகவுங் கொடுமையாகத் தொந்தயுத்தஞ்செய்துக்
கொண்டிருக்குமளவில் யமதருமராஜன் இராவணன்செய்கிற குரூ
ரத்தைப்பார்த்து இனிமேலிவனுடைய பிராணனை நம்முடைய
தண்டாயுதத்துக்கு இரையாகக் கொடுக்கவேணுமென்று நினை
ந்து சகல லோகங்களும் நிலைகலங் ததிரவுந் தேவர்கள் முனிவர்
களெல்லோரும் பயந்து நடுங்கவும் உலகத்திலுள்ள சகல பிரா
ணிகளுடைய உயிர்களையெல்லா மொருநிமிஷத்திலே வாங்கத்
தக்க பலபராக்கிரம சத்திபொருந்திய அந்தக் காலதண்டத்தை
கையிலே யெடுத்தான்.

அதுகண்டு பிரமதேவரானவ ரிந்தக் காலதண்டத்தை விட்
டானேயாகில் நம்மாலே சிருஷ்டிக்கப்பட்ட உலகங்களெல்லாமிப்

பொழுதே யெதிர்த்துப்போகுமென் றெண்ணி யதிசீக்கிரமாக யமனுக்கெதிரே வந்து அவரைப்பார்த்துக் கேளும்யமதருமராஜனே! இந்த உலகத்திலே தனக்கு நிகரில்லாத பராக்கிரமம்பொருந்திய பலவானொருவனைப்பார்த்து இவனெதிர்த்தவனை யமனைப்போலக் கொல்லத்தக்கவனென்று உவமானமாகச் சொல்லுவதேயன்றி இவன் யமனுடனே யெதிர்த்துப் போர்செய்தவனென் றொருவனையுஞ் சொல்லக் கேட்டறியோம் நீரோ தருமராசா அவனோ தருமங்கெட்ட துஷ்டன். அன்றியும் பரமசிவனிடத்தில் அளவில்லாத வரங்கள் பெற்றிருக்கிறான் ஆதலாலிவனை யும்முடைய தண்டமொன்றுஞ் செய்யமாட்டாது. நீருக்குத் தண்டத்தைப் பிரயோகம்பண்ணி யபசயப்படவேண்டாமென் றிப்படி யநுகூலமாகப் பிரமதேவர் சொல்லிய வார்த்தையைக்கேட்டு நன்மையேயென்று நினைந்து கோபத்தையடக்கிக் கையிலே ஆயுதமெடாமல் நின்றான். அதுகண்டு இராவணன் யமதருமராஜன் தோற்றுப்போனானென்று வெற்றிபேசிக்கொண்டு அந்த யமலோகத்தினின்று அப்புறம் சென்றான்.

நாரதர் நமனிடம் செய்தகலகம் முற்றிற்று.

## 5. நாரதர் ஸ்ரீராமரிடஞ் செய்தகலகம்.

ஸ்ரீராமர் ராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டிருக்குங்காலத்தில் சிலநாள் சென்றபின் ஒருநாள் மிகவும் விருத்தனான ஒரு பிராமணன் இறந்துபோன தன்னுடைய பிள்ளையைக்கொண்டு வந்து ராஜத்துவாரத்திலே போட்டு ஓ ஓய் ராஜனே இந்த வனியாயமுண்டோ நானொரு பாவமுஞ்செய்ததில்லை யுன்னால் செய்யப்பட்ட அதர்மத்தினாலே என்னுடையபிள்ளை யிறந்துபோய் விட்டது, நானுமென்னுடைய ஸ்திரீயு முனக்கெதிரே பிராணனை விடுகிறோம். பிரமஹத்தியாகத்தையு மேற்றுக்கொண்டு நீயேசுகமாயிருப்பாயென் றிப்படி நிந்தித்து முறையிட்டுப் புலம்பித் துக்கப்பட்டான்.

அதுகேட்டு ஸ்ரீராமர் மிகவும் விசனத்தை யடைந்தவராயுடனே வசிஷ்டர் வாமதேவர் கௌதமர் நாரதர் முதலான மகருஷிகளை வரவழைத்து இஃதென்ன காரணத்தாலுண்டானதெ

ன்று கேட்க, அப்பொழுதவர்களில் நாரதமகாமுனிவர் ஸ்ரீராம ரைநோக்கிக் கேளும் மகாராஜனே கிருதயுகத்திலே பாபமேயில் லை பிராமணனுக்குத் தபசுமகிமையுமுண்டு திரேதாயுகத்திலே நாலிலொருபங்கு பாபம் க்ஷத்திரியனுக்குத் தபசுமகிமையுமுண்டு. துவாபரயுகத்திலே இரண்டுபங்குபாபம் வைசியனுக்குத் தபசுமகி மையுமுண்டு கலியுகத்திலே மூன்றுபங்குபாபம் சூத்திரனுக்குத் தபசுமகிமையுமுண்டு. இப்படி யுகதருமமாகையா லிந்தத் திரே தாயுகத்திலே அதருமமாகச் சூத்திரன் தபசு பண்ணுகிறபடியினா லே இந்தப்பிள்ளை யிறந்துபோய்விட்டது. நீரிதை விசாரித்துத் தண்டித்தா லிந்தப்பிள்ளை பிழைக்குமென்று சொன்னார்.

அதுகேட்டுச் சந்தோஷத்தை யடைந்து லக்ஷ்மணனை வர வழைத்து நீயிந்தப் பிராமணனைச் சமாதானப்படுத்தி யிந்தப் பிள்ளைசரீரத்தை யெப்படியாவது காத்து வைத்திருக்கவேணுமே அப்படிச்செய்து வைத்திருப்பாயென்று கட்டளையிட்டு உட னே புஷ்பகவிமானத்தை நினைத்து வரச்செய்து அம்பு வில் வா ளெடுத்துத் தரித்துக்கொண்டு கிரமமாக மேற்கு வடக்கு கிழக்கு மூன்றுதிசைகளிலுந் தேடிப்பார்த்தும் பாபமில்லாதிருப்ப தை யறிந்துகொண்டு தெற்குத்திசையிற் செல்லும்பொழுது சைவலபருவதத்திற்குத் தென்பாரிசத்திலொருமடுவிலே தலை கீழாகத் தபசுபண்ணிக்கொண்டிருக்கிறவனைக் கண்டு நீயார் என் னநிமித்தமிப்படித் தபசுசெய்கிறாயென்று கேட்க அதற்கவன் நான் சூத்திரன் இந்தச்சரீரத்துடனே தேவத்தன்மை யடைவதற் காகத் தவஞ்செய்கிறேனென்று சொன்னமாத்திரத்திலே ஸ்ரீரா மர் வாளாலே சம்புகனைத் தலையறுத்து வெட்டி வதைத்தார்.

அப்பொழு திந்திராதி சகலதேவர்களும் வந்து சந்தோஷப் பட்டு ஸ்ரீராமரைக்கொண்டாடி யுமக்குவேண்டிய வரத்தைக்கே ளுந் தருகிறோமென்றுசொல்ல, அதற்கந்தப் பிராமணபிள்ளை பிழைப்பதே யெனக்கு வேண்டியவரமென்று சொன்னார். தேவ ர்களந்தப்பிள்ளை இப்பொழுதே பிழைத்தானென் றநுக்கிரகித் தப் பின்பு ஆசீர்வாதம் செய்துவிட்டுப்போய்விட்டார்கள். இரா மரும் தன்னரண்மனைக்குப் போய்ச்சேர்ந்தார்.

நாரதர் ஸ்ரீராமரிடம் செய்தகலகம்-முற்றிற்று.

## 6. நாரதர், பிரமதேவர் விஷ்ணு பரமசிவன் மற்றதேவர்களிடத்தில் செய்தகலகம்.

ஓர் ஊரில் ஒரு குயவன் இருந்தான் அவனுக்கு வெகுநாளாய் புத்திரசந்தானமில்லாமல் லக்ஷ்மியைக்கோரி தவஞ்செய்தான். அதை லக்ஷ்மிதேவிகண்டு தன்நாயகராகிய மகாவிஷ்ணுவைப்பார்த்து பூலோகத்தில் ஒரு குயவன் என்னைநோக்கி அகோர தவஞ்செய்கிறான் அவனிடத்திற்குப்போய் வரலாம் என்று சொன்னாள். அதைக்கேட்டு மகாவிஷ்ணுவானவர் லக்ஷ்மியைப் பார்த்து, அந்தக்குயவன் உன்னைக் கோரிதவம்புரிகிறபடியால நான்வந்தால் என்னை அவமதிப்பான் ஆகையினால் நான்வரமாட்டேன் என்று சொன்னதைக்கேட்டு லக்ஷ்மிதேவியானவள் மகாவிஷ்ணுவைப்பார்த்து அவன் தங்களை அவமதிக்கமாட்டான் அப்படி அவன் அவமதித்துப்பேசினால் நான் இருக்கிறேன் வரத்தான் வேண்டுமென்று கூப்பிட்டாள். ஆனால் அப்படியே வருகிறேன் என்று இரண்டுபேரும் கருடவாகனத்தின்மேல் எழுந்தருளி அந்தக்குயவன் தவமிருக்கிற இடத்திற்கு வந்திறங்கினார்கள். உடனே அந்தக்குயவன் மகாவிஷ்ணுவைப்பார்த்து நீயார் காணும் என்று மகாவிஷ்ணுவைக்கேட்டான். அதற்கவர் நான் லக்ஷ்மியினுடைய நாயகனாகிய மகாவிஷ்ணு என்றுசொன்னார். அதற்குக்குயவன் அவரைப்பார்த்து மகாவிஷ்ணுவாய்இருந்தால என்ன யாராய்இருந்தால் எனக்கென்ன நான் மகாலக்ஷ்மியைக் கோரிதவஞ்செய்தேனேயல்லாமல் உம்மைக்கோரி நான் தவஞ் செய்யவில்லை நான் லக்ஷ்மியைச்சுற்றிவந்து நமஸ்காரம் செய்ய வேண்டும் நீஎட்டிப்போம் என்றுசொன்னான். உடனே மகாவிஷ்ணுவானவர் எட்டிப்போய்விட்டார் குயவனானவன் லக்ஷ்மியைச் சுற்றிவந்து நமஸ்காரம்பண்ணினான். லக்ஷ்மிதேவியானவள் குயவனைவாழ்த்தி உனக்கு என்னவரம் வேண்டும் என்று கேட்டதற்குக்குயவன், நான் முப்பத்திரண்டு லக்ஷணமும் குறையாத ஒரு ஆண்புத்திரனைப் பெறவேண்டும் என்று கேட்டான் ஆனால் அப்படியே கொடுத்தேன் என்று சொன்னவுடனே மகாவிஷ்ணுவானவர் லக்ஷ்மியைப்பார்த்து நீ அவனுக்கு வரங்கொடுத்தது சரி அந்தக்குழந்தைபிறந்த பதினாறாம் நாள் இறந்துபோகுமே என்று சொன்னதற்கு குயவன் எப்படியாவது குழந்தை

யை என்கண்ணினால் பார்த்தால் போதும் என்றான். மகாவிஷ்ணு
வும் லக்ஷ்மியும் தங்களுடைய யதாஸ்தானத்துக்குப் போய்விட்
டார்கள்.

பிறகு அந்தக் குயவனுடைய பெண்சாதிக்கு அநேமாதம்
கருப்பமாகி பதனுமாதஞ்சென்று நல்ல முப்பத்திரண்டு லக்ஷண
ங்களும் குறைவில்லாத ஒரு புத்திரனைப்பெற்றாள் அந்தக்குய
வன் புத்திரனைப்பார்த்து சந்தோஷமாயிருக்கும் நாளையில் அந்
தக்குழந்தையானது பதினாறு நாள் இறந்துவிட்டது. குயவன்
பிள்ளை யிறந்துவிட்டதே நான் இருந்து பிரயோஜனம் என்ன
பிள்ளையைக்காட்டிலும் என்னுடைய வுயிர்பெரிதோ என்று
தன் பெண்சாதியை யழைத்து நீ இருக்கிற சொத்தைக்கொ
ண்டு பிழைத்திரு வென்று சொல்லிவிட்டுத் தான் எங்கேயா
வதுபோய் மடிவோமா வென்று கண்களைக் கட்டிக்கொண்டு
வெகுதூரம் போனான். அங்கொரு குளமொன்று இருந்தது
அதில்போய்த் திடீரென்றுவிழுந்தான் விழுந்தவுடனே கண்களை
க்கட்டி யிருந்தகட்டை யவிழ்த்துப் பார்த்தான். அந்தக்குளத்
தில தண்ணீரில்லாமல் கொஞ்சம் தண்ணீரும் ஒரு ஆமையும்
இருந்தது. அவன் அதைப்பார்த்து நீ என்னுடைய தேகத்திலு
ள்ள சதைகளைப் பிடுங்கித் தின்கிறாயா இல்லையாவென்று கேட்ட
தற்கந்த ஆமையானது குயவனைப்பார்த்து நீ என்னைத் தூக்கிக்
கொண்டுபோய் நிரம்பத் தண்ணீரிருக்கிறகுளத்தில கொண்டு
போய்விட்டால் நான் எங்கள் இனத்தார்களை எல்லாம் கூட்டிக்
கொண்டுவந்து உன்னுடைய சதைகளையெல்லாம் பிடுங்கித் தின்
கிறோம் என்றுசொல்ல, அந்தக்குயவனும் சரியென்று சொல்லி
அந்த ஆமையைத்தூக்கிக்கொண்டு வெகுதூரம்போய் தண்ணீ
ரிருக்கிற ஒருபெரிய குளத்திலவிட்டு உன் இனத்தாரையெல்லாம்
கூட்டிவந்து என்னுடைய சதைகளையெல்லாம் பிடுங்கித்தின்கிறீர்
களா என்றுகேட்டதற்கந்த ஆமையானது குயவனைப்பார்த்து
நாங்கள் எங்களுக்கு உபகாரம் பண்ணினவர்களுக்கு அபகாரம்
பண்ணுகிறதில்லை, உனக்கு எப்பொழுதாவது ஆபத்து வந்தால
அப்பொழுது எங்களைநினைத்தால நாங்கள்வந்து உபகாரம் செய்
வோம் என்று சொல்லிவிட்டு அந்த ஆமையானது தண்ணீருக்
குள்போய்விட்டது. பிறகு குயவன் தான் அந்த ஆமையைவெகு
தூரம் தூக்கிக்கொண்டுபோயும் அந்த ஆமை தன்னுடைய சதை

கனிப்பிடுங்கித் தின்னவில்லையென்று விசனத்துடன் இன்னும் எவ்விடத்திலாவதுபோய் படிப்போமென்று மறுபடியும் கண்களைக்கட்டிக்கொண்டு வெகுதூரம் போகும்பொழுது ஒரு பெரிய குளத்தில் விழுந்தான்

அந்தக்குளத்தில்வெகுநாளாய் சில அன்னங்கள்வந்து விளையாடிவிட்டுப்போகிறதைமுழுகம அந்த அன்னங்களை ஒருவேடன் பிடிக்கவேணுமென்று வலைகட்டியிருந்தான். அந்தவலையில் அந்த அன்னங்கள் அகப்பட்டுக்கொண்டன. இந்தக் குயவன் அந்தவலையில்விழுந்தவுடன் கண்களைக்கட்டியிருந்த கட்டையவிழ்த்துப்பார்த்தான் அந்த அன்னங்கள் குயவனைப்பார்த்து எங்களை இந்த வலையிலின்று நீக்கினால் உனக்கு ஆபத்தகாலத்தில் நீ எங்களை நினைத்தால் நாங்களவந்து ஏதாவது உதவிசெய்வோமென்றுசொல்ல, அந்தக்குயவன் அன்னங்களைப்பார்த்து நான் உங்களை இந்த வலையினின்று விடுவிக்கிறேன் நீங்கள் எல்லோரும் சேர்ந்து என்னுடைய தேகத்திலுள்ள சதையைப் பிடுங்கித்தின்கிறதாயிருந்தால் நான் வலையை அவிழ்த்துவிடுகிறேன் என்றுசொல்ல, அதற்கன்னங்கள் இவன் ஏதோ மனம்நொந்ததால் அல்லவோ தன்னைக்கொல்லச்சொல்லுகிறான் என்று ஆனால்அப்படியே உன் தேகத்திலுள்ள சதைகளைப் பிடுங்கித்தின்கிறோம் வலையை அவிழ்த்துவிடுமென்று சொல்ல, குயவன் அந்தவலையினின்று அன்னங்களை விடுவித்தான், உடனே அந்த அன்னங்கள் குபீலென்று ஆகாயத்திலே பறந்து குயவனைப்பார்த்து நாங்கள் எங்களுக்கு உபகாரம்பண்ணினவர்களுக்கு அபகாரம் செய்கிறதில்லை உன் ஆபத்தகாலத்தில் எங்களை நினைத்தால் அப்பொழுது நாங்கள்வந்து உனக்கு உதவிசெய்வோம் என்றுசொல்லிவிட்டுத் தங்கள் தங்கள் யதாஸ்தானத்துக்குப் போய்விட்டன

பிறகு குயவன் தன்னுடைய கண்களைக்கட்டிக்கொண்டு பின்னும் எங்கேயாவதுபோய் படிப்போமென்று போகும்பொழுது அக்காட்டில் சில புலிகள் ஒன்றாய்க்கூட்டங்கூடி நாம் வெய்யிலிலேயும் மழையிலேயும் அவஸ்தைப்படுகிறபடியால் நாம் ஒரு வீடுகட்டிக்கொண்டு இருக்கலாம் என்று சொல்ல ஆம் அப்படியே செய்யலாமென்று யாராவது ஒரு தச்சன் வழியிலேபோனால் அவனைக்கொல்லாமல் பிடித்துவாருங்களென்று இரண்டு

புலிகளை அனுப்ப அந்த இரண்டுபுலிகளும் ஓர்பாதையில் போய் மறைவாய் உட்கார்ந்திருந்தன. அப்பொழுது ஒருதச்சன் ஓர் ஊரிலேபோய் வேலைசெய்துவிட்டு தன்னுடைய சாமான்களைத் தோளில் வைத்துக்கொண்டு அந்தக் காட்டுப்பாதையாக தன்னுடைய ஊருக்குப் போகவந்தான். அப்பொழுது இந்தஇரண்டுபுலிகளும் அந்த தச்சன்மேற்பாய்ந்து அவனைப்பிடித்துக்கொண்டு தங்களுடைய இடத்துக்குக் கொண்டுபோய்விட்டன புலிகளெல்லாம் தச்சனைப்பார்த்து நீ எங்களுக்கெல்லாம் ஒருவீடுகட்டிக் கொடுத்தால் உன்னை விட்டுவிடுகிறோம் என்றுசொல்ல, அதைக் கேட்டு தச்சன் அப்படியே கட்டிக்கொடுக்கிறேன் ஆனால் வீடு கட்ட மரம்வேண்டுமே என்றுகூற புலிகளெல்லாம் மரத்தைக் காண்பித்து வெட்டச்சொல்ல, தச்சன்மரங்களை அறுத்து சுற்றி பலகையால் அடைத்து மேலே பலகையால் மூடிமுன் வாசற்படியும்வைத்து புலிகளைப்பார்த்து உங்களுக்கு வாசற்படி மூடவும் திறக்கவும் தெரியாததினால் நான் காண்பிக்கிறேன் நீங்களெல்லோரும் உள்ளேபோங்கள் என்றுசொல்ல, புலிகளெல்லாம் உள்ளேபோனவுடனே வாசற்படியை மூடிவிட்டு நாமவாசற்படியைத் திறந்துவிட்டால் புலிகள் நம்மை அடித்துத்தின்று விடுமென்று நினைத்து மூடினபடியே வைத்துவிட்டு வீட்டுக்குப் போய்விட்டான். புலிகளெல்லாம் கஷ்டப்பட்டு ஐந்தாறுநாளாய் ஆகாரமில்லாமல் அந்தவீட்டுக்குள்ளேயே இருந்தன இப்படி இருக்க அந்தக்குயவன் தன்னுடைய கண்களைக்கட்டிக்கொண்டுவந்தவன் காட்டில் அந்த புலியினுடைய வீட்டில் பலகையில்போய் திடீரென்று முட்டிக்கொண்டான் அதைக்கண்டு புலிகள் யாரோ ஒருமனிதனென்று யார் அது என்றுகேட்டன. அதற்குக்குயவன் நீயார் என்றான் நான் புலி நீயார் என்றதற்கு நான் மனிதன். உங்களை அடைத்து மூடியிருக்கிற கதவைத்திறந்து விடுகிறேன் நீங்களெல்லோரும் என்னைக்கொன்று தின்றுவிடுங்கள் என்று சொன்னதற்கு புலிகள் ஆனால் அப்படியே உன்னை அடித்துத் தின்றுவிடுகிறோம் வாசற்படியைத் திறந்துவிடும் என்று சொல்ல, குயவன் வாசற்படியைத் திறந்துவிட்டான் புலிகளெல்லாம் வெளியேவந்து நாங்கள் எங்களுக்கு உபகாரம் பண்ணினவர்களுக்கு அபகாரம் பண்ணுகிறதில்லை உன் ஆபத்துகாலத்தில் எங்களை நினைத்தால் நாங்கள் அப்பொழுது வந்து உதவிசெய்வோமென்று சொல்லிவிட்டுப்போய்விட்டன.

இவன்மறுபடியும் எங்கேயாவது போய் சாவோமென்று கண்ணைக்கட்டிக்கொண்டு ஒருதிசையை நோக்கிப்போகும் பொழுது ஒருபட்டணத்தில் கொண்டுபோய்விட்டது. அவ்விடத்தில் இவன்கட்டியிருந்த கட்டையவிழ்த்துப்பார்த்து அது ஒரு பட்டினமாயிருக்கக்கண்டு அவ்வூரில் ஒரு பூவாணிச்சி வீட்டுக்குப்போய் கிழவியைப்பார்த்து பாட்டி இவ்வூரில் ஏதாவது அதிசயம் உண்டாவென்றுகேட்டான். அதற்குஅந்தக்கிழவி அவனைப்பார்த்து இவ்வூர் அரசன் மகள் ஒருத்தி இருக்கிறாள். அவள் ஒரு இராஜனையும் கல்யாணம் செய்துகொள்ளவதில்லை, பிரமதேவனைத்தான் கல்யாணம் செய்துகொள்ளுவேன் என்று வைராக்கியமாய் இருக்கிறாளென்றாள். அதற்குஅவன் கிழவியைப்பார்த்து நீ போய் இராஜாமகளிடத்தில் பிரமதேவர் இன்னும் மூன்றுநாளையில் வருவார் என்றுசொல் என்றான். இவள்போய் இராஜாமகளிடத்தில் பிரமதேவா இன்னும் மூன்றுநாளையில் வருவார் என்றுசொல்லிவிட்டு வந்துவிட்டாள். இராஜாமகள் தன்தகப்பனிடத்தில்போய் பிரமதேவா இன்னும் மூன்றுநாளையில் வருவார் பட்டினத்தை அலங்காரம் பண்ணச்சொல்லிவிட்டு தன்னுடைய அரண்மனைக்கு வந்துவிட்டாள். பட்டணமெல்லாம் அலங்கரித்த மூன்றுநாள் அந்தக்குயவன் அன்னங்களே நான் உங்களுக்கு உதவிசெய்யவில்லையா இப்பொழுது நீங்கள் வந்து உதவிசெய்ய வேண்டும் என்று வேண்டினான். அப்பொழுது பிரமதேவர் அன்னவாகனத்தின்மேல் ஏறிக்கொண்டு உலகப்படியளந்து விட்டு தன் அரண்மனையில் வந்திறங்கி உள்ளேபோய் விட்டார். அப்பொழுது பிரமதேவா ஏறியிருந்த அன்னமானது இந்தக்குயவன் நம்முடைய இனங்களைக் காப்பாற்றினவனல்லவோ என்று பிரமதேவரேறியிருந்த சேனத்துடன் இவனிடத்திற்குவந்தது இவன் அதில் ஏறினான் ஏறினவுடனே அந்த அன்னமானது ஆகாயத்திலெழும்பி அந்தவூர் இராஜனுடைய அரண்மனையில் இறங்கியது. அதுகண்டு எல்லோரும் பிரமதேவர் வந்துவிட்டார் என்று அந்தக் குயவனை எல்லாரும் நமஸ்காரம் செய்தார்கள். பிறகு இந்தக் குயவனுக்கு விவாக முடித்தபின் நாரதமகாமுனிவர் அவ்விடத்துக்குவந்தார். அந்தராசன் நாரதரைக்கண்டு நமஸ்காரம்பண்ண அவரும் ஆசீர்வாதம் செய்து இருக்கும்பொழுது நாரதர் இராஜனைப்பார்த்து இவ்விடத்தில் என்ன விசேஷம் என்று கேட்க,

இராஜன் என்னுடைய மகளுக்கும் பிரமதேவருக்கும் விவாகம்
என்று சொல்ல, உடனே நாரதர் இராஜனிடத்தில் செலவுபெற்
றுக்கொண்டு தேவேந்திரனிடத்திற்போய் பிரமதேவர் பூலோக
த்தில் இன்ன இடத்தில் ஒரு இராசாவினுடைய குமாரத்தியை
விவாகம் பண்ணிக்கொண்டிருக்கிறார் என்று சொல்லிவிட்டு
அவரிடத்திலே செலவுபெற்றுக்கொண்டு வைகுந்தத்திற்குப்போய்
மகாவிஷ்ணுவிடமும் அப்படியேசொல்லிவிட்டு கைலாயங்கிரியில்
பரமசிவனிடத்திலும் போய் அப்படியே சொல்லிவிட்டு, சத்திய
லோகத்தில் பிரமதேவரிடத்தில் எப்பொழுதும்போல மரியாதை
செய்யாமல் போய் உட்கார்ந்தார். பிரமதேவரானவர் நாரதரை
ப்பார்த்து ஹே நாரதரே! எப்பொழுதும் மரியாதை செய்
பவர் இப்பொழுது ஏன் மரியாதை செய்யவில்லை என்றுகேட்க,
நாரதரானவர் பிரமதேவரைப்பார்த்து பூலோகத்தில் ஒருபிரமா
வானவர் ஒரு இராஜன் புத்திரியை மணஞ்செய்துகொண்டிரு
க்கிறார். உமக்கு ஏன்மரியாதை செய்யவேண்டுமே என்று கேட்க,
நம்மைவிட வேறு பிரமன் இருக்கிறானோ என்று தேவர்கள்
முனியீஸ்வரர்கள் எல்லோரும் பூலோகத்துக்கு வந்தார்கள். பிர
மாவானவர் பூலோகப்பிரமாவைப்பார்த்து ஓ பிரமாவே பிரமதே
வனுக்கு நான்குசிரசுண்டே உமக்கேன் ஒருசிரசென்று கேட்க,
அதற்குப் பூலோகப்பிரமாவாகிய குயவன் பிரமதேவரைப்பார்
த்து பூலோகத்தில் நான்கு சிரசுடனே வந்தால் ஜனங்கள் பய
ப்படுவார்கள் ஆதலால் நான் ஒருசிரசுடனே வந்தேன்என்று சொ
ல்ல, பிரமதேவர் முதலானவர் பரமித்துப்போனார்கள் பிறகு
மகாவிஷ்ணுவானவர் ஒருயோசனைசெய்து கருடபகவானை யழை
த்து தன் மோதிரத்தைக் கழற்றிக்கொடுத்து இந்தத் திருப்பாற்
கடலில் போட்டுவிட்டு வந்துவிடென்று சொல்ல, அப்படியே
கருடபகவான் கொண்டுபோய் போட்டுவிட்டு வந்துவிட்டார்.
மகாவிஷ்ணுவானவர் பிரமதேவரைப்பார்த்து உம்மால் இந்தமோ
திரத்தை வருவிக்கமுடியுமா என்று கேட்க என்னால் முடியாது
என்று சொல்லிவிட்டார் பூலோகப்பிரமனாகிய குயவனைப்பார
த்து உம்மால் வருவிக்கமுடியுமோ என்றுகேட்டதற்கு என்னால
முடியுமென்று சொல்லி தனக்கு எதிரில் ஒருதிரையைக் கட்டச்
சொல்லி ஓ ஆமையே நான் உனக்குமுன்னே உபகாரம் செய்த
படியால் எனக்கு இப்பொழுது ஒரு உபகாரம் செய்யவேண்டும்

அதுயாதென்றால் மகாவிஷ்ணுவானவர் தன்னுடைய மோதிரத்தைத் திருப்பாற்கடலில் கொண்டுபோய் போட்டுவிடும்படி கருடபகவானிடத்தில் கொடுத்தார். கருடபகவான் கொண்டுபோய் போட்டுவிட்டான் ஆகையினாலே அதைத்தருவிக்கிறதுக்கொடுக்கவேண்டுமென்று பூலோகபிரமாவாகிய குயவன் நாட்டாமையினிடத்திற் சொன்னான். நாட்டாமையானது மலையாமையிடத்திற்சொல்ல மலையாமை காட்டாமையினிடத்திற்சொல்ல, காட்டாமை கடலாமையினிடத்தில் சொன்னது கடலாமையானது அந்தமோதிரத்தைத் தேடி எடுத்துவந்து காட்டாமையினிடத்தில் கொடுத்தது. அதைக காட்டாமையானது மலையாமையிடத்திற்கொடுக்க, மலையாமையானது நாட்டாமையினிடத்திற் கொடுக்க நாட்டாமையானது பூமியைத் துளைத்துக்கொண்டு பூலோகப்பிரமாவாகிய குயவனிடத்தில் கொடுத்துவிட்டுப் போய்விட்டது.

அந்த மோதிரத்தை வாங்கி மகாவிஷ்ணுவைப் பார்த்து இதுதானா உம்முடைய மோதிரம் என்றுசொல்லிக் கொடுத்தான். இதுதான் என்று வாங்கிக்கொண்டு பூலோகப பிரமாவாகிய குயவனைப்பார்த்து நீ இனிமேல் பூலோகப்பிரமாவாய் இருமென்று சொல்லிவிட்டு தங்கள் தங்கள் ஸ்தானத்துக்குப் போய்விட்டார்கள். பூலோகபிரமாவாகிய குயவன் தன்னுடைய மாமனார் வீட்டிலிருக்கும்பொழுது ஒருநாள் வேறுதேசத்தரசன் ஒருவன் இந்தப் பட்டணத்தின்மேல் படையெடுத்துவந்து ஒருதூதனை அனுப்பி இராஜனைக் கப்பங்கட்டுகிறீரா அல்லது சண்டைக்கு வருகிறீரா என்று கேட்டுவரும்படி சொல்லிஅனுப்பினான். அந்ததூதன் வந்து தங்களரசனை சொன்னசங்கதிகளைச்சொன்னான். அதைக்கேட்டு ராஜாவானவன் தன்னுடைய மருமகனாகிய பூலோகப்பிரமனிடத்தில் வந்து இப்படி வேற்றரசன் நம்முடைய பட்டினத்தின்பேரில் படையெடுத்து வந்திருக்கிறான் என்று சொல்ல, நாம் நாளையத்தினம் காலையில் யுத்தத்துக்குப் போகலாம் என்று கூற, ராசாவானவர் அந்தத் தூதர்களிடத்தில் வந்து நாங்கள் நாளையத்தினம் காலையில் யுத்தத்திற்கு வருகிறோம் என்று சொல்லும்படி சொல்லியனுப்ப, அவர்கள்போய் விட்டார்கள். அப்பால் பூலோகப் பிரமாவாகிய குயவன் தான் உபகாரம்பண்ணின புலிகளை நினைக்க அந்தப்புலிகளானது இரா

த்திரியைப்போய் வேற்றரசனையும் அவனுடைய படைகளையெல்லாம் கொன்று எலும்புகளைப் போட்டுவிட்டுப் போய்விட்டன. காலையில் இராஜாவானவர் தன்மந்திரிகளிடத்தில் வந்து இன்றையதினம் நாமயுத்தத்துக்குப்போக வேண்டுமேயென்று சொல்ல, பூலோகப்பிரமாவாகிய ரூபவன் தனமாமனைப்பார்த்து வேற்றரசனும் அவனுடைய படைகளும் இருக்கிறதா இல்லையா என்பதைப்பார்த்து வரும்படி சொல்லி அனுப்ப, இராஜாவானவன் போய்ப்பார்த்துவிட்டு வேற்றரசனும் அவனுடைய படைகளும் இல்லாமலும் எலும்புகள் கிடக்கிறதைப் பார்த்துவிட்டு தன் மருமகனை மெச்சிக்கொண்டான்.

நாரதர் மும்மூர்த்திகளிடம் செய்தகலகம் முற்றிற்று.

## 7. நாரதர் தர்மநந்தனரிடம் செய்தகலகம்.

பிரமாண்டம் முடியுங்காலை ஒரு மயிர்கழியும் ஆயுளுடைய பகவான் ரோமசமாமுனிவர் காமியவனம்வந்து தம்மையருச்சித்த யுதிஷ்டிரரைப்பார்த்து அருச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்று நிவாதகவசரைவென்று சுவர்க்கத்தில் இந்திரனோடு இருக்கின்றான். இன்னும் சிலநாளில் கந்தமாதனமலைவழியாய் வருவான் என்றருளினார் அவ்வேளையில் ஸ்ரீ அரிநாமசங்கீர்த்தன பரராகிய நாரதமகாமுனிவர் எழுந்தருள, யுதிஷ்டிரர் அவரை யருச்சித்து உலகிலுள்ள தீர்த்தங்களையும் அவற்றின் மகிமைகளையும் மொழிந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். நாரதமகாமுனிவர் வேந்தே புலத்தியமாமுனிவர் உலகில் மூன்றுகோடி தீர்த்தங்கள் உள்ளன என்று சந்தனுமகாராசனுக்குச் சொல்லினார் யானறிந்தமட்டில் மொழிகின்றேன் கேளும். வேதம் ஓதலாகிய பிரமயாகமும், ஓமம் செய்தலாகிய தெய்வயாகமும், பலியீதலாகிய பூதயாகமும், தர்ப்பணம் செய்தலாகிய பிதுர்யாகமும், இரப்போர்க்கு ஈதலாகிய மானிடயாகமும், அக்கினிஷ்டோமமுதல் அசுவமேதமீறாய் உள்ளனவும், அறத்தால் ஈட்டிய பொருளைத் தக்கோரைக் கொண்டினென்று வலியக்கொடுத்தலாகிய தலைப்படுதானமும், ஆதுலரைக்கண்டு மனமிரங்கி ஈவதாகிய இடைப்படுதானமும், புகழுக்கும் அன்புக்கும் கைம்மாறுவுக்கும் அச்சத்திற்கும் தாக்ஷிண்ணியத்

திற்கும் கடைப்பாட்டுக்கும் கொடுப்பதாகிய கடைப்படுதானமும், கோதானமும் பூதானமும் கன்னிகாதானம் சுவர்ணதானமும், அஜமேதமும் அசுவமேதமும் நரமேதமும் செய்தோரும், ஆதுலர்க்குச்சாலை ஓதுவார்க்குணவு அறுசமயத்தார்க் குண்டி பசுவுக்கு * வாயுறை, † சிறைச்சோறு, ஐயம், தின்பண்டம் நல்கல், ‡ அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால்வார்த்தல், ¶ அறவைப்பிணஞ்சுடுதல், § அறவைத்தூரியம் சுண்ணம், நோய்மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர் காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறுவிடுதல், விலைகொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானம் என்னும் இவற்றைச்செய்தோர் பெறும்பேற்றைப் பகவானது பாதபிரக்ஷாளன தீர்த்தமாகிய கங்கை ஆதியாய்புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவோர் பெறுவார் என்று நவிலப்போனார். தர்மபுத்திரர் பகவானே ரோமசமாமுனிவரை வணங்கித் தீர்த்தயாத்திரைசெய்ய விரும்புகின்றேனென்ன, முனிவர் எமதுள்ளமும் அப்படியே என்று புறப்பட்டு தாமந்தனு! அகத்தியமாமுனிவர் இல்லறத்தை விரும்பாமல் நெடுநாள் பிரமசரியத்திலிருந்து தீர்த்தயாத்திரைசெய்து ஒருவனம் வந்தார். அவ்வனத்தில் ஒரு ஆலமரத்தில் அகத்தியமுனிவரது பிதிரர் வௌவாலைப்போல் அதோமுகமாய்த்தொங்கிக்கொண்டிருந்தனர்கள். தமிழ்முனிவர் அவரைக்கண்டுவினவ, பிதிரர் எங்கள்குலத்திலே தோன்றிய அகத்தியன் இல்லறதருமத்தை யநுசரித்தாக குலவிருத்தி செய்யாமல் பிரமசரியத்திலிருக்கின்றான் வம்சவிருத்தியாகாத குற்றத்தால யமன் எங்களுக்குத்தண்டனைவிதித்தான் என்று மொழிந்துவருந்தினர். அகத்தியர் அப்பிதிரர் தாளைவணங்கி அப்பிதிர்த்துரோகி அடியேன்தான். இனிநான் ஒருகன்னிகையைமணந்து மரபுவிளங்கச் செய்கின்றேனென்றுசென்று விதர்ப்பதேசாதிபதியாகமுன்னிலையிற்பெற்ற உலோபாமுத்திரையை விவாகம் செய்து திரிதசி

---

* வாயுறை-கைத்தீனி † சிறைச்சோறு - காவலிலகப்பட்டவர்களுக் கன்னங்கொடுத்தல ‡ அறவைச்சோறு ¶ அறவைப்பிணஞ்சுடுதல்-அநாதப் பிரேதத்திற்கு ஈமக்கடன் செய்தல § அறவைத்தூரியம்-அநாதவர்க்கு வஸ்திரங் கொடுத்தல்.

என்பவரைப்பெற்றார். அத்திரிசியும் புத்திரரைப் பெற்றான். அகத்தியர் புத்திரபௌத்திரரோடுவாழ்ந்து பிதிரர் நல்லுலகுசேர்ந்தார்கள். குறுமுனிவர் உலோபாமுத்திரையோடு முதலில் இவ்வாசிரமத்தில் வந்தார் என்று ஆங்கொரு பூஞ்சோலையைக் காட்டி கும்பயோனியார் வாதாபியைக்கொன்றதையும் கடலைப் பருகியதையும் சகரர் முதலியோர் சரித்திரங்களையும் விளக்கி பலவனங்களைக்கடந்து பிரமதேவன் யாகஞ்செய்த இடம் வந்து வேந்தே பரதன் எனும் அரசன் இத்தீர்த்தத்தில் நீராடி மேலுலகங்களைக் கண்டானென்று அங்கொரு தீர்த்தத்தைக் காட்டினர். யுதிட்டிராதியர் அதில் நீராடி மேலுலகங்களையும் சுவர்க்கத்தில் அருச்சுனன் இந்திரனோடு இருத்தலையும் கண்டு வியப்புற்றுக் கந்தாப்பகிரி சார்ந்தார்.

ஒருநாள் இந்திரன் கிரியிலிருந்து ஒரு மந்தாரமலர் பாஞ்சாலிமுன் விழ அவள் அதை எடுத்து வீமனுக்குக்காட்டி இது போன்றபுஷ்பம் வேண்டுமென்றாள், வாயுசுதன் உரோமசமாமுனிவரை வினவி அப்பூ அளகையிலுள்ளதென்று அறிந்து பலமலைகளையும் வனங்களையுங்கடந்து சென்று மலைமேல்மலைகிடந்தாற்போல ஒரு பருவதத்தின் மேலே அனுமான் பள்ளிகொண்டிருந்ததைக்கண்டு அச்சமுற்று நின்றான். வாயுசுதர் வாயுசுதனைப் பார்த்து யானிருக்கும் இவ்விடத்தில் தேவரும் வர அஞ்சுவார் நீ வந்தது என்னையென, வீமன் எதிர்த்துப்பேசினான் அஞ்சனைசுதர் நீ வீரனானால் இங்கு கிடக்கின்ற என் வாலையெடுத்து அப்புறம்வைப்பாயாம் என வீமன் அடா குரங்கே ஸ்ரீராமதூதராகிய அனுமானுடைய திருவாலுக்கு உனது குறைவால் எவ்வளவு என்றான். வாயுசுதர் அடா என்னைப்போலானாய், நாயகியராமனைச் சுமந்து தோள் தேய்ந்த அசக்தனாகையால் என்னிலும் உயர்ந்ததென்றனையென வீமன் அடா நாத்துமனே இராமபரமாத்துமனையோ நரனென்றாய் என அவைத்தாய வாலையெடுக்க முயன்றும் திறமும் தூக்கமுடியாமல் நின்றான். அஞ்சனேயர் கருணையோடு நீயாரென்க தாயுதன் நான் தருமராசனுக்குத் தம்பி அர்ச்சுனனுக்கு முன்னவன் எனது பெயர் வீமன் என்றான். அஞ்சனைசுதா வீமா வாயுவுக்கும் அஞ்சனைக்கும் தோன்றிச் சுக்கிரீவனுக்கு மந்திரியாகி ஸ்ரீராமபரமாத்மனுக்குத் தூதனாகிய அனுமான் யானே என, வீமன் எழுந்து அவர்தாளைப்பற்றி அபராத

க்ஷாபணஞ் செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். வாயு சுதர் நீ விரும்பும வரத்தைக் கேளென்ன வீமன் நாங்கள் நாடு சேர்ந்த பின்னர் துரியோதனாதிகளும் அடியோங்களுக்கும் யுத்தமநேரிட்டால் அருச்சுனன் தேர்க்கொடியில் தேவரீர் வீற்றிருந்தருளவேண்டுமென்றான், இராட்சதனைக் கொல்லத் தேவரீர் எடுத்த விசுவரூபத்தைக்காட்டியருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். ஸ்ரீராமதூதர் அவ்வாறு தந்து விசுவரூபசேவை சாதித்து பகையைவென்று நாடாள்கவென்று ஆசிகூறியருளினார். வீமன் அவ்விடம்விட்டு அளகாபுரிசென்று[1] காவலரை வதைத்து[2] சோலையைப் பறித்துவந்தான்.

நாரதர் தருமநந்தனிடம் செய்தகலகம்-முற்றிற்று.

## 8 நாரதர் தருமநந்தனிடத்தில் க்ருஷ்ண பகவானின் பெருமைகூறல்.

பகவானுடைய வனவாசம் முடிந்து பதினொன்றாம் வருடம் நடக்கும்பொழுது பாண்டவர் காம்யவனமென்ற வதிந்தகாமிய வனஞ்சார்ந்து வசித்தனர். அப்பொழுது ஸ்ரீ கண்ணபிரான் ஆங்கு எழுந்தருளினர், பாண்டவர் எதிர்கொண்டு அழைத்து வந்து அருச்சித்து அளவளாவியிருந்தபொழுது, பகவானை மார்க்கண்டேய மகாமுனிவர் எழுந்தருள அவரையும் எதிர்கொண்டு அழைத்து வந்து நமஸ்காரஞ்செய்ய, தம்மை வணங்கிய ஐவரை ஆசீர்வதித்துக் காலத்தால் வருந்துகின்றீரென்று வருந்தாதீர் சர்வலோக சரண்யனும் சர்வஞ்ஞனும் சர்வபூத தயாபரனும் ஆதியந்தரகிதனும் எல்லார்க்கும் அரியவனும் ஆகிய ஸ்ரீக்ருஷ்ண பரமாத்துமா உங்களுக்கு உரிய மைத்துனனாக யாதலால் பெற்றீர் உங்களுக்கு ஒரு குறைவுமில்லையென்றார். தர்மபுத்திரர் வணங்கிச் சுவாமி அச்சுதன் கிருபாகடாக்ஷமும் தேவரீர் அருளும்பெற்ற அடியேனுக்கு ஒரு குறைவுமில்லை அடியேன் உய்யுமாறு புண்ணிய சரித்திரங்கள் புகன்றருள வேண்டுமென்று தவ்வியாசாரியர் மார்க்கண்டேயரைத்தாழ்ந்து தாங்கள் பரமசிவன் அருள்பெற்று என்றும் பதினாறு வயதுபெற்றீர்.

---

1 காவலரை-காவலாளரை 2 சோலை-சோலைப்பூவை

தன்னந்தனியனாகிய வடபத்திரசாயியினது திருவயிற்றட் புகுந்து எத்தனையோ பிரமகற்பங்கண்டேர், அவ்விசேடங்களை யெல்லாம் கூறியருளுக என்றார். அவ்வேளையில் பகவான் நாரதமகாமுனிவர் எழுந்தருளி யிருந்திடமியைப் பார்த்து தாமந்தனை முனொருகாலை நான் ஸ்ரீகிருஷ்ண பரமாத்துமனைத் தரிசிக்கத் துவாரகைக்குப் போய் யாண்டும் நாடி அந்தமறைப்பொருளைக் காணுமல் மீண்டுவரும்போது ஒருதிருமாளிகையில் பரமனை விளையாடக் கொண்டிருக்கக்கண்டு போய் உடையாடி வந்தேன். நானே வரும்போது மாயவனை எனக்கு எதிரே எழுந்தருளி யான் நினைக்கது இப்போது அபகரிக்கப்பட்டதா என்றேன். தேவகிமைந்தனே இல்லை இல்லை இப்பொழுதுதானே வந்திருக்கிறேனென்றருளினார். யான் பின்னும் சிறிது தூரம் வருகையில் அதேபோல் பக்கத்தில் நாரதரேறு பேசிக்கொண்டே போய்ப் பார்த்து ஆச்சரியமடைந்து அங்குபோய் அருளாழி யந்தனையும் மனைவியையும் பார்த்து ஆனந்தமடைந்து அவன் ஆயிர நாமங்களையும் பாடிப் பாடி விந்தைவாதிருந்த அறியாத அவனையாம் எவ்வாறு அறிவோமென்று வந்தேன். அப்பகவானும் மகா பாகவதோத்தமராகிய மார்க்கண்டேயரும் உன்னிடம் எழுந்தருளுவதற்கு நீ செய்தமாதவம் யாதோ புண்ணியனே உன்னிடம் வந்தமையால் பகவத்பாகவதத் சேவை ஒருங்குபெற்றேன் என்று வாழ்த்திப் போனார். பின்பு மார்க்கண்டேயர் பகவத்திருமங்களையும் பாகவதர்களின் சரித்திரம் முதலிய பலவற்றையும் ஓதியருளினார்.

நாரதர் தாமந்தனிடம் கிருஷ்ணன் பெருமைகூறல்-முற்றிற்று.

---

1 இந்திராணி லக்ஷ்மி பார்வதி சாவித்ரி யிவர்களிடத்தில் செய்த கலகம், 2 திருமூர்த்திகள் பிரகாசித்தமை, 3 நந்தியிடம் செய்தகலகம், 4 ஸ்ரீராமரிடம் செய்தகலகம், 5 திருமூர்த்திகளிடம் செய்தகலகம், 6 தாமந்தனிடம் செய்தகலகம், 7 தருமரிடம் ஸ்ரீகிருஷ்ணன் பெருமை கூறல் ஆகிய இவ்வேழு கதைகளும் திருச்சிறுப்பள்ளி தாழக்குடி, ம-௱-௱-ஸ்ரீ, பெ பரிமணப்பல்லவராயர் அவர்கள் நமது வேண்டுகோளுக்கிணங்கி எழுதிய பெரிய உபகாரத்திற்குப் பெரிதும் நன்றி பாராட்டுகின்றேன்

சி. முனிசாமி முதலியார்.

## 9. நாரதர் ரஜிமக்களிடம் செய்தகலகம்.

முன் ஒருகாலத்தில் தேவாசுரயுத்தம் நேரிட்டபோது தேவரும் அசுரரும் பிரமதேவனிடம்போய் சுவாமி இந்த யுத்தத்தில் யாருக்கு ஜயமுண்டாகுமென்று கேட்டார்கள். அதற்கு அந்த தேவன் ரஜிமகாராஜன் ஆயுதமெடுத்துக்கொண்டு யாவர்பக்கத்தில் சேர்ந்து யுத்தஞ்செய்வானோ அவர்களுக்கு ஜயமுண்டாகுமென்றுசொல்ல, அதுகேட்டு முந்தி அசுரர் ரஜியினிடத்திற்குவந்து எங்களுக்கு நீ யுத்தசகாயஞ் செய்யவேணுமென்று கேட்டார்கள். அதுகேட்டு ரஜியானவன் ஓ அசுரரே நான் தேவர்களை வென்றபிறகு உங்களுக்கு இந்திரனாயிருக்க நீங்கள் சம்மதிப்பட்டாலப்படியே உங்களை ரக்ஷிக்கிறேனென்றான். அதற்கு தைத்தியர் அரசனை நாங்கள் காரியவசத்திற்கு ஒன்றுசொல்லிப் பின்னொன்று செய்யமாட்டோம். எங்களுக்குப்பிரகலாதனே இந்திரனாயிருக்கவேண்டும் அதற்காகத்தான் இந்த முயற்சியென்றுசொல்லிப் போய்விட்டார்கள். பின்பு அமரரும் வந்து தமக்குத் துணைசெய்யவேண்டுமென்று அவ்வரசனை வேண்டிக்கொண்டார்கள் அவர்களோடு அவ்வரசன் தனதிஷ்டத்தை முன்சொன்னபடி சொல்ல அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். அதனால் அம்மன்னவன் தேவசைனியங்களைக் கூட்டிக்கொண்டு போர்செய்து அநேகபராக்கிரமங்களினாலே அசுரசேனைகளையெல்லாம் நாசஞ்செய்தான். பிறகு தேவேந்திரன்வந்து அவ்வேந்தன் பாதங்களில் விழுந்து ஓ மகாராஜனே ஆபத்தில் காத்ததினாலும் அன்னமிட்டதனாலும் நீ எங்களுக்குப் பிதாவானாய் இதனாலே சகல லோகங்களுக்கும் மிகமேலானவனுமானாய் நானோ உனக்கு மகன்; மகன் திரிலோகாதிபதியாயிருப்பது பிதாவுக்குச்சிறப்பன்றோ? என்று துதித்து வேண்டியுரைத்தான். இதைக்கேட்டு ரஜியானவன் நகைத்து இந்திரனை நோக்கி நல்லது அப்படியே யாகட்டும் பகைவனானாலும் இச்சகம்பேசிக் காலில்விழுந்து வேண்டிக்கொண்டானானால் அதனை மறுத்தல் கூடாதகாரியம் ஆதலால் ஒப்புக்கொண்டேன் போ என்று சொல்லிவிட்டுத் தன்பட்டணம் போய்ச்சேர்ந்தான். இந்திரன் சுகமா யாண்டுகொண்டிருந்தான்.

சிலகாலத்திற்குப்பின் ரஜி லோகாந்தரஞ்சேர அவன் குமாரரை நாரதமுனிவர் தூண்டிவிட்டார். அதனாலே அவர்கள் இந்

திரனிடம்போய் நீ எங்கள் பிதாவின் புத்திரனாகையால் எங்களுக்கு இராச்சியத்திற் பங்குகொடுக்கவேண்டுமென்று கேட்டு இந்திரன் அதற்கு இணங்காமையால் அவனை வென்று தாங்களவ்வதிகாரத்தைச் செலுத்தினார்கள். இவ்வாறு வெகுகாலங் கழிந்துபோகையில், தேவராஜன் தனது குருவாகிய பிரகஸ்பதியினிடம் போய் சுவாமி அடியேன் இப்படி அலைகிறேனே அடியேன் திருப்தியடையும்படி இழந்தப்பதங்களாகியதும் புரோடாசங்கொடுக்கும்படிச் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, அதற்கு குரு ஓ அமரராஜனே! முன்னமே நீ என்னைக் கேட்டிருப்பையாகில் இவ்வாபத்து உனக்கு நேரிடாதபடி செய்திருப்பேன் உன்விஷயத்தில் நான் செய்யக்கூடாதது என்னவிருக்கிறது பார் சிறிது நாட்களுக்குள்ளேயே உன் ஐசுவரியம் உனக்குவரும்படிச் செய்கிறேனென்று சொல்லி இந்திரனுக்குத் தேஜசு வளரவும் சத்துருக்களுக்குப் புத்தி மயங்கவும் ஒருஅபிசாரமருந்துசெய்தார். அதனால் ரஜியின் மக்களெல்லாம் புத்திமயங்கிப் பிராமணத்துவேஷமுண்டானவர்களாகவும், வர்ணாச்சிரம தருமங்களை விட்டவர்களாகவுமாகி வேதத்திற்குப் புறம்பானார்கள். இப்படியானதால் அவர்களை இந்திரன் ஜயித்து அப்பிரயோகத்தினுடைய ஓமபலத்தினாலே மகா தேஜசுள்ளவனாய் மறுபடியும் சொர்க்க ராச்சியத்தையாண்டுவந்தான்.

நாரதர் ரஜிமக்களிடம் செய்தகலகம் முற்றிற்று.

## 10. நாரதருக்கும் வியாசருக்கும் தர்க்கம்.

திரிலோகசஞ்சாரியாயும் விஷ்ணுகானப்பிரியராயும் யாவர்க்குமின்பமளிப்பவராயுமுள்ள நாரதமுனிவர் ஒருசமயம் வியாசருடைய ஆசிரமத்துக்குவர, அவரை வியாசர்கண்டு அடிபணிந்து ஆசனமளித்து அதிலிருக்கச்செய்து ஆர்க்கியபாத்திய ஆசமனாதிகள் தந்து மிக்கவிநயத்துடன் அந்நாரதமுனிவரைநோக்கி ஐயா! சாரமில்லாததாகிய இச்சம்சாரத்தில் பிராணிகளுக்கு என்ன சுகமிருக்கின்றது? நன்றாய் நீர் பரியாலோசனைசெய்து பாரும். எப்பொழுதும், எவ்விடத்திலும், எவனிடத்திலும் சுகமிருக்க நானறிந்தேனில்லை. நானோ ஓர் த்வீபத்திற்பிறந்து அந்த க்ஷணத்தி

லேயே பாதுகாக்கத் தக்க தாயினாலும் விடப்பட்டு, யாதொரு சகாயமு மில்லாமல் கர்மவசத்தால் ஆரண்யத்தில் விருத்தியடைந்து, பின்னர் மேருபர்வதத்துக்குப்போய் புத்திராபேக்ஷையினால் பரமேஸ்வரனைநோக்கி அதியுக்கிரமான தவத்தைச்செய்து, அவரருளால் சுகனென்கிற ஒரு புத்திரனைப்பெற்று அவனுக்கு வேதசாஸ்திரங்களையெல்லாங் கற்பித்து வருங்காலத்தில் அவன் என்னை விட்டு ஓடிப்போயினான். பின்னர் நான் அப்புத்திரசோகத்தால் வருத்தமுற்று எங்குந்திரிந்தலையுங் காலத்தில் நீர் நம சில நல்லுபதேசங்களைச்செய்து போயினீர். நானவ்வுபதேசங்களாலும் புத்திரசோகம் நீங்கப்பெற்று ஏகாக்கிரமுடையவனாய் மேருபருப்பதத்தையுந் தவத்தையும்விட்டு குருஜாங்கலம் என்னுந்தேசத்தை யடைந்து அங்கும் எப்பொழுதும் சுகனே! சுகனே! என்று புத்திரனைக் கூவிக்கூவி யலைந்தலைந்து இனி இச்சம்சாரத்திலென்ன சுகமிருக்கின்றதென வெறுத்து இப்பிரபஞ்சவாழ்க்கையைப் பொய்யென வெண்ணியிருக்கு மச்சமயத்தில், மாதாவைப் பார்க்கவேண்டுமென்றெண்ணமுண்டாக அவளிருக்குமிடத்தைத் தேடிச்சென்றேன். அவளோ சந்தனுமகாராஜாவினால் வரிக்கப்பட்டுப் புத்திரப்பேறுண்டா யிருப்பதறிந்து அவளிடத்திற் போவதைவிட்டு சரஸ்வதி தீரத்தில் ஓர் ஆச்சிரமங்கட்டிக்கொண்டு வசித்திருக்குங் காலத்தில், என்தாய்க்குப் பர்த்தாவான சந்தனுமகாராஜன்சொர்க்கத்தை யடைந்துவிட்டார். பிறகு அவளும் அவளுடைய இரண்டு பிள்ளைகளும் காங்கேயனால் காக்கப்பட்டு, பின்னர் அக்காங்கேயன் சித்திராங்கதனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்து அரசியலை நடத்திவரச்செய்தனன். அப்பொழுது என்தாய் மகிழ்ந்திருந்தாள். அவனும் சின்னாள்கழித்துச் சொர்க்கத்தையடைந்தனன். பின்னர் அவளழுதவண்ணமா யிருந்தாள். அதனை நானறிந்து அவளைச்சமாதானஞ்செய்வதற்குப்போய் காங்கேயனையுங்கண்டு தாயாரைச் சமாதானப்படுத்தினேன் காங்கேயன் விசித்திரவீரியனுக்குப் பட்டாபிஷேகத்தோடு கலியாணமும்நடத்த அதுகண்டு நானும் என்தாயும் சுகமாக வாழ்ந்திருந்தோம். சின்னாள்கழித்து க்ஷயரோகத்தா லவனும் இறந்துபோயினான். பின்னர் அவன்பத்தினிமார்கள் மாமியாரைவணங்கி நாங்களினி யிங்கிருத்தல் கற்பிலக்கணமன்று; அக்கினிப்பிரவேசமாய் எங்கள் கணவருடன் சுவர்க்கத்தில் வசிக்கின்றோம்; எங்களுக்கு விடைகொடுக்க வே

ண்டுமென்று வேண்ட, அவனதற்குடன்படாது தடைசெய்து விசித்திரவீரியனுக்குச் செய்யவேண்டிய கருமாதி கிரியைகளைப் பீஷ்மருடைய கையால் செய்துமுடித்தனள் நானும் என்னுடைய ஆச்ரமத்துக்கு வந்துவிட்டேன். என்தாயானவள் புத்திரசோக மிகுதியினாலும் சந்ததியற்றுப்போன துக்கத்தினாலும் என்னை நினைத்தாள் நான் அந்தக்ஷணமே அவளிருக்கும் நாகசமென்னும் பட்டணத்துக்குப்போய் அவளைக்கண்டு வணங்கி, ஓ தாயே எதற்காக இப்பொழுது என்னை நினைத்தாய்? என்னாலாகவேண்டிய காரியமென்ன? எனக்குத் தெரியச்செய்யவேணுமம்மா. உன்னுடைய உத்திரவுக்கிரண்டாவதாக உனதடிமையாகயிருக்கிற நான் செய்வேனென்ற ஆசையால் எனக்குக் கட்டளையிடுமென்று கேட்க, அதற்கு என்தாய், அப்பா புத்திரனே! நீ சர்வசாஸ்திர தருமங்களையும் நன்றாயறிந்தவனாகையால் நான் சொல்லப்போகிற தருமத்தில் விளைந்த உபகாரத்தை நன்றாயாலோசித்து என்னெண்ணத்தைப் பூர்த்திசெய்வாய். இச்சந்தனு வம்சம் இதுவரையில் இந்தக்காங்கேயருடைய பீஷ்மத்தால் காக்கப்பட்டு வந்தது. இப்போது இந்தவம்சம் போகும்போலிருக்கின்றதே என்கிற வேகப்பட்ட பயப்புறுடையவளாய் அதற்றைப் போக்கிக்கொள்வதற்கு உன்னை நினைத்தேனே நினைத்தபடி நீயும் வந்தாய் வந்த நீ வம்சவிருத்தியைச் செய்துபோகவேண்டும். யான் வம்சச்சேத பயத்தால் வருந்துகையடைகின்றேனை என்னை நீ ரக்ஷிக்கவேண்டும். அதாவது விசித்திரவீரியனுடைய பத்தினிமாரிருவரையும் நீகூடி வம்சோத்பாதனஞ்செய்வாயாக பரதனுடைய வம்சத்தை விருத்தி செய்வதனால் உனக்கு யாதொருதோஷமுமுண்டாகமாட்டாதென்றும் சொன்னாள் கூறிய தாயின் வார்த்தையைக்கேட்டு நான் சிந்தாகுலமடைந்தவனாய் நாணத்தால் தலைகுனிந்துகொண்டே தாயைநோக்கி ஓ அன்னாய்! பிறருடைய ஸ்திரீயைக் கைபிடிப்பதே வெகு அதிகபாதகமென்று தெரிந்தயானே இந்த அதர்மகாரியத்தைச் செய்ய எப்படித் துணிவேன்? சகோதரனுடைய பத்னி புத்திரியென்று சொல்லப்பட்டிருக்க, வேதங்களையெல்லாம்படித்த நான் இந்த விபசாரத்தை எப்படிச்செய்வேன்? அதர்மமார்க்கத்தில் வம்சத்தை விருத்திசெய்தால் வம்சவிருத்தியை எதிர்பார்த்திருக்கும் பிதுருக்களெல்லாம் பாபிஷ்டர்களாய் நரகத்தையடைந்து அங்கின்றும் மீண்டிருக்கமாட்டாமலிருப்பார்.

ஓ அம்மா! யாவருக்கும் தருமங்களையுபதேசஞ் செய்கின்றவனுயும் தருமங்களறிவதற்கே புராணங்களைச்செய்கின்றனுயும் இருக்கின்ற நான் எப்படி இந்த நிந்தையான காரியத்தைச் செய்வேனென்றேன். இவையெல்லாங் கேட்டுவந்த தாயானவள் அப்போது நான்சொல்லிவந்த தருமாதருமங்களைச் சிறிதும் எண்ணிப்பாராமல் வயசோத்பத்தியை எவ்விதத்திலாவது செய்யவேண்டுமென்கிற ஓர் தருமத்தையே மேற்கொண்டு என்னைப் பார்த்து, அப்பா குழந்தாய்! நீ சொல்லியவெல்லாஞ் சரியேயாயினும் என்னுடைய வார்த்தையினுல உனக்கு யாதொருதோஷமுமுண்டாகமாட்டாது பெரியோர்களென்றெண்ணத்தக்கவர் அத்தருமத்தைச் சொன்னபோதிலும் அதனையோசியாமல் மனிதர்கள் செய்யவேண்டுமென்றும், தாயானவள் எதுசெய்தால் சந்தோஷிப்பளோ அதைச்செய்யவேண்டுமென்றுந் தருமநூல் கூறியிருக்கின்றதல்லவா! அத்தருமங்களை நீ இப்போதெண்ணி புத்திரசோகத்தில மூழ்கியிருக்கின்றவென்னை நான் சொல்லியபடி செய்து சந்தோஷப்படுத்துவாயென்று அவள் சொல்லி முடித்தவுடன். பீஷ்மன என்னைப்பார்த்து, ஓ வியாசரே! நீர் இந்தவிஷயத்தில ஆலோசனைசெய்வதை விட்டுவிடும் "தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை" என்பதைநாடும், நாடிச்செய்வீராயின நீர் உலகில் அதர்மராக வழங்கப்பட மாட்டீரென்றான் பின்னர் நான் இருவர் வார்த்தையுங்கேட்டு அந்த நிந்திதமான காரியத்தைச் செய்யவாரம்பித்து அந்தப்புரஞ்சென்று படுக்கையறையில் நானிருக்கும்போது அம்பிகை என்பவளவந்து என்னைப்பார்த்து மனம் ரமிக்காதவளாய அருவருப்படைந்தனள். அதனைக்கண்ட நான் அவளைப்பார்த்து நீ என்னைக்கண்டு அருவருப்படைந்து கண்களை மூடிக்கொண்ட படியினுலே உனக்குப் பிறக்கப்போகிற பிள்ளை அந்தகனுக விருப்பானென்று சபித்தேன். அச்சாபத்துடன் அவளென்னைக்கூடிப்போயினள். மறுநாள என்தாய் என்னை ரகசியமான ஸ்தானத்திலழைத்து அப்பா நல்ல புத்திரன்பிறக்கும்படியாக அனுக்கிரகஞ்செய்தனையாவென்றாள். நான் ஓ அம்மணி நீ என்பால் அனுக்கிரகத்தை நினைக்க அதுசாபமாய் முடிந்ததென்று நடந்த செய்திகளைச்சொன்னேன். அவளதைக்கேட்டு என்னகாரியஞ் செய்தாய் எதற்காக நான் பிள்ளையை வேண்டியது

என்று வருந்திநிற்ப நானும் அவள் வருத்தத்தைக்கண்டு வருத்த முற்று எனிப்படிச் செய்வோமென் றெண்ணியிருந்தேன்.

நாரதருக்கும் வியாசருக்கும் தர்க்கம் முற்றிற்று.

---

## 11. திருதராட்டிரன் பாண்டு உற்பத்தி.

இவ்வாறு எனது சகோதரன் மனையாட்டிகட்கு என்னால் நேரிட்ட சாபத்தை எனது தாயாகிய சத்தியவதிகேட்டு வருத்த முற நானும் அவளது துயரத்தைக்கண்டு துன்பமுற்றிருக்கும் போது அவள் மீண்டும் மிகவும் பயந்தவளாய் என்னைப்பார்த்து ஓ புத்திரா! அம்பிகை என்பவள் பெறப்போகிறபிள்ளை குருடா யிருக்குமாதலால் அப்பிள்ளை அரசாட்சிக்கு யோக்கியனாகானே! நானென்செய்வேன் என்பால் அன்புடையவனே மறுபடியும் நீயினி அம்பாலிகையோடு கூடி அரசாட்சிக்குரிய ஓர் சற்புத்திரனைப் பெற்று எனக்குக் கொடுத்துக் கொடுப்பாயென்று வேண்டி னாள் நான் அவளது இரக்கத்துக்கிரங்கி அவள் சொல்லுக்குடன் பட்டு அந்த அம்பாலிகை என்பவள் அம்மாதத்தி லாகவேண்டிய ருதுகாலத்தை யெதிர்பார்த்துக்கொண்டு அந்நகரப்புறத்திலிருந் தேன். பின்னரவள் ருதுஸ்நானஞ்செய்து நானிருக்கும் ஏகாந்த மானபடுக்கையறையில் மாமியார் உத்திரவின்படி வந்துசேர்ந்து என்னையும் என்னுடைய சடையையும் என்னுடைய பற்களையும் வற்றலைப்போலிருக்கும் உடம்பினையுங் கண்டு அருவருத்து வியா தியுடம்பை வெளுப்பாக்கிக்கொண்டு மனவருத்தத்தோடு என்னருகில் வந்து நின்றனள் நானவளைப்பார்த்துக் கோபங்கொ ண்டு ஓ பெண்ணே! நீ என்னைப்பார்த்து உன்னுடம்பை வெண் மையாக்கிக் கொண்டபடியால் உனக்குப் பிறக்கப்போகிறபிள்ளை வெண்ணிறத்தோடு பிறப்பானென்று சபித்துப் பின்னரவளு டன் சுகித்து மற்றவ்விடம்விட்டுப்போய்ச் சேர்ந்தேன். பின்னர் இரண்டு பிள்ளைகளும் திருதராஷ்டிரனென்றும், பாண்டுராஜ னென்றும் பிரசித்திபெற்றிருந்தனர் என் தாயார்மாத்திரம் ஒரு வன் குருடனையும் ஒருவன் பாண்டுரோகனையும் இருப்பதைப்பார்த் து திருப்தியடையாதவளாய், ஒருவருடன்கழித்து என்னை வர வழைத்து ஓ குழந்தாய் உன்னாலுண்டாக்கப்பட்ட இரண்டு பிள் ளைகளும் அரசாட்சிக் குரியவர்களல்லர். மனோகரமான வேறொரு

பிள்ளையை நீ கொடுக்கவேண்டுமென்ன, நானப்படியே செய்கிறேனென்று சொல்லவும், அவள் மகிழ்ந்தவளாய்த் தன் மருமகளாகிய அம்பிகை என்பவளை வரவழைத்து ஓ பெண்ணே! நீ வியாசனிடத்தில் வெறுப்படையாமல் அவனைச் சந்தோஷப்படுத்தி அவனோடு கிரீடித்து அரசாட்சிக்குப் போக்கியமான ஒருபிள்ளையைப் பெறுவாயென்று வேண்டிக்கொண்டே, அவள் நாணத்துடன் மறுமொழி யொன்றுஞ் சொல்லாமல் அவளிடம் விடைபெற்றுச் சென்று, தன் நாயகன் காதியொருத்தியையழைத்து என்னிடம் வரவேண்டிய சங்கதிகளைச் சொல்லி அவளை ஆடையாபரணங்களால் அலங்கரித்து நறுமணங்கமழும் புஷ்பங்களைச்சூட்டி சுகந்தங்களைப்பூசி ரதியும் நாணும்படியான கோலத்துடன் அனுப்பினாள்.

அவள் அதிக சந்தோஷத்துடன் நானிருக்கும் படுக்கையிடத்திற்கு வந்து என்னைக்கண்டு முகவிலாசத்துடன் காமவிலாசத்தையுங் காட்டித் தழுவி என்னை மதனநூலிற் பயில்வித்து இதுவே பரமானந்தமென மூழ்குவித்தனள் ஓ நாரதமுனிவரே! நானவ்வானந்தத்திலழுந்தி அவளைப் பார்த்து ஓ பூங்கொடிபோன்றவளே! சாமுத்திரிகா லக்ஷணங்களோடு கூடியவளும் சௌந்தர்யவதியும் சகலதருமங்களை யறிந்தவளும் சத்தியவாதியுமுள்ள ஓர் புத்திரன் உனக்குப் பிறப்பானென்று வரங்கொடுத்தேன். அவன்தான் விதுரனென்பவன். இந்தமூன்று பிள்ளைகளும் சகோதரனுடைய பத்தினிகளிடத்தும் அவளுடைய தாதியினிடத்துமாகிய பர (அன்னிய) க்ஷேத்திரத்திற் பிறந்தவர்களாயிருந்தும் இவர்களிடத்தில் எனக்குண்டாகிய ஆசை தர்மபத்தினியிடத்தில் பிறந்த பிள்ளைகளிடத்திலுண்டாகும் ஆசையினும் சிறந்திருந்தது. இவர்களால் சுகமில்லையென்கிற ஏகத்தையு மறந்தேன் இது மாயையின் செயலன்றோ இம்மாயையை வெல்ல ஸ்வாதீனமறிவுள்ளவர்களாலு முடியாது. அதற்கோ உருவமுங் கிடையாது; இடமுங்கிடையாது; அது உருவமும் இடமுமில்லாமலே ஞானிகள் முதலாயினோரை மயக்குவதல்லது அதனை மயக்கும் ஞானிக ளொருவருங் கிடையாது, ஓ திரிலோக சஞ்சாரியே! அதன் விலாசத்தை நானென்னென்று சொல்லுவேன் சம்சாரபந்தத்திலிருந்த நான் அதுமுதல் தாயாரென்றும் பிள்ளைகளென்றும் பந்தமுண்டாய் அடிக்கடியும் அஸ்தினாபுரத்திற்கு வருவதும் சரஸ்வதிக்குப்போவதுமாய் ஊசலைப்போலென்மன

முழல ஓரிடத்தில் நிலையாயிராமல் அலைந்து கொண்டேயிருந்தேன். அதுமாத்திரமா! ஒருவேளையில் நமக்கேனிந்த பந்தமென்று பந்தமற்றுத் தெளிவடைந்தும் ஒருசமயத்தில் நாமிறந்து போவோமாயின் நமக்குச்சிரார்த்தாதி கருமங்கள் செய்தற்குரிய பிள்ளைகளிவர்களாகாரோ; இவர்களிடத்தில் நாமேன் ஆசைவைத்துழலவேண்டுமென்று வெறுப்படைந்தும், ஒருசமயத்தில் வெறுப்படைந்திருக்கும் நம்மிடத்தில் பந்தத்தை யுண்டுபண்ணுகின்றது எதுவோ அதுவல்லவோ மாயை; அந்த மாயையை வெல்லவேண்டுமென்றும், நாம் அநியாயமாய் மோகமாகிய பாழ்ங்கிணற்றில் வீழ்ந்துவிட்டோமே என்றும் என்னுள்ளத்துள்ளே நினைப்பேன். இவ்வாறு நினைக்கத்தக்க நினைவுடன் கூடியிருக்கின்ற நான் பாண்டுவுக்கு ராஜ்யபட்டாபிஷேக மானவுடன் ஆஹா! நமது பிள்ளைக்குப் பட்டாபிஷேகமாய்விட்டதேயென்று மகிழ்ந்தேன். பின்னர் அவன் குந்தி மாத்ரி என்கிற இரண்டு ஸ்திரீகளை விவாகஞ்செய்துகொண்டு ஹஸ்தினா நகரத்தில் வசித்துப் பின்னர் பிராம்மண சாபத்தால் ஆரண்யத்தில் வசிக்கப்பெற்று ஸ்திரீகளுடைய சல்லாப சுகமற்றிருக்கின்றதைக் கேள்வியுற்று வருத்தமுற்றவனிடத்திற்போய் அவனுக்கு வேண்டிய சமாதானங்களைச் சொல்லிவிட்டு, அவனிருப்பதற்குத் தக்கபடியாய் திருதராஷ்டிரனைக்கொண்டு அவனுக்குச் சொல்லவேண்டியவைகளைச் சொல்லிப் பழையபடி என்னுடைய ஆசிரமம் வந்து சேர்ந்தேன்.

ஓ நாரதமுனிவரே! தவசியாயிருந்தும் "தவஞ்செய்வார் தங்கருமஞ்செய்வார்' என்றபடி நான் தவத்தைச்செய்யாமல் ஆசையுட்பட்டு அலைந்து திரிந்த செய்கையெல்லாம் கூறுகின்றேன், கேட்பீராக. வனவாசஞ்செய்துகொண்டிருந்த பாண்டுபுத்திரனானவன் மகப்பேறு வேண்டித் தன் மனையாட்டிகளாகிய குந்தியையும் மாத்திரியையுமழைத்து நீங்களிருவரும் இயமன் வாயு இந்திரன் அஸ்வினிதேவதைகள் என்கிற இந்த ஐவர்களால் மக்களைப் பெறக்கடவீர்களென்று அநுஞ்ஞைதர அவர்கள் அப்படியே அந்த ஐவரால் தருமன் வீமன் அருச்சுனன் நகுலன் சகாதேவன் என்கிற ஐவர்களையும்பெற்று வாழ்ந்துவர, பின்னர் ஓர்நாள் அப்பாண்டுவானவன் தனக்குள்ள சாபம் தானறிந்தவனாயிருந்தும் மாத்திரியினிடத்தில் சம்போகஞ்செய்து அவனிறந்துபோயினன். அதனைக்கண்ட அவ்விரண்டு ஸ்திரீகளும் அக்கினிப்பிர

வேசமாவதற்குத் துணிய, அங்குள்ள பெரியோர்கள் அதனைக்
கண்டு தடுக்கும்போது குந்திதேவி ஒருவாறு தடைபட்டு நிற்க,
மாத்திரிதடைபடாமல் அக்னியிற் பிரவேசமாயினள். பின்னர்
குந்தி ஐந்துபிள்ளைகளையும் வைத்துக்கொண்டு ஏககமுற்றிருக்
கும்போது சில முனிவர்கள் அவளை யழைத்துக்கொண்டு அஸ்தி
னபுரம்போய் பீஷ்மரையும் விதுரனையுங்கண்டு ஐவர்களது வர
லாற்றைச்சொல்லி அவர்களைக்காத்துவரும்படி கட்டளையிட்ட
னர். இச்செய்திகளை நான்கேட்டு அச்சுகத்துக்கங்குருக்காளாய்
பீஷ்மனிடத்தும விதுரனிடத்துஞ்சென்று அவர்களைப் பாதுகா
க்கவேண்டிய விஷயங்களைப்பற்றி யாலோசித்து அப்பாண்டுபுத
திரர்களைக் காத்துவரும்படிச் செய்தேன். பின்னர்பாண்டுபுத
திரர்கள் துரியோதனாதியரால பலகொடுமைக ளநுபவித்து வரு
வதைப் பீஷ்மனகண்டு அவர்களைப் பிரியாமலிருந்து துரோணா
சாரியரால் தநுர்வித்தையில் சமர்த்தராகும்படிச்செய்து வருநா
ளில், கன்னனுடையபலத்தால துரியோதனனுக்குச் செருக்குண்
டாய் கலகமுதிர்ந்து துரியோதனாதியர்க்கும வீமனுக்கும பகை
யதிகரித்து வருவதைத் திருதராஷ்டிரனறிந்து இனி யிவர்களை
யொன்றாய் வாழும்படிச் செய்வோமாயின பெருங்கலகம விளையு
மென்றஞ்சிப பாண்டுபுத்திரர்களை வேறிடத்தில் வைத்தனன்.

அப்படி வைத்திருந்தும் துரியோதனன தீங்கானவெண்ண
முடையனாதலால அரக்குமாளிகை யொன்றமைத்து அதில் அவ
ர்களை வைத்துத்தீயிட்டனன். அதுகொண்டுகொடுமைக கேட்ட
நான் அழுதுபுரண்டலறித் துக்கித்த துக்கம இவ்வளவென்று
சொல்லிமுடியாது. பின்னரவர்களைக் காணவேண்டுமென்று காடு
களெல்லாந் திரிந்து திரிந்தலைந்து அவர்களைக் கண்டுபிடித்து ஏக
சக்கிரநகரத்துக்கனுப்பி ஒருவாறு மனத்திருப்தியடைந்து, அத
ன்பின்னர் துருபதனுடைய பட்டணத்துக் கனுப்பினேன். பின
னரவர்கள் திரௌபதியினுடைய சுயம்வரத்தில் மிகவும்மெலிந்து
வணக்க முள்ளவர்களாயும் துக்கிதர்களாயும பிராமணவேடம்
பூண்டு மான்றோலைத் தரித்தவர்களாயும வந்துசேர்ந்தனர். அவர்
கள் வேடத்தைக்கண்டு பெருந்துயரத்தையடைந்தேன் இதுவெ
ன்ன பந்தமையா! அப்படித் துயரத்தோ டிருக்குமபொழுது
அருச்சுனன் அச்சுயம்வரத்தைத் தன்னுடைய தாக்கிக்கொண்டு
அந்தப்பாஞ்சாலியைத் தாயினுடைய ஆணையின்படி ஐவரும

கலியாணஞ்செய்துகொண்டமையைக்கண்டு ஆனந்தித்தேன். பின்னரவர்கள் பாஞ்சாலியுடன் அஸ்தினாபுரம் போயிருக்க, அதைவிட்டுத் திருதராட்டிரனும் கிருஷ்ணபகவானும் காண்டவப்பிரஸ்தத்தில் வசிக்கும்படியாய் வந்தனர். அதில் வசித்திருந்து பின்னரவ்விடத்தை அருச்சுனன் அக்கினிக்கவளுக்குத் திருப்தியாககிவிட்டனன். அதன்பின்னர் தருமராஜன் ராஜசூயயாகஞ்செய்து பெரும்பட்டத்துடனிருக்க நானதைப்பார்த்து எனக்கே அப்பட்டம் வந்ததுபோலும் மிக்க சந்தோஷமடைந்தேன். அப்பாண்டவர்கள் துரியோதனனுடைய பொறாமைச்செயலால் யாவுந்தோற்றுச் சகலசெல்வங்களையுமிழந்து திரௌபதிக்கு மானபங்கமும் வரப்பெற்று வனவாசமெய்தியவராய் வருந்தாநிற்ப, நானவையெல்லாங் கேட்டுப் பெருந்துக்கத்துக் காளாயினேன். ஓ நாரதபகவானே! இந்தத்துக்கப்பிரதமான சம்சாரத்தின் அநாதிதர்மத்தை யானறிந்திருந்தும் மோகமயத்தினால் சுகதுக்கங்களில் மூழ்கிப்போய்விட்டேன். நான் யாருடைய பிள்ளை அவர்கள் யாருடைய பிள்ளைகள் தாய் யார் என்பதுந் தெரிந்திருந்தும், என்மனது இராஜ்யபாகத்தும் மோகத்தினால் கழன்று கொண்டு எங்கே போவேனென்ன செய்வேனென்று ஆலோசித்தாலும் சந்தோஷம் சிறிதுமடையாமல், உன்மத்தவிசேஷியாடுகின்றவனைப்போல் ஆடியாடி அலைந்துழன்றதேயன்றி ஸ்திரமாயொன்றிலும் நின்றதின்று. ஓ முனிஸ்ரேஷ்டரே! நீர் சர்வக்ஞராயிருக்கின்றீர். இந்த மோகத்திற்குக் காரணமென்னையோ! அதனையெனக்குச் சொல்லிச் சந்தேகத்தை நிவர்த்தித்து நானெப்படி மனவருத்த மின்றிச் சுகமாயிருப்பேனோ அப்படிச் செய்யுமென்று விண்ணப்பஞ்செய்தனர்.

திருதராட்டிரன் பாண்டு உற்பத்தி முற்றிற்று.

## 12. நாரதருக்குக் குரங்கு முகமானது.

இவ்வார்த்தைகளை யெல்லாம் கேட்டுணர்ந்த தவசிரேஷ்டராகிய நாரதமுனிவர் சிரித்துச்சொல்லுகிறார். ஓ வியாசரே! புராணமெல்லாஞ் செய்தவரே! நீர் என்னை என்னகேட்கின்றீர்? இச்சம்சாரத்திலமோகமில்லாத மனிதனுமுண்டோ? பிரமனுதியரும் சனகர் கபிலர் முதலாயினோரும் மாயையினால் சூழப்பட்டவர்க

ளாய்ச் சம்சாரமார்க்கத்திற் றிரிகிறார்களென்று சொன்னால் ஏனையரைச் சொல்லவும் வேண்டுமோ? அவர்களெல்லா மங்ஙனமிருக்க, உலகிலென்னை ஞானியாக அறிந்துகொண்டிருக்கின்றார்களே அவர்களறிந்தவண்ணம் நானிருக்கின்றேனா? இல்லையே. நானெல்லாரைப்போலும் மோகமடைந் திருக்கின்றவன்றானே யன்றி வேறில்லை. ஓ வியாசரே நான் பூர்வம் ஸ்திரீமோகத்தினால் குரங்குமுகத்தையடைந்து ஓரரசபுத்திரியை விவாகம் செய்துகொண்டுழன்ற பெருந்துக்கமான விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன் கேட்பீராக.

ஓர்காலத்தில் நானும் பர்வதமகாமுனியும் தேவலோகத்திலிருந்து பூலோகத்துக்குவந்து பூப்பிரதக்ஷிணஞ்செய்து உத்தமமான பரதகண்டம் வந்தடைந்து, ஆங்காங்குள்ள புண்ணியதீர்த்தங்களையும் புண்ணிய க்ஷேத்திரங்களையும் முனிவராசிரமங்களையுங் கண்டுகளித்து உலாவினோம். ஓ வியாசரே! நாங்கள் பூலோகத்துக்கு வரும்போது பரஸ்பரம் ஒருவருக்கொருவர் ஓர் சங்கேதஞ் செய்துகொண்டு புறப்பட்டோம். அஃதென்னையெனின், நம்மிருவருக்குள் எந்தெந்தவிடத்தில் யாருக்கு எப்படியெப்படி மனோவிருத்தி யுண்டாகிறதோ அதை மறைக்காமல் சொல்லிவிடவேண்டும். அது நல்லதாயினும் கெட்டதாயினும் மறைக்கக்கூடாது அன்றியும், போஜனம் தனம் ஸ்திரீ என்னுமிவ்விஷயங்களில் யாருக்கு எப்படி மனதுண்டாகிறதோ அதையுமப்படியே ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ள வேண்டுமென்று சபதபூர்வகமாய்ச் சங்கேதஞ்செய்துகொண்டோம். செய்துகொண்டபடியே ஒரே மனமுள்ளவர்களாய் இஷ்டப்படி எங்குந்திரிந்து வரும்போது கிரீஷ்ம காலத்தின் முடிவுபவவே சஞ்சயமென்கிற பட்டணம் வந்துசேர்ந்து அந்நகராதிராசனால் நாங்கள் கௌரவத்தோடும் பக்தியோடும் பூஜிக்கப்பட்டவர்களாய் அவனுடையவீட்டில் நான்குமாதமிருந்தோம். ஏனெனில் நான்கு மாசமும் மழைக்காலமாகையால் வழிநடப்பவர்கட்கு மிகவும் வருத்தத்தை யுண்டாக்கும் ஆனதுபற்றியே அறிவுள்ளவர்கள் அந்நான்குமாதமும் ஒரேவிடத்திலிருந்து ஏனைய எட்டுமாதங்களில் காரியார்த்தமாய்த்திரிவர். வெளியில் சுகத்தைக்கோருகிறவர் மழைக்காலத்தில் பிரயாணஞ் செய்யக்கூடாது. ஆனதால் நாங்கள் அரசன்வீட்டில் வாசஞ்செய்து வந்தோம். அந்த மஹாராஜனே பிரதிதினமும் எங்களுக்குப் பிக்ஷையென்கிற் மரியா

தையில்லாமல் விருந்தென்கிற மரியாதையில் போஜனத்தை நடத்திவந்தனன். அதுவுமன்றி தமயந்தி யென்று பிரசித்திபெற்ற தன்மகளையும் எங்களுக்குப் பரிசாரஞ்செய்ய வேற்படுத்தினன். மிக்க அழகான தந்தவரிசையும் சுந்தரத்தையும் நல்லவிவேகத்தையும் பாந்தகண்களையுமுடைய அந்தராஜ புத்திரியும் எங்களிருவருக்கும் செய்யவேண்டிய பணிகளில் எந்தச்சமயத்திலு முயற்சியாயிருப்பது மன்றி ஸ்நானகாலங்களில் வேண்டியவரையில் சுத்தமான தீர்த்தமும் போஜனசமயத்தில் இஷ்டமான போஜனமும் அதுமுடிந்தபின்னர் தாம்பூலமும் மற்றுமிடையிடையே வேண்டியவைகளும் கொடுத்துக்கொண்டு வருவாள். இவையன்றி நாங்கள் கேட்பதற்குக் கூடாமல் மனதால் விரும்பப்படுவனவாகிய ஆசனம் சயனம் முதலானவற்றைத் தானே குறிப்பாலறிந்து அவைகளை யமைப்பாள். இவ்வண்ணம் அவருடைய பணிவிடையில் சுத்தகாலம் அங்கு நாங்கள் ஆவலுள்ளவர்களாய் வசித்திருக்கும்போது நான் வீணையைக் கையிலெடுத்துச் சாதனநிமித்தம் உத்தமமான ஸ்வரத்தை ஆலாபனஞ்செய்துகொண்டு மனதுக்கினிய சாமகானத்தைப் பாடிவருவேன். அச்சமயங்களில் ராஜபுத்திரி யேகாந்தமான அக்கானத்தைக் கேட்டு வருவதனால் என்னிடம் மிகவும் ஆவலுள்ளவளாயினாள். எனக்கும் அப்பெண்ணிடத்தில் மிக்க பிரீதியுண்டாயிற்று. பின்னர் எங்களிருவருக்கும் உண்டாகிய ஆசை விருத்தியாயிற்று. அதனாலவள் போஜனமுதலிய சகலகாரியங்களிலும் என்னிடம் நல்ல பிரீதியாய் விசாரிப்பதும் என்னுடனிருக்கும் பர்வதமுனிவரைச் சாமானியமாய் விசாரிப்பதுமா யிருந்தனள். இந்தப் பேதவுபசாரமும் தினேதினே விருத்தியடைந்து என்னுடைய ஸ்நானத்துக்கு வெந்நீரும் அவருக்குக் குளிர்ந்த ஜலமும் எனக்குத் தயிரும் அவருக்கு மோரும் இப்படியே உண்பனவற்றிலும் உடுப்பனவற்றிலும் ஏனைய பணிகளிலும் வேறுபாடே செய்து வருவதோடு எனக்குரிய படுக்கையை மிக வெண்மையாயும் மிருதுவாயுமுள்ளதைப் போடுவாள். அப்படிப்பட்டதை அவருக்குப்போடமாட்டாள். என்னைச் சந்தோஷமாயும் அவரை வெறுப்பாயும் பார்ப்பாள். இவ்வாறு இவள் செய்யும் பேதத்தால் பர்வதமகாமுனி இவளிப்படி நடத்துவதற்குக் காரணமென்னை யென்று ஆச்சரியத்தோடு மனதில் சிந்தித்து என்னை ரகசியமாயழைத்து ஓ நாரதமுனியே! இந்த ராஜ

புத்திரி உன்னிடமெப்பொழுதும் பிரீதியுடன்வேலைசெய்கின்றது மன்றி உனக்குவேண்டிய போஜனமும் பக்ஷணமும் நீர்வேண்டா மென்று தடுத்தாலும் வேண்டிவேண்டி யுணவிக்கிறாள் நானோ வேண்டுவதாயில்லை வேண்டினாலும் அவள்கொடுப்பது மில்லை, உன்னிடத்தில் அப்படியும் என்னிடத்தி லிப்படியுமாயிருப்பதற் குக் காரணந் தெரியாமையாலெனக்குச் சந்தேகத்தை விளைவிக் கின்றது. இதனால் இந்தராஜபுத்திரி உன்னைப் பர்த்தாவாகச்செய் துகொள்ள இச்சிக்கிறாளென்றும் நீயுமப்படியே அபிப்பிராயப் பட்டிருக்கிறாயென்றும் உங்களிருவரிடத்து முண்டாயிருக்குங் கண்செய்கைகளாலும் முகக்குறிப்புகளாலும் நானறிகின்றேன். உள்ளே நிகழுமெண்ணத்தைக் கண்ணும் முகமுங் குறிப்பினால் உணர்த்துமன்றோ. ஓ நாரதமுனியே! நாம்புறப்படும்போது இரு வருஞ் செய்துகொண்ட சங்கேதத்தை நினைத்து பொய்ம்மையை யொழித்துண்மையைக் கூறுவாயாக வென்றார். இவ்வாறு அவ ரென்னைப் பலாத்காரமாயழைத்துக் கேட்டபடியினாலே நான் வெ ட்கப்பட்டுக்கொண்டு ஓ பர்வதமுனியே! நீர் சொல்லிய படியே இருவருக்கும் ஆசையுண்டாயிருப்பதிற் றடையில்லை. அதுவுண மைதானென்று சொன்னேன். அவர் கோபங்கொண்டவராய் ஓ நாரதரே முதலாவது நாமசெய்துகொண்ட சபதப்படி யுனக்குண டாகிய இச்சையையேன சொல்லாதிருந்தாய். இரண்டாவது என்னை வெறுத்திருக்கும் அவளை நீ வெறுக்காது மோகங்கொண் டிருக்கின்றாய் இவ்விரண்டு துரோகமானசெயலாதலா லுன்னை ப்போலுந் துரோகி யொருவனுண்டா? சீசீ இனி உன் முகம் குர ங்குமுகமாகப் போகக்கடவதென்று சபிக்க, நான் அக்கணமே அம்முகத்தைப்பெற்றேன். பின்னர் நானும் அவரை உடன்பிறந் தான் பிள்ளையென் றெண்ணாது அதிககோபத்தோடு மூடாத்மா வாகிய நீ சொற்ப குற்றத்திற்காகச் சபித்தபடியால் உனக்குச் சொர்க்கத்தில் வாசமில்லாமல் மிருத்யுலோகத்தில் வாசமுண் டாகக் கடவதென்று சபித்தேன்.

அச்சாபத்தைக்கேட்ட முனிவர் மனவருத்தத்துடன் அப் பட்டணத்தைவிட்டுப்போயினர். எனது வீணாகானத்தைக்கேட்டு வந்த அந்த ராஜபுத்திரி எனதுமுகம் வானர முகமானதைப் பார் த்து மிகவும் மனவருத்தமுற்றனளென்று நாரதர்கூற, வியாசர் ஓ பிரமசொரூபியே! பின்னர் நீரெப்படி அச்சாபத்தினின்றும்

யும் பட்டணங்களையும் முனிவர்களுடைய ஆச்சிரமங்களையும் அழகான நடபாவிகளையும் தடாகங்களையும் தாமரை மலர்களா லழகுபெற்றிருக்கும் மடுக்களையும் பசுக் கூட்டங்களையும் ஏனைய மிருகக்கூட்டங்களையும் பன்றிக்கூட்டங்களையும் பார்த்துக் கொண்டே கானனிய குப்ஜிபமென்னும பட்டணத்துக்கு வந்து, அங்கு திவ்யமான ஓர் தடாகத்தைப் பார்த்தோம். அது தாமரை முதலிய மலர்களால் பிரகாசிக்கபபெற்ற வழகுள்ளதாயும் வண்டினங்களால் சபதிக்கப்பெற்றதாயும், அன்னப்பட்சி காரண்டபக்ஷி சக்கரவாளப்பட்சி முதலிய சிறந்த பட்சிகளால் நிரம்பப்பெற்றுள்ளதாயும், பாற்கடலோடுபோர்செய்ய வெழுந்திருப்பதுபோல் மேலோங்கிய சலசமர்த்திதியைப் பெற்றுள்ளதாயு மிருந்தது.

இவ்வாறான அதன்சிறப்பை நான்கண்ணுற்று அதிசயத்துடனிருக்குஞ் சமயத்தில், விஷ்ணுமூர்த்தி ஓ நாரதனே! இந்தநிர்மலமான தீர்த்ததத்தில் ஸ்நானஞ்செய்து பின்னர் இப்பட்டணத்தையும் பார்க்கப்போவோமென்று சொலலிச் சிரித்துக்கொண்டே எனது சுட்டுவிரலைப் பிடித்துக்கொண்டு சுற்றிவந்து அந்த சிரேஷ்டமான தடாகத்தைப் புகழ்ந்து, அதன் கரையிலிருக்குமோர் மரநிழலிற்சற்றிளைபபாறி ஓ நாரதனே! சாதுக்களுடைய மனம்போல் நிர்மலமாயிருககு மித்தீர்த்தத்தில் நீ முன்னே ஸ்நானஞ்செய்க, பின்னர் நானுஞ் செயகிறேனென்று சொல்லவே, அவர்சொலலை நமபி நான் வீணையையும் கிருஷ்ணாசனத்தையுங் கரையில் வைதது விட்டு முனனர் கைகால்களையலம்பிச் சிகையை முடித்து ஆசமனஞ்செய்து தர்ப்ப பவித்திரந தரித்துக்கொண்டு அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து கரையேறி என்னைப் பார்க்கின்றபொழுது நான சாவாபரணந்தோடுங்கூடி ஸ்திரீரூபமாயிருக்கக்கண்டு ஆச்சரியப்பட்டு பூரவதேக நிலைமையையும் மாயாவியான நாராயணரையும் எனது வீணையையு மறந்துத் தடாகத்தைத் திரும்பிப்பார்த்து இதுவென்ன வதிசயமென்று அங்கு நின்றிருந்தேன். பின்னரங்கு நல்லவயதுடன் சர்வ பூஷணலங்கிருதனாய் மன்மதனே வுருவங்கொண்டாற்போல் விளங்கும தாலத்துவஜனென்னும் அரசன சதுரங்கசேனைகளோடு ரதாரூடனாய் வந்து திவ்யமான பூஷணங்களா லலங்கரிக்கப் பட்டுப பௌர்ணிமி சந்திரன்போல் பிரகாசிக்கின்ற முகமுள்ளவளாயிருக்கின்ற வென்னைப்பார்த்து ஆச்சரியமடைந்து ஓ கலியாணசுக்

தரி! நீ யாருடைய பெண்? தேவபுத்திரியா? நாககன்னிகையா? வஸ்த்ரத்தாலும் பூஷணத்தாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும் நீ எப்படிச் சகாயமின்றி இங்கு தனித்திருக்கிறாய்? நீ கலியாணஞ்செய்யப்பெற்றவளா? கன்னிகையா? உண்மையைக்கூறுவாய். தடாகத்தில் என்ன பார்க்கின்றாய். மன்மதனையும் மோகிக்கச்செய்யவல்ல ஓ சிறிய பெண்மணி! உன் கோரிக்கையாது? நீ என்னைப் பர்த்தாவாகக்கொண்டு நானாவித போகங்களையு மநுபவிப்பாயென்று கூறினன். அவ்வசெய்தி யிங்ஙனமிருக்க, நாராயணமூர்த்தி என்னுடைய வீணையையும் மான்றோலையும் எடுத்துக்கொண்டு கருடாரூடராய் அதிவேகமாய்த் தன்னிடம்போய்ச்சேர்ந்தார்.

## 15. நாரதர் தாலத்துவஜன் மனைவியானது.

வியாசமுனிவரை நாரதமுனிவர் பார்த்து ஓ முனிவரே! தடாகக்கரையில் வந்துநின்ற அரசன் சொல்லியவையெல்லாங் கேட்டு என்மனதில் நன்றாயாலோசித்தும் ஒன்றுந்தோன்றாமையால் அவனைநோக்கி ஓ அரசனே! நான் இன்னாருடைய பெண்ணென்பதையறிந்திலேனிது நிச்சயம். இந்ததடாகக்கரையில்நான் வந்திருப்பது பிரமன் விதித்தவிதியன்றி வேறில்லை. இனி ஆதாரமில்லாதிருக்கின்ற யான் என்செய்வேன் எங்குச்செல்வேன் எனக்கு நன்மையுண்டாகும் வகையாது? என முயற்சியாதொன்றுமில்லை. தெய்வசங்கற்பம் எவ்விஷயத்தில் யாதாயிருக்கின்றதோ அதனையுமறியேன். நீர் தருமமறிந்த அரசனாயிருத்தலால் உமக்கியாது தோன்றுகின்றதோ அதனைச்செய்யும். என்னை ரக்ஷிக்கற்குரிய தாய்தந்தை முதலிய பந்துக்களுமில்லாமல் உமது அவாதீனையாயிருக்கின்றேனென்று நான்சொல்லி வரும்போது, அவன் என்பால் காமங்கொண்டவனாய்த் தனது சேவகர்களைநோக்கி ஓ சேவகர்களே! இவளை நானழைத்துக்கொண்டு போகவேண்டியிருப்பதால் முத்துச்சரங்களாலும் வெண்பட்டுகளாலும் மிருதுவான மெத்தைகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ள ஓர் சிவிகையைக்கொண்டு வாருங்களென்ன, அவர்களப்படியே கொண்டுவர அவ்வரசன் என்னை அச்சிவிகைமீதேற்றிக்கொண்டு மிக்கசந்தோஷத்துடன் தன்னரண்மனைக்குச்சென்று சுபலக்கினங்கூடிய சுபதினத்தில் விதிப்படி அக்னிசாக்ஷியாய் என்னை விவாகஞ்செய்து

கொண்டனன். நானவனுக்குப் பிராணநாயகியாயும் அவனால் சௌபாக்கிய சுந்தரியென்று பெயருடையவளாயும் அவனுடனே செய்யப்படும் கிரீடைகட்கெல்லா முரிமையுடையவளாயும் விசேடமான சுகங்களையநுபவித்துக் காமசாஸ்திரத்தில் சொல்லப்பட்ட விலாசங்களுக்கெல்லாம் உரித்தானவளாயுமிருந்தே னதனால அவ்வரசன் தன்னரசுகாரியங்களையெல்லாம்விட்டு மன்மதனுக்காளாய இரவும்பகலும் கிரீடிப்பதில் ஆவலுள்ளவனாய் இவ்வளவு காலமாயிற்றென்பதை யறிந்துகொள்வதற்கும் அறிவில்லாதவனாய் உத்தியான வனங்களிலும் ஆரணியங்களிலும் உல்லாசமாயிருக்கத்தக்க மாளிகைகளிலும் மெத்தைகளிலும் வாவிகளிலும் உயர்ந்த பலகைகளிலும் இருந்து மதுபானஞ்செய்து மத்தவனாய் விளையாடிக்கொண்டு என்சுவாதீனமாயிருந்தனன். ஓ வியாசரே! நானும் அவனுடனேகூடி ரமித்திருந்தேனே யல்லது என்து பூர்வஜன்மம் முனிஜன்மமென்பதை நினையாதவனாய் இவன் நடந்தோதா; நானே இந்த அரசனுக்குள்ள ஸ்திரீகளில் இஷ்டமான பத்னி. நானே பட்டத்தரசி. நானே காமவிலாசமறிந்தவள். நமக்கிப்படிப்பட்ட புருஷன் கிடைத்ததினாலன்றோ நம்முடைய ஜன்மம் சபலமாயிற்றென்று, இரவும்பகலும் அவனிடத்தில் ஆசையுள்ளவளாய்க் கிரீடித்திருந்தேன். அந்தோ! எனக்கு முன்னுள்ள பிரமஞானமும் பிரமவிஞ்ஞானமும் தர்மசாஸ்திர பரிஞ்ஞானமும் மறந்துபோயின. ஓ வியாசமுனிவரே! இவையெல்லா மறந்தவளாயும் அஞ்ஞானமும் அஞ்ஞான விஞ்ஞானமும் அதர்மசாஸ்திர பரிஞ்ஞானமுமாகிய இவற்றை மறவாதவளாயும் அரசனோடு கிரீடிக்குஞ் சுகமே பெரியபாக்கியமாய்ப் பன்னிரண்டு வருடகாலம் ஒருக்ஷணகாலம்போலக் கழித்தேன் என் தவமெல்லாம் கொள்ளைபோகவந்த அக்காலத்தில் கர்ப்பவதியுமாயினேன். அதனை அரசன்கண்டு மகாசந்தோஷமடைந்து விதிப்படி சீமந்தமுதலிய சடங்குகளை நடத்தி கர்ப்ப சமஸ்காரஞ்செய்து அடிக்கடி என்னை சந்தோஷப்படுத்தி, உனக்கென்ன இஷ்டமென்று கேட்பான். எல்லாவித்த்தாலுஞ் சந்தோஷமடைந்திருக்கிற நான் வெட்கத்தினாலொன்றுஞ் சொல்லாமலிருப்பேன், பத்தாவதுமாதம் பூர்த்தியாகும்போது சுபநட்சத்திரத்தோடும் தாராபலத்தோடுங் கூடின சுபதினத்தில் புத்திரோற்பத்தியாயிற்று. பின்னர் செய்யவேண்டிய புத்திரோற்சவத்தையும் நடத்தி வீர

வர்மனென்று பெயரிட்டுப் பிள்ளையைப்பார்த்து மகா சந்தோஷ சித்தனு மென்னிடம் முன்னையிலு மிக்கபிரீதியுடையவனுயினன் நானுமவன்பா லப்படியேயிருந்து இரண்டுவருஷங்கழித்து கர்ப்ப வதியாய் சர்வலக்ஷணத்தோடுங்கூடிய இரண்டாவதுபிள்ளையைப் பெற்றேன். அவனுக்குமப்படியே அரசன்செய்யவேண்டியபுத்தி ரோற்சவத்தைநடத்தி சுதன்மனென்று பெயரிட்டான். இப்படி யே அறுபது பிள்ளைகளைப்பெற்று பிரபவ, விபவ, சுக்ல, பிரமோ தூத, பிரஜோத்பத்தி, ஆங்கீரசவெனும் முதலானப் பெயர்களிட் டுப் பின்னர் அப்பிள்ளைகளுக்கெல்லாம் விவாகம்நடத்தி அப்பெ ண்களாலும் பிள்ளைகளாலுஞ்சூழப்பட்டவளாய்ப் பெரியசமுசாரி யாய்ப் பின்னரப் பிள்ளைகளுக்கெல்லாம பிள்ளைகள்பிறக்க, அப பேரன்மார்களுடன் சல்லாபமுடையவளாய்அவர்களவிளையாடும விளையாடலைக்கண்டு மோகம விருத்தியடையபபெற்றவளாயினே ன். ஓ முனிவரே! இக்காலவரையிலசுகமனறி வேறொன்றறியேன. அதன்பின்னர் சிலவேளைகளில் சுகமும சிலவேளைகளில் துக்கமும் சிலவேளையில் ஐஸ்வர்யமும் சிலவேளையில் ஆச்சர்யமு முடைய வளாயிருநதேன். அதன்பின்னர் பிள்ளைகளுக்கு ரோகமுண்டா கும்போது தேகசநதாபமும் சிலசமயத்தி லொருவருக் கொருவ ர்க்குண்டாகுங்கலகங்களால பயஙகரமும், மருமக்கமார்களுக்குண் டாகுங் கலகங்களால் மரண துககத்துக்குச சமானமான துக்கமு முண்டாயிற்று. ஓ முனிவரே! இவவண்ணம் நான அஞ்சததக்க பொய்நடத்தையுள்ள சுகதுக்க சொரூபமான சம்சாரததில் மூழ் கினவளாய் பூர்வஜஞானமும்போய் சாஸ்திரஜ்ஞானமு மறந்து மாயையினு லாவரிக்கப்பட்டு எப்பொழுதும் வீட்டின் காரியத்தி லேயே ஆசையுள்ளவளாய் மோகததைவிருத்திபண்ணுகிற அகம பாவமுடையவளாய் நம்முடையபிள்ளைகளெல்லாம் மகாபலசாலி கள்; மருமக்கள்களெல்லாம் நற்குலத்திற் பிறநதவர்களென்கிற கர்வமடைந்து நம்முடைய பிள்ளைகளெல்லாம வீட்டில் விளையா டிக்கொண்டிருக்கிறுர்கள். சம்சாரியானஸ்திரீகளுக்குள் நமமைப் போலும் யாருள்ளார்? நாமே புண்ணியவதி யென்றுமாந்தே னையா! நாம் நன்னடைக்கையுள்ள ராஜபத்தினி வெகுபுத்திரர் களையுடையோம் பதிவிரதை யென்றும் சம்சாரததில் வெகுபுண் ணியவதி யென்றும் பெயர்பெற்றுள்ளோ மென்றிருந்தேனே யல் லது ஒருநாளாவது நாம் நாரதனல்லவாவென்றும் விஷ்ணுமூர்த் தியால்வஞ்சிக்கப்பட்டோமென்றும் மனதினுல் சிந்தித்தேனில்லை.

பின்னர் தூரதேசத்திலிருக்கும் ஒரு பெரிய அரசன் என் பர்த்தாவுக்குச் சத்துருவாய் ரதகஜதுரகபதாதிகளுடன் வந்து யுத்தத்திற்கழைத்து பட்டணத்தைச் சூழ்ந்துகொள்ளவே என் பிள்ளைகளும் பேரன்மார்களும் யுத்தசன்னத்தர்களாய்ப் பட்டணத்திற்கு வெளியேபோய் அவனோடு போர்புரிந்து காலவசத்தால் சத்துருவினால் மாண்டனர். அரசனோ தோல்வியடைந்து பிள்ளைகளும் பேரன்மார்களும் மாண்டதையெண்ணாது என்னையெண்ணித் தானுயிர்விடுதற்கஞ்சி வீட்டுக்குவந்தனன். நான் என்மக்களிறந்து போனமையைக் கேள்விப்பட்டு பிள்ளைகளையும் பேரன்மார்களையும் போர்க்களத்திற்பார்த்து சோகசாகரத்தில் மூழ்கி ஆ பிள்ளைகளே! எங்கேபோய்விட்டீர்கள்? பலிஷ்டமான பாழுந் தெய்வத்தினால் நான் வஞ்சிக்கப்பட்டேனே யென்றழுதுகொண்டிருந்தேன்.

## 16. நாரதர் பழயபடி புருஷரூபம் பெற்றது.

இவ்வாறு துக்கித்திருக்கும்போது மறுபடியும் விஷ்ணுமூர்த்தியானவர் நல்லவஸ்திரமுடுத்திக்கொண்டவராயும் வேதமெல்லாமறிந்தவராயுமுள்ள ஓர் நல்ல விருத்தப்பிராமண வேஷங்கொண்டு போர்க்களத்திலென்சமீபத்தில்வந்து அழுதுகொண்டிருக்கிற வென்னைப்பார்த்து, அம்மா வென்னழுகிறாய், பர்த்தாவென்றும் மாடென்றும் புத்திரர்களென்றும் பௌத்திரர்களென்றும், வீடென்றும் ஒவ்வொரு ரூபங்கொண்டு வந்த இச்சம்சாரத்தில் வைத்த மோகத்தினால் துக்கம் நேரிடுகின்றதேயன்றி ஆராய்ச்சி செய்யுங்கால் நீயார்? இந்தப்பிள்ளைகள் யார்? இவர்களைப்பற்றி யுனக்கென்ன சம்பந்தம்? ஒன்றுமில்லை. இனி நீ உன்னாத்மா கடைத்தேறுவதைப்பார்; எழுந்திரு அழுகையை நிறுத்து. மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டு பரலோகமடைந்த புத்திரர்களுக்கு வழக்கப்படி செய்யவேண்டிய தகனாதிகளை நடத்துவாயாக. வெளியேயுள்ள தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வோம். வீட்டிலுள்ள தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தலாகாதென்று தர்மசாஸ்திரம் விதித்திருக்கின்றது. ஆகையால் புறப்படென்று என்னைச்சூழ்ந்து வரும்படிச்செய்து, தான் முன்னே நடந்து புருஷ தீர்த்தமென்னும் ஓர் தீர்த்தத்துக்குப்போய் என்னைப்பார்த்து ஓ பெண்யா

னைப்போல நடக்கிற ஸ்திரீயே! இத்தடாகத்தில் ஸ்நானஞ் செய். வீணை துக்கத்தைவிட்டுவிடு. புத்திரர்களுக்கு உத்தர கிரியை செய்யவேண்டிய காலம்வந்து விட்டது உனக்கு முன் ஜன்மங்களிலிறந்துபோன பிள்ளைகள் எத்தனை கோடியோ தாய் தந்தையர்களெத்தனைகோடியோ புமான்களாயிருந்தவர்களெத்தனை கோடியோ. அப்படியே சகோதரர்களும் எத்தனை கோடியோ இந்தப்பிராந்தி ரூபமான சம்சாரத்தில் நீயாருக்கென்றழுவாய். பொய்யாயும் சொப்பனத்துக்குச் சமானமாயும் பிராணிகளுக்குத் தாபத்தையுண்டுபண்ணுகிற இந்தச் சம்சாரத்திலழுது முடியுமோவென றென்னைத்தேற்றி, அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்வித்தார். அதில் முழுகி யெழுந்தவுடன் எனக்குப் புருஷ ஜன்மம் வந்துவிட்டது. விஷ்ணுமூர்த்தி எனது வீணையையும் கிருஷ்ண சனத்தையுங் கையிலேந்தி நின்றனர். அவரை நான் பார்த்தும் எனக்குப் பூர்வ உணர்ச்சி வந்து நாம் இங்கே ஏன் வந்திருக்கிறோம். நமக்குப் பெண்தன்மை யிவரால்தான் வந்தது. இவர்தானிம்மாயையைச் செய்தவரென்று சிந்தித்திருக்கின்ற போது, அவர் ஓ நாரதமுனியே! ஜலத்திலென்ன செய்கிறாய்? போகலாம் வாவென்றார். அப்போது தாருணமான பெண்தன்மை யிக்காரணத்தால் வந்ததென்றும் மறுபடியும் ஆண்தன்மை இக்காரணத்தால் வந்ததென்றும் அறிந்துகொள்ள சக்தியில்லாதவனாய் விட்டேன்.

## 17. நாரதருக்கு மகாவிஷ்ணு மாயை மகத்துவஞ் சொன்னது

நாரதமுனிவர் வியாசபகவானைப்பார்த்து ஐயா! பின்னடந்த என தற்புத சரித்திரத்தைக்கேளும். வியாசமுனிவரே! நான் ஸ்திரீவடிவமொழிந்து புருஷவடிவமானதை என்னுடன் வந்த என்னாயகனாகிய அரசன் பார்த்து ஆச்சரியமடைந்தவனாய் என் மனையாட்டி எங்கேபோனாள்? இந்த முனி யார்? இவர் என்மனையாளுடன்முழுகவில்லையே. அவள்தான் முனியாய்விட்டனளோ? இல்லை! இல்லை!! அவளெப்படி முனியாவாள்? அந்தோ! நானென்செய்வேன்! என்னிஷ்டையான என்னாயகியே! உன்பிரிவினால் நானழுதுகொண் டிருக்கின்றேனே! என்னை யழும்படியாகச் செய்துவிட்டு நீ எங்கேபோய் விட்டாயென்று சிறிதும் லச்சையி

ன்றி ஓவென்று பெருங்குரலிட்டழத்தொடங்கி! ஓ பெருத்த கொடையுள்ளவளே! தாமரைமலர்போன்ற கண்களுள்ளவளே! ஓ புன்சிரிப்புள்ளவளே! நீ யிரங்காமல் என்னை யிப்படிப் பிரிந்துபோனாய்? என் கிருகமும் என் ராஜ்யமும் வீணாய்ப் போயிற்றே. என் பிள்ளைகளெல்லாம் இறந்தும் என் பிராணனையுனக்காக வைத்திருந்தேனே. இப்பொழுதும் உன் விரகத்தினாலே பிராணன் வெளியே போகாமலிருக்கிறதே. என்னுடன் பிரியமாயிருந்த நீ மாத்திரம் என்னை வஞ்சித்தாயே! ஓ விசாலமான கண்ணுடையாளே! நானழுதுகொண்டிருக்கின்றேனே உன் கண்ணுக்குத் தெரியவில்லையா! நானுன்னைப் புருஷனில்லாதவளென்றெண்ணியிருந்தேனே இப்போது நீ அந்தப் புருஷனிடத்தில் போயிருப்பதாகத் தெரிகின்றதே. நீ அப்படியிருந்தாலு மென்னுடனொரு வார்த்தைச் சொல்லக்கூடாதா? முதலிலென்னைச் சேர்ந்தகாலத்தில் நீ வைத்திருந்த பிரீதியெல்லாம் இப்பொழுதெங்கே போயிற்று? அந்தோ! நீ உயிரோடிருந்தால் இப்படி யிருக்கமாட்டாய். தாராகாரமாயிருக்கிற புருவங்களுள்ளவளே! நீ ஜலத்தில் முழுகினபோது மச்சங்களாலும் கூர்மங்களாலும் பக்ஷிக்கப்பட்டனையோ? அல்லது என்னுடைய தௌர்ப்பாக்கியத்தினாலே திக்பதியாகிய வருணனபிஷ்டத்தாற்கொண்டு போய்விட்டானோ? அல்லது ஓ அழகான அங்கங்களுள்ளவளே! உன் பிள்ளைகளோடு சேர்ந்துவிட்டனையோ? ஓ புண்ணியவதி! அமிர்தம்போல் இனிப்பாய்ப் பேசுகின்றவளே! உனக்குப் பிள்ளைகளிடத்தில் அந்தரங்கமான பிரீதியுண்டென்பது இப்போதன்றோ தெரியவந்தது. என்னைவிட்டுப் புத்திரவாஞ்சையினாலே சுவர்க்கத்துக்குப்போனது யுக்தமல்லவே. ஓ என் பிராணநாயகியே! பிள்ளைகளோடுன்னையும் இழந்திருக்கிற இந்தத் தருணத்திலும் எனக்கு மரணம் நேரிடவில்லையே என்ன செய்வேன்? எங்கே போவேன்? பூவுலகில் ராமனைத் தெய்வமென்று சொல்லுகின்றனரே அவனிப்போதில்லையோ. நானிப்போது படுந்துன்பம் இப்படிப்பட்டதென்று அவனுக்கு நன்றாய்த் தெரியுமே, அவனென்னைப்போலு மனைவியை யிழந்து துன்பப்பட்டவனல்லவா! எனக்கேன் ஒருத்தியுந் தேடாமலிருக்கின்றான். ஓ ராவிற்கு இரண்டுசாமப்போதானதிற்போல் வாழத்தக்க தம்பதிகளுள்ள சிலரைத் தெய்வமானது ஒரேகாலத்திற் கொல்லுதலும் வேறு வேறாகப்பிரித்துக் கொல்லுதலுஞ் செய்து

வருகின்றதே. இது கொடுமையல்லவா! தெய்வமானது கால வேற்றுமை செய்யலாமா! மஹாருஷிகள் பர்த்தா மரணமடைவா ரூயின் பத்தினி அவனுடன் மரணமடையவேண்டு மென்றும் அக்கினிப் பிரவேசமாக வேண்டுமென்றும் விதித்ததுசிறந்ததே. அதுபோலும் பத்தினிபிறந்தால் பதியுமிறக்க வேண்டுமென்று ஏன் விதிக்காமற் போயினரென்று பற்பலவாய்ப்பிதற்றி அழுது கொண்டிருக்கும்போது, நாராயணர் அவனைப்பார்த்து ஓ ராஜ ஸ்ரேஷ்டனே! ஏனழுகிறுய்? நீதர்மசாஸ்திரமறிந்தவனும் பெரியோர்களையடுத்தவனுமு மெனக்குத்தோன்றவில்லை, உன்னுடைய பிரியையாகிய மனைவியெங்கே போயினுள்? அவள் யார்? நீயார்? அவளுடனேச் சேர்ந்ததென்பதெங்கே? உன்னைப் பிரிந்த தென்பதெங்கே? மனைவி மக்கள் சகோதரரென் றெண்ணப்பட்ட இவரெல்லாம் சம்சாரமென்னும் பிரவாகத்தில் ஒன்றேடொன்று சேருகின்ற செத்தைகள் போலன்றே? இங்கிருந்து வீணுயழுவதனு லென்னபிரயோசனம்? வீட்டிக்குப்போ. ஒருவரோடொருவர் சேர்தலும் பிரிதலுந் தெய்வாதீனமாயுள்ளது நீ இந்தஸதிரீயை யிவ்விடத்திலேயே கூடிக்களித்தாய். இவ்விடத்திலேயேபிரிந்து துக்கிக்கின்றுய் இவளுடைய தாய் தந்தைகளை நீயறிவையோ? அல்லது பார்த்திருப்பையோ? ஒன்றுமில்லாதிருக்க நீ இவளை இக்குளக்கரையில் சேர்ந்தது காகதாளி நியாயமாகும். இனிக்கூடிவதென்பது எது! இனி துக்கப்படுவதனு லென்னபிரயோஜனம்! எல்லாங் காலத்தின்படி நடக்குமாகையால் தெய்வமுன்னுலுமென்னுலும் மற்றெவராலும் அதிக்கிரமிக்கமுடியாது, இனி அக்காலமானது உனக்கு என்ன சுகத்தைக்கூட்டுமோ அந்தச்சுகத்தை வீட்டுக்குப்போ யனுபவிப்பாயாக. இப்போது மறைந்துபோன அந்த உத்தமஸ்திரீ எப்படிவந்தாளோ அப்படியே போய்விட்டாள். நீ அந்த ஸ்திரீ வருவதற்குமுன் எப்படி யிருந்தனையோ அப்படியிருப்பாயாக. இனி நீ எவ்வளவு அழுதபோதிலும் அவளக்த அழுகையைக்கேட்டு ஐயோ வென்றிரங்கி வரப்போகிறதில்லை. ஓ அரசசிரேஷ்டனே! போகஞ் செய்வாய். போகம் வருவதும் போவதும் காலவசத்தினு லென்றறிக. இவ்வநித்தமான சம்சாரயார்க்கத்தில் விசனப்படுவதனுல் வரும்பயனென்னை? சுகமோரிடத்தி லிருப்பதில்லை; அதுபோலவே துக்கமுமோரிடத்திலிருப்பதில்லை. சுகமுந்துக்கமும் மாறிமாறி வந்துகொண்டே

யிருக்கும். ஆகையால் நீ மனதை யொருவழியில் ஸ்திரப்படுத்திக்கொண்டு ராஜ்யத்தைச் சுகமாயனுபவிப்பாயாக இதிலுனக்கு வெறுப்பா யிருக்கும்பட்சத்தில் தாயாதிகளுக்கு ராஜ்யத்தைக் கொடுத்துவிட்டு காட்டுக்குப்போய் யோகாப்பியாசஞ் செய்வாயாக. இம்மானுட தேகமானது ஒரு க்ஷணகாலத்தில நசித்துப்போகும். அநித்தியத் தன்மையுடையது இம்மானுட தேகம் போமாயின் மீண்டுங் கிடைப்பதரிது இது க்ஷணத்தில நாசமடையத்தக்க தன்மையை யுடைததானதாயினும பிரயோஜனமோ நித்தியமாகிய பெரிய பிரயோஜனத்தைக் கொடுக்குந் தன்மையை யுடைததாயுமுள்ளது. இங்ஙனமான அரிய தேகங் கிடைத்திருக்கும்போது செய்யுங்கருமத்தைச செய்வதொழிந்து செய்யவேண்டிவ தலலாததாகிய காரியத்தைச் செய்தழிந்து போவதனுலென்னபயன்? அருந்தல் பொருந்தலாலுண்டாகுஞ்சுகங்களை யறிந்தநுபவிக்குந்தன்மை பசுச்சாதிகளிலு மிருக்கின்றது. அப்பசுபோலன்று இம்மானுடதேகம். ஓ அரசனே நித்தியசுகத்துக் கேதுவாகிய ஞானம இமமானுடதேக மொன்றினுற்றான் கிடைக்கத்தக்கது. வேறெந்த விதமான சரீரசாதிகளினுங்கிடைக்காது. ஆதலால நீ வீட்டையும் விட்டு ஸ்திரீயின் பிரிவினுலுண்டாகிய துக்கத்தையும விட்டு வனத்துக்குச் செல்லக்கடவாய. இவ்வுலகம் மாயாகாரிய மாகையால் மோகிக்கப்பட்டிருக்கிறது. இவ்வண்ணம் மாயை மயங்கச்செய்கினறது. மாயா சொரூபிணியாகிய தேவியின் பலத்தினு லெனறறிவாயென்று அவனுக்குப் போதிக்கவே, ஒருவாறு தெளிந்தவனய் அந்த விஷ்ணுமூர்த்தியை நமஸ்கரித்து அத்தடாகத்தில் ஸ்நானஞ்செய்து தனது கிருகம்போய் தாயாதிகளுக்குத் தனது ராஜ்யத்தைக்கொடுத்து வைராக்கிய முடையவனுய ஆரணியஞ்சென்று சாத்விகஞானத்தை யடைந்து வாழ்ந்திருந்தனன்.

ஓ வியாசபகவானே! அரசன் போனபிறகு விஷ்ணுமூர்த்தி என்னைப்பார்த்து அடிக்கடி சிரித்தனர், நானவரைப் பார்த்து ஓ பிரபுவே! உம்மால் நான் வஞ்சிக்கப்பட்டு, பெரிதான மாயாபலத்துக்குள்ளாய் ஸ்திரீதேகமெடுத்து அந்தத் தேகத்தில் நான செய்தவேலைகள்மிகவும் ஆச்சரியகரமானதால் அவைகளை யெண்ணிப் பார்க்கின்றேன. அந்தோ! நான் அந்தஸதிரீ தேகத்தை யடைந்து இந்திரன் போன்ற ஓ ராசனைப் பர்த்தாவாகக்கொ

ண்டு பெரிய சம்சாரியாயிருந்தேன். இப்போது இச்சரீரத்தை நோக்குமளவில முன்னிருந்த நாரதசரீரமாகத் தெரியவருகின்றது. அதேமனம் அதேதேகம் அதே (ஆண்) குறி முதலிய வெல்லாமும் முன்னிருந்ததுபோல பெற்றவனுயிருந்தும் அந்தக கியாபக மாத்திரம் ஏன் மறந்துபோயிற்று? அதுபற்றி மிகவுமாசசரியப் படுகின்றேன். பகவானே! நான்குளத்தில் மூழ்கியபோது பூர்வஞானமெவ்வாறு மறந்துபோயிற்று? இவற்றின் காரணங்களைக் கூறவேண்டும் ஓ விஷ்ணுமூர்த்தியே! நான ஸ்திரீதேகத்தை யடைந்திருந்தகாலத்தில் அனேகவிதமான சுக துக்கங்களை யநுபவித்தேன். பிரதிதினமுஞ் சுராபானஞ்செய்தேன், நியமமிலலாமல் போஜனமுஞ் செய்தேன், நாரதனென்பதையு மறந்தேன் இவைநிற்க, இப்போது ஸ்திரீஜன்மத்தில நடந்தசெய்திகளை யப்படி நன்றாய்த் தெரிந்து கொள்ளுகின்றேனே அப்படி நான ஸ்திரீயாயிருந்தபோது நாரதனாயிருந்ததைத தெரிந்துகொள்ள வில்லையே. இதனையெனக்குச் சொல்லவேண்டு மென்றேன். விஷ்ணுமூர்த்தி, மஹாபுத்திமானான ஓ நாரதமுனிவ! இதைத்தான பெரியோர் மாயாவிலாசமென்று சொல்லுவார். சர்வஜந்துக்களினுடைய தேகங்களிலும் சுகதுக்க சம்பந்தமாயிருக்கின்ற அவஸதாபேதங்கள் பல அதுபோலவே சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐந்தவஸ்தைகள் எல்லாசசரீரங்களிலுமுண்டு இந்தச்சாக்கிரமுதலிய அவஸ்தையை எப்படி ஒருவன்மாறிமாறியடைகின்றானே அப்படியேதேகாந்தராவஸ்தையுமடைகின்றான். இதுபோல நீ ஸ்திரீதேகத்தை யடைந்ததுமாம். இதிலென்ன சந்தேகம்? மாயையுடைச செயித்தேனென்று சொல்லிய நாரதனே! சாக்கிரமுதலிய அவஸ்தைகளின அநுபவத்தைக் கேட்பாயாக. சுழுத்தியவஸ்தை யடைகிறவன் செவியால கேட்கிறதுமில்லை. வாயினுற்பேசுகிறதுமில்லை மற்றொன்றை யறிகிறதுமில்லை. அவன சாக்கிராவஸ்தை யடைவானுயின எல்லா விஷயஞ்ஞானங்களையு மறிந்துகொள்ளுகிறான மனமானது சாக்கிரத்தினுல் மறைபபிலலாமல பிரகாசித்தும சுழுத்தியினுல் பிரகாசமில்லாமல மறைநதுமிருக்கின்றது. இனிச சொப்பனத்திலோவெனின், நானுவிதமான மனுேபேதமாயுள்ள வபிப்பிராயங்கள் அநேக விதமாயுண்டாகின்றன. அஃதெனனையெனின், ஒருவன தன்னைக்கொல்வதற்கு யானை யோடிவநததாகவும் அதனைககண்டு தான் ஓடுவதற்குச் சக்தியின்றி யானென்ன செய்வேனென்று

மறைந்து கொள்வதற் கோடியதாகவும், அங்கிடங்காணாமல் பயந்ததாகவுஞ்சொல்லுகிறான். ஒருவனிறந்துபோன பாட்டனாரைப் பார்த்து அவருடன் வீட்டிற்குவந்து அவருடனே பலவார்த்தைகளாடிப் போசனஞ் செய்ததாகக் கண்டுசொல்லுகிறான். இவ்வாறு சொப்பனங்கண்டவர் விழித்துக்கொண்டு சொப்பனத்திலறிந்தநுபவித்த சுகதுக்கங்களை நன்றாய்க் கியாபகம்பண்ணிக் கொண்டு பிறருக்கு விவரமாய்ச்சொல்லிப் பின்னர் இதுபிரமையென்றுஞ் சொல்லுகின்றனர். அதுபோல் சொப்பனத்தில எவராவது சாக்கிரத்தில் நடந்தசெய்திகளைத் தெரிந்துகொள்ளுகின்றார்களா! இல்லையன்றோ. இதுபோலவே, நீ எடுத்த அந்தஸ்திரீ ஜன்மம் சொப்பனாவஸ்தையைப் போன்றதெனவும் இந்த நாரத ஜன்மம் சாக்கிராவஸ்தையைப் போன்றதெனவும் அறிவாய். ஆகவே நீ அந்த ஸ்திரீஜன்மமாகிய சொப்பனாவஸ்தையில் இந்த நாரத ஜன்மமாகிய சாக்கிராவஸ்தை யநுபவத்தை எப்படி யறிவாய்

ஓ நாரதமுனியே! மாயையினுடைய செயலென்றுணர்க அம்மாயாகுணங்களுடைய கரையை நானுமறிந்தவனல்லன். உருத்திரனு மறிந்தவரல்லர் பிரமாவுமறிந்தவனல்லன். நாங்களே அறிந்திலமென்றால் மந்தபுத்தியுள்ளவராகிய வேறுயாவரெப்படி யறியவல்லவராவார்? மாயாகுணத்தினுடைய அளவு எவனுக்குந் தெரியாது. ஸ்தாவரசங்கமரூபமான வுலகமெல்லாம குணத்திரயத்தினால நிர்மிக்கப்பட்டிருத்தலால் இச்சமுசார பிரவிர்த்தி யுண்டாகின்றது குணசம்பந்தமில்லாவிடின சம்சாரமேது. நானசத்துவகுணத்தில பிரதானனா யிருக்கின்றவனாயினும என்னிடத்தில் ரஜோகுண தமோகுணங்களு முள்ளன அப்படியே பிரமனும் உருத்திரருமுள்ளார். நாங்கள் மூவரும குணங்களை விட்டிருக்கும பிரபுக்களல்ல. அஃதில்லாதபிரபு துரிய சிவனொருவரே. அவரையன்றி மற்றொருவரையுங் குணாதீதரென்று கேட்டதில்லை ஓ முனிசிரேஷ்டனே! நீ மாயாவிலாச விபவத்தைக் காணவும அதனைக் கடத்தலரிதென்றும அதிலாழ்ந்து போகாது ஞானநிலையைக்கூடுமுபாயத்தை யூகிக்கவுமென்னாலே விளைவிக்கப்பட்ட அசாரமாயும கரையில்லாததாயுமுள்ள இச்சம்சாரசாகரத்தில அது எப்படி இதுஎப்படியென்று மோகத்தை யடையவேண்டாம். மாயாபிரவாகபேத விலாசங்களை நீதானகேட்டு முடியுமா! நான்தான் சொல்லிமுடியுமா! அதுமஹா அற்புதமாயுள்ளதென்றார்.

## 18. நாரதர் மாயையே பெரிதென்று நிச்சயித்தது.

ஓ வியாசமுனிவரே! அத்தடாகத்தின் கரையினின்று கருடாரூடராய்ப் புறப்பட்டு என்னைப்பார்த்து ஓ நாரதனே! இனி உமக்கெந்த விடத்திற்குப் போகவேண்டுமென்றிச்சை யுதிக்கின்றதோ அவ்விடத்துக்குப் போகலாம். அல்லது என்னுடன் வைகுண்டம் வருவதாயிருந்தாலும் வரலாமென்றுகூற, நானவரிடம் விடைபெற்றுக் கொண்டு இந்திரலோகம்போய்ச் சேர்ந்தேன். அவரும் எனக்கு விடைகொடுத்துவிட்டு வைகுண்டம் போய்ச் சேர்ந்தனர். பிறகு நான் என்றந்தை யிருக்கும் சத்தியலோகம போய்ச்சேர்ந்து, அவரை நமஸ்கரித்து அவரெதிரினின்று என்னுடைய சரித்திரத்தை நினைத்துக்கொண்டிருந்தேன். அவர் ஓ புத்திமானே! எங்கேபோயிருந்தாய்? எதற்காகச் சிந்தைபட்டுக்கொண்டிருக்கிறாய்? உன்னுடையமனம் இப்போது சுகமாக விருக்கிறதென்று நானினைக்கவில்லை. நீ யாராலாவது வஞ்சிக்கப்பட்டனையா? அல்லது ஏதேனும் ஆச்சரியத்தைக் கண்டனையா? விசனபபட்டுக் கொண்டிருக்கிறவனும் அறிவுகலங்கினவனும் காணப்படுகின்றாய். ஏனப்பா அப்படியிருக்கின்றா யுட்காரென்றார். நானவர் கட்டளைப்படி ஆசனத்திலிருந்து மாயாபலத்தா லுண்டான என்னுடைய விருத்தாந்தத்தைச் சொல்லத்தொடங்கி, ஓ என்றந்தையே! சமர்த்தரான விஷ்ணுமூர்த்தியால் நான்மிகவும் வஞ்சிக்கப்பட்டு ஓர் தடாகத்தில்மூழ்கி ஸ்திரீரூபமெடுத்து பூர்வஞானமெல்லாமறந்து அநேக வருஷகாலம் ஸ்திரீயாகவேயிருந்து, புத்திரசோகத்தினு லுண்டாகுஞ் சுகதுக்கங்களெல்லாம் அநுபவித்துப் பின்னரந்த விஷ்ணுமூர்த்தியால் நல்லுபதேசமும் பெற்றுத் தடாகத்தில் மூழ்கியெழுந்து புருஷனாயினேன். ஓ ஐயா! நானிவ்வாறு மோகமடைந்ததற்குக் காரணம் யாது? மாயையின் வன்மையைக் கடத்தல் மிக்கவரிதென்று நானிதுவரையில் தெரிந்துகொள்ளாம லிருந்தேனுகையால, இந்த மோகோத்பத்தியானது என்னுடைய ஞானத்தைக்கெடுதிசெய்துவிட்டது. இப்பொழுது அந்தமாயையாலினையும் சுபாசுபங்களெல்லாம் நான் நன்றாயநுபவித்துத் தெரிந்துகொண்டேன். ஓ என்றந்தையே! நீரெப்படி மாயாபலத்தை செயித்திருக்கிறீர்? அந்த வுபாயத்தை யெனக்குச்சொல்லுமென்றேன். அவரென்னை நோக்கிச்சிரித்து, அப்பா! இம்மாயை சகலதேவர்களாலும் மகாமகிமையுள்ள முனிவர்களா

லும் பிரமஜ்ஞானமுள்ள தபசிகளாலும் காற்றையே புசிக்கிற யோகிகளாலும் முக்குணத்தான் மும்மூர்த்திகளாகிய எங்கள் மூவராலும் வெல்லத்தக்கதல்ல. சிருஷ்டி, திதி லயமென்கிற முத் தொழிலையுஞ் செய்விக்கவல்ல அந்த மகாமாயையையறியும் வன் மையுள்ளார் யாவர்? ஓ புத்திமானே! காலம் கர்மம் சுபாவம் இவைமுதலான நிமித்த காரணங்களால் மகாபலமுள்ள அந்த மாயையெங்கும் வியாபித்து சுகதுக்கங்களை விளைவிக்கின்றபடி யால் அவைகளில் உன்னறிவைச் செலுத்தாமலும் அவைகளு டைய அநுபவங்களி லாச்சரியம் வைக்காமலு மிருப்பாயாக. நாங்களெல்லோரும் மாயையினாலே மோகிக்கப்பட் டிருக்கிறோ மென்று அதனுண்மையைச் சொல்லவும், நானவ்வுண்மையைக கேட்டு மனந்தெளிந்து மாயாகாரியங்களில் தலைப்பட்டுழலவரும் அவ்வக்காலங்களில் ஆச்சரியப்படுவதைவிட்டு நித்தியானந்த சுக த்தை நாடினவனாயினேன். ஓ வியாசமுனிவரே! பின்னரவரிடத் தில் விடைபெற்றுத் திவ்யதீர்த்தங்களையெல்லாம் பார்த்துக்கொ ண்டேவந்தேன் ஆதலால் நீரும் கௌரவபுத்தியை நாசஞ்செ ய்து மோகமொழிந்து காலகர்ம சுபாவத்துக் கீடாயமைக்கப் பட்ட இவ்விடத்திலேயே யிருந்து சுகமாய் காலத்தைக் கழித்து வாரும். அவனவனால் செய்யப்பட்ட சுபாசுப கர்மங்கள் கட்டா யமா யநுபவிக்கத்தக்கதேயென்று மனதில்நிச்சயித்துக்கொண்டு சுகமாய் சஞ்சரித்திருமென்றுசொல்லி என்னிடம் விடைபெற்று போயினார்.

## 19. நாரதர் வருகையை முன்னிட்டு ஸ்ரீராமசரித்திரம்.

பூர்வம் சூரியவம்சத்திற் பிறந்தவனும், தெய்வபக்தி பிரா மணவிசுவாச முதலியவற்றில மறவாத அறிவுடையவனும், அயோத்தியாபுரவாசியாயும், ஸ்ரீமானுமுள்ள தசரதனென்னும ஓரரசனிருந்தான். அந்த அரசனுக்கு உலோகமெல்லாம் பிரசித்தியாய்ப்புகழ ராமலக்ஷ்மண பரத சத்ருக்னர்களென்று நான்கு குமாரர்கள் பிறந்தார்கள் அவர்களில் கௌசலைகுமாரன் ராம மூர்த்தி, கைகேசி குமாரன் பரதன், சுமித்திரை குமாரர்கள் இரட்டைப்பிள்ளைகளாகிய லக்ஷ்மணசத்ருக்னர்கள். அந்நால்வருங் குணத்திலும் ரூபத்திலும சமானர்களாய்த் தநுர்வித்தை முத லிய நாநாவித்தைகளில் தந்தைமகிழத்தக்க சமர்த்தர்களாய் உப

நயனசம்ஸ்காரம் பெற்றவர்களாய் வாழுநாளில், விஸ்வாமித்திர முனிவர்வந்து தசரதனைப்பார்த்து உன்னுடைய மூத்தகுமாரனாகியராமனை என்னுடனனுப்பவேண்டுமென்று காரணத்துடன் சொல்லத் தசரதன், அவனையனுப்புவதற்குடன்படாது மனம் நொந்து பின்னர் வருந்தகஞ்சி அவர் வேண்டியபடியே பதினாறு வயதுள்ள ராமனை லக்ஷ்மணருடன்கூட்டி விஸ்வாமித்திர வசம் ஒப்புவித்து விடைகொடுத்தனன். முனிவரும் இவர்களை யழைத்துக்கொண்டு போகும்போது மார்க்கத்தில் கோரரூபிணியாயும் ருஷிகளுக்குத் துக்கத்தை விளைவிக்கின்றவளாயுமுள்ள தாடகை என்கிற ராக்ஷசியை ஸ்ரீராமமூர்த்தி ஒரே பாணத்தால் சங்கரித்துச் சுபாகு என்னும் ராக்ஷசனை வதைத்து மாரீசனென்பவனைத் தன் பாணவேகத்தினால் இறந்துபோனவனைப்போலாக்கினர்

இங்ஙனமான பெரிய கிருத்தியங்களை இராமலக்ஷ்மணர்கள் செய்து யாகத்துக்கோ ரிடையூறில்லாமனடத்தி விஸ்வாமித்திரரோடு மிதிலைக்குப்போகும்போது ராம மார்க்கத்திலிருந்த முனிபத்தினியாகிய அகலிகையைச் சாபத்தினின்று விடுவித்து, அவளைப் புனிதமாகிய மங்கையாக்கி. மிதிலா நகரத்துக்குப்போய் சனகமகாராஜாவினால் பந்தயமாக நியமிக்கப்பட்ட ருத்திரமூர்த்தியினாலெறியப்பட்ட தநுசைமுறித்து, இலக்ஷ்மி அம்சமாகியும் ஜனகபுத்திரியாகியுமுள்ள சீதையைவிவாகஞ்செய்துகொண்டனர். பின்னர் ஜனகமகாராஜன் தான்பெற்ற பெண்ணாகிய ஊர்மிளையை லக்ஷ்மணருக்கும், தன் சகோதரனாகிய குசத்துவசனுடைய இரண்டுபெண்களை அழகுள்ளவர்களாகிய பரத சத்ருக்கனர்களுக்கும் கொடுத்துக் கலியாணஞ்செய்துவைத்தான். கலியாண முடிந்த பின்னர் தசரதன் ஸ்ரீராமருக்கு ராஜ்யபட்டாபிஷேகஞ் செய்ய, வசிஷ்டர் முதலியோரிடத்தில் ஆலோசித்து அதற்குரியசம்பாரங்களைச் சேகரிக்கின்றபொழுது, கைகேசி அவைகளைப்பார்த்துத் தன் சுவாதீனத்திலிருக்கின்ற தசரதனை நோக்கி முன் உம்மால் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள இரண்டுவரங்களை இப்போதுகொடுக்கவேண்டும் அவை யென்னென்னில், என்குமாரனாகிய பரதனுக்கு ராஜ்யமும், ராமனுக்குப் பதினான்கு வருடகாலம் வரை வனவாசமுமாமென்றாள்.

அச்செய்தி யறிந்த ராமமூர்த்தி சீதாலக்ஷ்மணரோடு அரக்கர்கள் சஞ்சரிக்கின்ற தண்டகாரணியத்தையடைந்து வனசஞ்சா

ரியாயிருந்தனன். தசரதன் புத்திரனைவிட்டுப் பிரிந்ததனால் துக்கித்து முன் தனக்குநேரிட்ட சாபத்தையுஞ் சிந்தித்துப் பிராணனைவிட்டான் இச்செய்தி அறிந்த பரதன் தாயாரால் இவ்வளவு தீங்கு நேரிட்டதென்று தந்தையைப்பார்த்து மனநொந்து, பின் தன் தமையனாகிய ஸ்ரீராமமூர்த்தியினிடஞ்சென்று அவர்சந்தோஷிக்கும் வண்ணம் அரசாங்கத்தைத் தத்தானென்னுங் குறிப்பை நன்றாய்க்காட்டிப் பின்னர் அவர் ஆணையால் அயோத்தியையடைந்து அரசாண்டுவந்தனன், பரதன் செய்தி யிங்ஙனமிருக்க, வனவாசியாய்ப் பஞ்சவடியில் வசித்துக்கொண்டிருக்கிற இராமமூர்த்தியினிடத்தில் ராவணன் தங்கையாகிய சூர்ப்பணகை காமமிகுதிகொண்டுவர, அவளை மூக்கறுத்து அவமானியாக்கித் துரத்த, அவளங்கங் குலைந்திருப்பதைக் கரன் முதலானவர்கள் பார்த்து அளவிறந்த தேஜஸோடுமிளங்குகின்ற மகாவீரராகிய ராமமூர்த்தியோடு மகாயுத்தஞ்செய்யத் தலைப்பட்டார்கள். அதுகண்டு சத்தியபராக்கிரம சாலியாகிய ராமமூர்த்தி, மகருஷிகளுக்கு க்ஷேமத்தையுண்டுபண்ணு மெண்ணமுடையவராய் மகாபலசாலிகளாகிய அவர்களைக்கொன்று சூர்ப்பணகையையும் அங்கிராவண்ணம் போட்டினார். அவளோடி இலங்கையையடைந்து கரதூஷணனை ராமன் கொன்றனென்று இராவணனிடஞ்சொல்ல, அவன் அவர்களிறந்தாரென்று கேட்டமாத்திரத்தில் அடங்காத குரோதமுடையவனாய் ரதத்திலேறி மாரீசனிடஞ்சென்று ஓ மாரீசனே நீ உன்மாயையினால் சீதைக்கு ஆசைவிளையும் வண்ணம் ஓர்பொன்மானாய்ப் போவாயென்று சொல்லியனுப்ப, அதுபோலவே அம்மாரீசன் பொன்மானுருவங்கொண்டு மகாமாயனாய் ஆச்சரியப்படத்தக்க அவயவத்தோடும் சீதை கண்களாற் காணுமாறு அவள்முன்வந்து சமீபத்திலுலாவினன்

சீதை யூழாற்றூண்டப்பட்டு நாயகனைப்பார்த்து, ஓ என்னுயசனே! அந்தமானினுடைய தோல் என்னகாந்தியா யிருக்கிறது, அதனை நீ என் சுவாதீனப்படுத்தவேண்டுமென்று மிகுந்த ஆசையுடன்கேட்க, இராமரும் ஆலோசனையற்றுத் தன்தம்பியாகிய லக்ஷ்மணரைச் சீதைக்குக் காவலாகவைத்து வில்லையும் பாணத்தையு மெடுத்துக்கொண்டு அந்தமானை நோக்கிச்செல்ல, அது அவரது கண்ணுக்குத் தோற்றுவதுபோற் காட்டிப் பின்மறைதலும், மறைந்து போயிற்றே என்று பார்க்கும்பொழுது தோ

ன்றுதனுமான மாயவித்தைகளைக் காட்டி நெடுந்தூரம்போய் அங்கு இவர் கைக்கு அகப்படுவதுபோல் நின்றது. உடனே ராமமூர்த்தி கோபங்கொண்டு தன் கைவசப்பட்டதுபோல் நினைத்துக் கபடமாகிய அந்தமானைக் குரூரமாகிய பாணத்தாலடிக்க மாயாவியாயும் இறக்கத்தக்கவனுயும் துஷ்டனுயுமுள்ள மானுருவங்கொண்டமாரீசன் அந்த ராமரடித்த அடியால் நொந்து, அதிக துக்கத்தோடு ஹா! லக்ஷ்மணு!! நானிறக்கிறேன் ஹா! சீதா!! நானிறக்கிறேனென்று இராமர் கூச்சலிடுவதுபோல் ஹீனஸ்வரத்தோடும பெருங்கூச்சலிட்டனன்.

அவ்வோசை சீதையினுடைய காதிற்புக, அவள் அவ்வோசையைத தனனுயகனேசையே யாமெனறு நினைத்து மனவருத்தமுற்றவளாய் இலக்ஷ்மணனைப்பார்த்து, ஓ லக்ஷ்மணு! உன் தமையன் உன்னையழைக்கும ஈனஸ்வரத்தோடு கூசசலிட்டு இறக்கின்ற செய்தி யறிநதனையா! சீக்கிரத்திற் போவாய். அதோ கேட்டனையா, இனி நில்லாதே, நீ அவருக்குத் தம்பியல்லவா? அதிவேகமாகச சென்று வேண்டிய சகாயஞ் செய்வாயென்று மனங்கலங்கிச்சொல்ல, லக்ஷ்மணர் ஓ அம்மணீ! இவ்வுலகில் ராமனை அடிக்கும் புருஷனு மிருக்கின்றுனு! அவர் ஒருவனடிக்க இறப்பாரா! நானெண்ணவில்லை நீ தைரியத்தை விடாதே, இது இங்குவந்த பொன்மானினுடைய மாயவஞ்சனை யென்றெண்ணுகிறேன். அன்றியும் இந்த ஆச்சிரமத்தில் சகாயமில்லாம லிருக்கின்ற வுன்னைவிட்டு நான்போகக்கூடாது, என்னுடைய அண்ணனும் இவ்விடத்திலேயே இருவென்று ஆஞ்ஞைசெய்திருக்கிறுர். நானவராஞ்ஞையைக்கடக்க அஞ்சுகின்றேன. அந்தமாயமானுல் நேரிட்ட வஞ்சனையைப் பெரிதாகவெண்ணி உன்னைத் தனியாக விட்டுப் போகேன். உன்னுடைய சமீபஸ்தானத்திலேயே யிருப்பேன. இதைவிட்டு ஓரடியேனும் எடுத்து வைக்கமாட்டேன். அவரிருவென்ற ஆணையைக்கடக்கேன் கடக்கேனென்றனன். சர்வலக்ஷணத்தோடுங் கூடியிருக்கின்ற சீதை சாந்தகுண முடையவளாயிருந்தபோதிலும் ஊழின் பிரேரபணையினுல் அழுது புலம்பி ஏங்கி லக்ஷ்மணரை நோக்கி அடியில் வருமாறு சில குரூரமான வார்த்தைகளைச் சொல்லத்தொடங்கினுள்.

ஓ லக்ஷ்மணு! இவ்விடத்திற் காவலிருக்கிறதுபோல் இருக்கின்ற வுன்னை உன் தமையனுக்குத் துணையாகவந்தவனென்றும்,

சீதையினிடத்தி லுண்டான மோகம் பூர்வ ஜன்மசம்பந்தமென்றும் அதாவது முனசன்மத்தில் சீதை தவத்திற சிறந்த ஓர் முனி மகளாய் வனத்திற்றவஞ்செய்து கொண்டிருக்குஞ் சமயத்தில் ராவணன் கண்டுமோகித்து நீ என் மனைவியாகவேண்டுமென்று பிரார்த்திக்க, அவளிணங்காமல் கோபித்ததைக்கண்டு அவன்பலாத்காரமாய் அவளுடைய கையைப்பிடித் திழுத்தனனென்றும், அந்தக்ஷணமே அவனைப்பார்தது ஓ துராத்துமாவே! உன்னைக் கொல்லுநிமித்தம் அயோநிஜையா யிவ்வுலகில் வந்து பிறபபே னென்று கடுஞ்சாபமிட்டு, இவனுல தொடபபட்ட இந்தத்தேகத்தையும் வைத்திரேனென்று அகனியிற பிரவேசித்தது தேகத்தைவிட்டனளென்றுங் கேளவியுற்றேன்.

அதுபோலவே இப்பொழுது லக்ஷ்மி அம்சமான சீதையாகிய பாம்பையெடுததுத் தனகழுததிறபோட்டுககொண்டதுபோல் அந்த ராவணன் தனகுலமெல்லாம் நாசமடையக் கொண்டுபோயினுன். நீயும் தேவர்களுடைய பிராாத்தனையால் விஷ்ணுமூர்த்தியினுடைய அமசத்தோடும அஜமகாராஜன் வம்சத்திறபிறநதனை, இனி ராவணன சமஹாரமாவதி லென்னசந்தேகம். ஓ ராயா! சுவாதீனமற்றவளாயும, பதிவிரதையாயும், தருமத்தி லூக்கமுள்ளவளாயுமுளள சீதை அசோகவனததிலிருநது இராப்பகல் உனனைததியானிததுக கொணடிருககிறுள். அவளுககு ஆகாரமாக இந்திரன் காமதேனுவின்பாலை ஓர்பாததிரததிலவிட்டு அனுப்பியிருக்கிறுன். அவள அதைப் பானஞ்செய்துகொண்டு பசிதாக மில்லாமல் சுகமாய்வாழ்நது கொணடிருக்கிறுள். நானும போய்ப்பாாத்தேன். நீ அவளபொருட்டாகக் கவலைப் படவேண்டாம் தைரியமாயிருப்பாய

ஓ ராகவா! அநதராவணனை சங்கரிப்பதற் கேதுவாகிய உபாயத்தை இனிசசொலலுகிறேன். இபபோது நடபபது ஐப்பசிமாத மாகையால இநத மாதததில பகவதியினுடைய பிரீதியாக நவராததிரி விரததததை நடததுவாய் அந்த ஒன்பது ராததிரியும் உபவாசமாயிருநது மஹேஸவரியினுடைய பூசையும், ஜபமும, ஹோமமும, செய்து வருவையேயாயின் அது எல்லாச்சித்திகளையுங் கொடுக்கும். அன்றியும், அநதப்பூஜையில் அஜபலியும், பலிக்குப் பத்து ஹோமமும் செய்யும பக்ஷத்தில வீரபராக்கிரமசாலியாவாய். இநதவிரதத்தைப் பூர்வத்தில திரிபுரசங்காரத்தின்

பொருட்டு ருத்திரரும், மதுவைச் சங்கரிக்குப்பொருட்டு மேரு பர்வதத்தில விஷ்ணுவும, விருதகிராசுரவதத்தின் பொருட்டு இந்திரனும, ஏனைய தேவர்களும், விசுவாமித்திரர், பிருகு, வசிட்டர், காசிபர், மனைவியை யிழந்த பிரகஸ்பதி முதலிய முனிவர்களும் அந்த நவராத்திரி விரதத்தை அநுஷ்டித்து அவரவர் வேண்டியவற்றைப் பெற்றனர்.

ஹே ராமா! சுகத்தை அபேக்ஷித்தவன் மங்களகரமாகிய இந்த நவராத்திரி விரததததை யநுஷ்டிக்க விரும்புவான். கஷ்டத்தையே யபேக்ஷித்தவன இந்தவிரதத்தையேசெய்ய விரும்பான். ஆகையால் ஓ ராமா ராவணனை வதைசெய்வதற்குரிய ஊக்கத்தோடு முயறசி யுள்ளவனாய் விதிப்படி விரதத்தை நடத்துவாயென்றனர் ஸ்ரீராமர் நாரதனைப்பணிந்து அந்தத் தேவியானவள் யார்! என்ன மகிமையுள்ளவள் எவ்வா றுருவங்கொண்டவள்? என்ன பெயருள்ளவள்! அவளுடைய விரதம் எப்படிப்பட்டது! தேவரீர சர்வஜ்ஞராகையால இவையெல்லாம் விதிமுறை யாகச் சொல்லவேண்டுமென்று பிரார்த்திததனர்.

ஓ ராமா! என்னால சொல்லப்பட்டதேவி யாரெனின்? எக்காலத்தும நித்தியமா யிருக்கின்ற ஆதிசத்தி. அவளமகிமையென்னையெனின், துக்கங்களைப்போககடிபபவள், சகலகாமங்களையும் கொடுப்பவள, யாவராலும் பூசிக்கத்தக்கவள, பிரமன்முதலிய சேதனாகளுக்கெல்லாம் காரணமாயுள்ளவள், யாவரும் அவளுடைய சத்தியைவிட்டுச் சலிப்பதற்குச சக்தியில்லாதவர் பிரபஞ்சத்துக்கு அதிதையாகிய அந்தப்பரமேஸ்வரி யாவரிடத்தும் எவ்வாறிருக்கின்றாளெனின், என் தந்தையினிடத்தில சிருஷ்டிக்கிற சத்தியாயும, விஷ்ணுவினிடத்தில்பரிபாலிக்கிற சத்தியாயும, ருத்திரிடத்தில் சங்கார சத்தியாயும், சத் அசத்தாயிருக்கிற பதார்த்தங்கள எவைகளோ அவைகளிடத்தில அவைகட்குரிய சத்தாகிய சக்திவடிவாகியு மிருக்கின்றனள. இவ்வாறு பிரமனாதி பிபீலிகாந்தம நிறைந்துள்ள சக்திபேதங்களெல்லாம் அந்தப பராசத்தியினின்றுந் தோன்றிய சத்திகளாகும். ஆகவே அப் பராசத்தியைவிட்டு எவையும வேறு எவ்விடத்தினின்று தோன்றும்? தோன்றுதற்கிடமில்லை. அந்தப் பராசத்தியினுடைய வியாபக மில்லையாயின பிரமனேது, திருமாலேது, ருத்திரரேது, இந்திரனேது, தேவர்களேது, பூமியேது, பர்வதமேது, எவையுமில்லை, எவருமி

ல்லை. சர்வசக்திமயமா யிருக்கின்ற அந்தப்பராசக்தி பரமாத்மா வாகிய பரசிவத்தோடு கூடிக கிரீடிததிருப்பாள். இன்னும அவ ளுடைய மகிமை பலவுள. விரிக்கின் பெருகும்.

இனி அவளுருவங்கொள்ளும் வகை யென்னையெனின், பர சிவததோடு அபின்னையாகக்கூடியிருககும் அப்பராசக்தி பிரபஞ சோற்பததி காலத்தில் சருணையாய முன்போல மூன்று புவனங் களையுஞ் சிருட்டிததுப் புவன கர்ததராகிய பிரமனுதியரைப் படைதது, அவர்களிடத்தில் தன்சகதிகளைப் பதிவித்து தனது சிருஷ்டியாதி கிருததியங்களைச் செய்விககின்றனள. அவளே வே ததுக்கெல்லாம ஆதியாயும், வேதமாதாவாயு முள்ளவளென்று யாவராலுந் தியானிககததககவள்.

இனி அவள நாமம் என்னையெனின, பிரமனுதியரும் அநத மகேஸ்வரியினுடைய அருட்குணங்களையும் அருட் செயலகளையு ணர்ந்து அகாரமுதல் க்ஷகாரம வரையில கூடியிருககிற அக்ஷ ரங்களால கணக்கிட முடியாத அநேகவித நாமஙகளைக்கூறி யிரு க்கின்றனர். அவைகளெலலாம இவ்வளவினவென்று எடுத்துச சொல்லத்தக்கவல்லவன நானல்லனென்று கூறினர்

ஸ்ரீராமமூர்த்தி நாரதரைநோக்கி ஓ மகருஷியே! உம்மாற் சொல்லப்பட்ட தேவி இன்னுளென்றும, இனனமகிமை யுடைய வளென்றும் அக்ஷர சமூகஙகளெலலாம அவளுடைய நாமங்க ளென்றுஙகேட்டு மிகக மகிழ்ச்சியடைநதேன. இனி அநத மகா சததியினுடைய விரததின விதியை விரிவாயச சொல்லவேண் டுமென்று பிரார்ததிககினறேன. சொலவீராயின் அவவிரதத்தை இவ்வருடமே அநுட்டிததுப பூசிதது அவளநுக்கிரகததைப்பெ றவுய்யலாமெனறு தீவிரவெண்ணததோடு மிருக்கின்றேன வினா வாய்ச்சொல்லி யருளல்வேணடுமென றனா.

நாரதர் அவரது அதிதீவிர பக்குவத்தைப்பார்த்து ஓ ராமா! உலகமாதாவாகிய தேவியைச சமமாகிய விடததிற ரூபிதது நவ ராததிரி பூஜையை உபவாசத்தோடிருநது விதிப்படி பூசிப்பாய். இந்தப்பூசையைமுடிப்பதற்கு நானே ஆசாரியனுகவிருநது தேவர்களுக் கநுகூலசித்தியுண்டாகும் வண்ணம் உனக்கு உத்சாகத் தை விளைவித்துப் பூர்த்திசெய்விக்கின்றேன் என்று நாரதர் கூறி ய வார்த்தையைப் பிரதாபசாலியாகிய ராமமூர்த்தி சத்தியமாக

நம்பி, அவரால் பூஜாவிதிகளையெல்லாம் நன்றாயுபதேசஞ்செய்யப் பெற்று சகலத்திரவியங்களையுஞ் சேகரித்துக்கொண்டு, அந்தமாலையவான்பர்வதத்தில் நிதயகன்மாநுஷ்டான மியற்றிப் பின் தேவிக்கு விதிமுறையாகப் பூஜைசெய்யத தொடங்கி சமமான பூமியில் மங்களகரமான பீடத்தைத் தாபனஞ்செய்து மகேஸ்வரியைத்தாபித்துப பூஜா ஹோம பலி முதலியவைகளைக் குறைவின்றியும், நாரதர் சம்மதபபடியும்; உபவாசத்தோடிருநது பிரதமை முதல நடத்திவருமபோது தேவிமகிழ்ந்தவளாய் அஷ்டமிதினம் அர்த்தராத்திரியில அநதமலையினுச்சியில் சிம்ஹவாகனததிலெழுநதருளிவந்து தரிசனங்கொடுதது, ஸ்ரீராமரைப்பார்த்து மேகநதொனிப்பதுபோலும கமபீரமாகிய வாக்கிலை அடியில் வருமாறு சொலலததொடஙகினள்.

ஓ ராமா! நீ லக்ஷமணனோடு என்னிடததில் பக்திப்பிரபாவத்தோடு செய்துவரும் இநத விரதத்துககு நான சநதோஷித்தவளாயினேன். உனக்கு வேண்டுவனவறறைக கேட்பாயாக. இராவணனை யொழிககும்பொருட்டுத தேவாகளெல்லாம் விஷ்ணுவைப் பிரார்த்திகக அவரம்சமாய்த தசரதனுக்குமகனைப் பிறநதிருக்கின்றனை. இப்படியே பூரவததில் மச்சமாகப்பிறநது குரூரனுகிய ராக்ஷசனைச சங்கரிதது வேதங்களை ரக்ஷித்தனை, கூர்மவுருவமெடுதது மந்தரபருப்பததததைத தூக்கி மததாகநாட்டிதேவாகளைக்காத்தனை. வராகவுருவமெடுததுக கோரதநதத்தால பூமியைத்தூக்கினை, நரசிம்ஹமாகவெளிபபட்டு இரணியகசிபனைச சங்கரிதது உனக்கனபனுகிய பிரகலாதனை ரக்ஷிததனை. இநதிரனுக்குச்சகோதரனும் தேவர்களுக்கறு கூலியாய வாமனனுகப்பிறநது பலிச்சக்கிரவாத்தியைப் பாதலததிலடக்கினை. ஜமதக்கினிருஷிக்குப புத்திரனுகபபிறநது க்ஷததிரியருடைய பூமியெல்லாம் காசிபருக்குத் தானமாககொடுத்தனை. இபபோது தசரதனுக்குப் புத்திரனுகப்பிறநது ராவணனைச் சஙகரிக்கபபோகின்றனை. நீ விஷ்ணு அம்சமாகவந்ததுபோல் இந்த வானரக்கூட்டங்களும் தேவர்களுடைய அம்சங்களாகும். இந்தக்கூட்டங்களெல்லாம் உனக்குச் சகாயமாயிருக்க என்னுடைய சத்தி அமசததைக்கொடுக்கின்றேன். உன்தமபி ஆதிசேஷனுடைய அம்சம். அவன் இந்திரஜித்தைக் கொல்லப்போகிறான். நீயும் ராவணயுத்தத்தை வசந்தகாலத்தில் சிரத்தையுடன்செய்து வெற்றியடைந்து சுகமாய்

அயோத்திக்குப்போய்ப் பதினாயிரவருடம் ராஜ்ய பரிபாலனஞ் செய்து, பின்னர் பரமபதத்தை யடைவாயென் றநுக்கிரகஞ்செய்து மறைந்துபோயினள்.

தேவி யநுக்கிரகம்பெற்ற ராமர் சந்தோஷமடைந்து விரதத்தைப் பூர்த்திசெய்து அநேக தானங்களைக்கொடுத்து நாரதரைப்பணிந்து ஐயா? நீ ரெனக் காசிரியராக யெழுந்தருளியபடியினாலல்லவா விரதபூர்த்தியும் தேவி யநுக்கிரகமுங் கிடைக்கப்பெற்றேன் இனிச்சீதையையுங் கிடைக்கப்பெறுவேன். இவ்வரிய உதவிசெய்த தேவரீருக்கு அடியேன் என்ன கைம்மாறுசெய்ய வல்லேனென்று வணக்கத்துடன்சொல்ல, நாரதர்மகிழ்ந்து ஓ ராமமூர்த்தி! உனக்குவெற்றியும் மங்களமுமுண்டாகுகவென்று ஆசீர்வதித்துப்போயினர். இராமர் சந்தோஷசித்தராய் தசமிதினமபிரயாணப்பட்டு யாவராலுந் துதிக்கப்படுங் கீர்த்திபெற்றுத் தம்பியினிடத்தில் மிகுந்த இஷ்டமுடையவராய் மகாசத்தியா லநுக்கிரகிக்கப்பட்ட வானரசைனியங்கள் சூழ்ந்துவரக் கடற்கரையையடைந்து, சேதுபந்தனஞ்செய்து இலங்காபுரிக்குப்போய் தேவசத்துருவாகிய ராவணனைச்சங்கரித்துசசுகமுற்றனர்.

நாரதர் ஸ்ரீராமர் சோசம் தீர்த்தது - முற்றிற்று.

## 21. நாரதர் கம்சனிடம் செய்தகலகம்.

ஸ்ரீராமமூர்த்தி அரசாட்சிகாலத்தில தற்போதிய பாண்டிநாட்டின் வடபால் காளிந்திநதியின் மணல்மேட்டில் ஒருபெரிய மதுவனமொன்றிருந்தது. அவ்வனத்தில் லவணனென்கிற மதுபுத்திரனான அசுரனிருந்தான். அவன் தான்பெற்றவரத்தின்வலியால் அகங்காரமுடையவனாய் மகருஷிகளுக்குத்துக்கத்தை யுண்டுபண்ணிக்கொண்டிருந்தான். ஓர் கால் லட்சுமணருக்குத் தம்பியான சத்துருக்னன் அந்த அசுரனை யுத்தத்திற்கொன்று அவ்வனத்தைப் பட்டணமாக்கி மதுராபுரியென்று நாமகரணமிட்டு அதில் தன் னிருபிள்ளைகளையுந் தாபித்துச் சுவர்க்கமடைந்தான். சூரியவம்சம் நசித்தபோது மோக்ஷத்தைக் கொடுக்கும்படியான அம்மதுராபட்டணத்தில் யாதவர்கள் வந்தடைய, யயாதிபுத்திரனான சூரசேனன் பிரபுவாயிருந்து ரக்ஷித்துவந்தான். அந்தச்சூர

சேனனுக்கு வருணன்சாபத்தினுற் காசிபர் பிள்ளையாய்ப்பிறந்து வசுதேவரென்கிற பெயருடையவராய்ப் பிரசித்திப் பெற்றிருந்த னர். அந்தச் சூரசேனன இறந்தபின்னர் அவர் வைசியவிருத்தி யில் ஜீவித்துக்கொண்டிருந்தார் அப்பொழுது உக்ரசேனனென் பவன் அப்பட்டணத்தை யரசாண்டுவந்தான். அவனுக்குப் பல சாலியான கம்சனென்பவன் பிறந்தான். காசிபருடைய பத்தினி யாகிய அதிதியும அந்தவருணனுடைய சாபத்தினுலேயே தேவ கனுக்குப் புத்திரியாய்பபிறந்து தேவகியென்று பெயர்பெற்றிரு ந்தனள். அவளுக்கும வசுதேவருக்கும் விவாகம்நடத்தும்போது ஆகாயத்தில "ஓ கம்சனே! இத்தேவகியினுடைய எட்டாவது கர்ப்பம் உன்னைக்கொல்லப்போகிறது" என்றசரீரியுண்டாயிற்று.

அவ்வார்த்தையைக் கம்சன்கேட்டு ஆச்சரியமடைந்து சிந் தாகுலப்பட்டு இப்போது இதற்கென்ன செய்பலாமென்றுலோ சித்தான். இப்பொழுதே இவளைக்கொன்றுவிட்டால் நமக்குமிரு த்தியுமில்லையென்றும், இந்தஸ்திரீயினிடத்தில் பிறக்கும பிள்ளை யினு லுண்டாகு மரணத்தை மாற்றிக்கொள்ளுவதற்கு வேறு பாயங் கிடையாதென்றுந் தீர்மானித்தான். பின்னர், இவள் நமக்குச் சிறந்த அத்தையாயிருக்கின்றுளே எப்படிக் கொல்வ தென்றும், மரணமானது நமக்குப் இவள்மூலமாய் நேர்ந்திருக் கிறபடியால் எப்படிக் கொல்லாதுவிடுவது என்றும், அறிவுள்ள வனுகியபண்டிதன் பாவஞ்செய்தாவது சரீரரக்ஷணைசெய்து கொ ள்ளவேண்டும். அந்தப்பாவத்துக்குப் பிராயச்சித்தத்தினுலாவது வேறெவ்விதத்தினுலாவது சுத்தியுண்டாகிறதென்றும் சொல்லப் பட்டிருகிற தல்லவாவென்றும இவ்வண்ணம் சிந்தித்து உட னே அந்தக்கம்சன் கத்தியையுருவிக்கொண்டு விரைவாய்ப் புதிய மணக்கோலத்தோடிருக்கிற அந்த உத்தமஸ்திரீயின் தலைமயி ரைபபிடித்திழுத்தான். அப்பொழுது வசுதேவரைச்சேர்ந்த சூர ர்களெல்லாம விடு விடு வென்றுசொல்லி அந்தத் தேவகியை விடு வித்துப் பின்னர் அவர்களும் கம்சனும் மகத்தான யுத்தஞ்செய் தார்கள். அப்போது யாதவகுலதிலகராகிய பெரியோரெல்லாம் கம்சனைப்போரினின்றும் விலக்கி ஓ வீரனே! சிறுபெண்ணுன இவள் உனக்கு அத்தையல்லவா? மேலும் விவாஹமகோற்சவகா லத்தில் கொல்லத்தக்கவளாவளா? ஸ்திரீயத்தியானது சகிக்கத் தக்கதா? கீர்த்தியைநாசஞ்செய்துவிடுமே! பாவங்களுக்குள் இது

மிகப்பெரிதான தல்லவா! அசரீரிவாக்கைக் கேட்டமாத்திரத்தில் அதனுண்மையொன்று மறியாதவனாய் நீ இவளைக்கொல்லலாமா? இது அசரீரிவாக்கன்று. உனக்கும் வசுதேவருக்கும் அனர்த்தத்தை விளைவிக்கும்பொருட்டு உன் சத்துருவினாலாவது வசுதேவருடைய சத்துருவினாலாவது இவ்வாறு ஒருவருக்குந்தெரியாமல் மறைந்திருந்து சொன்னதாக என நினைக்கக்கூடாது. உன் கீர்த்தியைக் கெடுப்பதற்காகவும், வசுதேவர் சௌதந்திரத்தை நாசஞ் செய்வதற்காகவும், மாயாவித்தையறிந்த ஓர் சத்துருவினால் சொல்லப்பட்டதென்றே துணிவாய். உன் கீர்த்தி முழுமையுங் கெடுப்பதற்குச்செய்த உபாயமென்றே எண்ணுவாய். நீ மகாவீரனாயிருந்தும் இந்தப்பூதவாக்கத்துக்குப்பயப்படுகின்றாய் அசதை உன்னால் கொல்லத்தக்கவளல்லவே அப்படியிருந்தாலும் விவாக சமயத்தில் கொல்லலாமா? ஓ மகாராஜனே! எது நடக்கவேண்டுமோ அது உண்மையாய் நடந்தேவிடும். அதனை வேறுவிதமாய் எவ்வண்ணம் மாற்றமுடியும்.

இவ்வண்ணம் யாதவவிருத்தர்கள் போதனைசெய்தும் அவன் கொல்லவேண்டுமென்கிற நினைவை விடாதவனாயிருந்தான். அந்நினைவையறிந்த வசுதேவர் கம்சனைப்பார்த்து ஓ கம்சனே! நானிப்போது சத்தியமாய்ச் சொல்லுகிறேன், மூன்றுலோகமும் சத்தியத்தை ஆதாரமாகவுடையது ஆகையால் தேவகியிடத்திலுண்டாகும் பிள்ளைகளையெல்லாம் பிறக்கும்போதே உன்கையில் கொடுத்துவிடுகிறேன். ஓ பிரபுவே! பிறக்கும் பிள்ளைகளை நான் கொடாமற் போவேனானால் என் பூர்வபிதாக்களெல்லாங் கும்பீபாக நரகத்தை யடையக்கடவர் என்று சொன்னபோது அங்கிருந்த மகாத்மாக்களெல்லாம் அந்த வுண்மையானவார்த்தையைக்கேட்டு விரைவாயக்கம்சனை நோக்கி இதுவே சரி! சரி!! இதுவே நல்லது! நல்லது!! என்று அடிக்கடி சொல்லி மகாபுத்திமானான வசுதேவர் எங்கும் பொய்சொன்னதில்லை ஓ மகாநுபாவனே! இந்தக் கஷ்டமான பாவத்தை விட்டுவிடு, ஸ்திரீஹத்தி மிகவும் பெரிதல்லவா? என்றிவ்வாறு சொல்ல அவர் வார்த்தைகளைக்கேட்டகம்சன் குரோதத்தைவிட்டுச் சத்தியவாக்கியத்தினாற் சந்தோஷமடைந்திருந்தான். பிறகு துந்துபி வாத்யமும் சங்கீதமும் வாசித்தார்கள். இப்படி வசுதேவர் கம்சனைச் சந்தோஷப்படுத்திக் கலியாணப்பெண்ணாகிய தேவகியை விடுவித்துக்கொண்டு தன்

னைத்தவரெல்லாருஞ் சூழ்ந்துவரப் பயமில்லாமல் தன்கிருகம் போய்ச் சேர்ந்தனர்.

பிறகு தேவகியானவள் யௌவனத்தையடைந்து தேவதா ரூபமுள்ளவளாயிருக்கும்போது, விதிவசத்தால் வசுதேவர் சங்கமுண்டாய்க் கருப்பமடைந்து பத்துமாத முடிந்தபின் மகா ரூபத்தோடு கூடின உத்தமமான வோர் பிள்ளையைப்பெற்றனள். அப்பொழுது வசுதேவர் தாம்சொல்லிய சத்யவாக்கியத்தை நினைத்துத் தேவகியை தேவமாதாவான அதிதியாகப் பாவித்துச் சொல்லுகிறார். உத்தமமான லக்ஷண முள்ளவளே! நான் பிள்ளையைக் கொடுத்துவிடுகிற விஷயத்தில் செய்திருக்கிற ஏற்பாட்டை நீ யறிந்திருக்கிறாயல்லவா? அவ்வண்ணம் நான்சொன்னது கம்சன் உன்னைக் கொல்வதற்காகப் பிடித்திழுத்துத் துன்பப்படுத்தும் சமயத்தில் உன்னை விடுவித்ததற்கல்லவா? ஆகையால் இப்பிள்ளையை உன் மருகனுக்குக்கொடுத்து விடுகிறேன். விசித்திரமான கர்மாநுபவமானது பிரமத்தை யறியாதவர்களால் செயிக்கத்தக்கதல்ல. காலபாசத்தை யநுசரித்திருக்கிற சர்வப்பிராணிகளும் தாம் தாம் செய்யப்பட்ட நல்வினை தீவினையென்கிற இவ்விரண்டானும் வருவதாகிய கர்மங்களைச் சர்வப்பிரகாரத்தாலும் அநுபவித்தே தீரவேண்டுமென்றனர். அதுகேட்ட தேவகி ஓபிரபுவே! ஜன்மாந்தரத்திற்செய்த கர்மத்தை மாநுடர்கள் அநுபவித்தே தீரவேண்டுமா? புண்ணியதீர்த்த ஸ்நானங்களாலும் தபசுகளாலும் தானங்களாலும் அக்கர்மம் ஏன் கழியமாட்டாது? ஓ என்னுயகனே! ஜன்மாந்தரத்திற் செய்யப்பட்ட பாவத்தைக்கழிப்பதற்கல்லவா தர்ம சாஸ்திரங்களில் மநுமுதலிய மகான்கள் பிராயச்சித்தாதிக ளெழுதிவைத்திருக்கின்றனர். பிராமணனைக் கொன்றவன், சுவர்ணத்தைத் திருடினவன் மதுபானஞ்செய்தவன், குருபத்னியைப் புணர்ந்தவன் என்றுசொல்லப்பட்ட இவரெல்லாம் பன்னிருவருடம் மநுவாதிகளால் விதித்தவண்ணம் விரதமநுட்டிப்பாராயின் அவர்கள் அப்பாவத்தினின்றுஞ் சுத்தியடைகிறார்களல்லவா. ஆகையால் மனிதனுயுள்ளவன் பிராயச்சித்தஞ்செய்து பாவத்தினின்றும் விடுவிக்கப் படானா? படானு? உண்மையைப் பிரகாசப்படுத்துகிற தர்ம சாஸ்திரப் பிரவர்த்தகர்களான யாஜ்ஞவல்கர் முதலான முனிவர்கள் பொய்வாக்குடையவர்களா? ஓபிரபுவே! கர்மாநுகுணமாய்நடக்கவேண்டியது

நடந்தே தீரவேண்டுமென்பது நிச்சயமானால் ஆயுள்வேதமும் மந்திரவாதங்களும் பொய்தானே? எல்லாப் பிரயத்தனமும் வீண்தானே? தெய்வத்தினால் நியமிக்கப்பட்ட எல்லாசாஸ்திரங்களும் நடக்கிறது நடந்தேதீருமென்றால் அவை அவசியந்தானே. அவ்வாறாயின் ஒருவன் ஒருகாரியத்தில் பிரயத்தனப்படுவதும் வீண்தானே? சுவர்க்கத்தைக் கொடுக்கத்தக்கதான அக்னிஷ்டோமாதிகளும் பயனற்றனவோ? தருமத்தைச் சொல்லுகிற சொல் வீணாய்ப் போமானால் அந்தத் தருமத்துக்கு நாசமுண்டாகாதோ? இதனை மாறுடன் விசாரிக்கத் தக்கதல்லவா? ஆகையால் குழந்தையைப் பாதுகாக்கத்தக்கரிய காரியமிருந்தும் எனக்குப் பிரத்யக்ஷமாய்க் காணப்படுகிறது. அதனை நீர் செய்யாது என் குழந்தை எவ்விதத்தினால் க்ஷேமமாய்ப் பிழைத்திருப்பானோ. அந்த நன்மையை விரும்பி நீர் என்னிடஞ் சொல்லிய வார்த்தையைப் பொய்யாக்கி அதற்குச் செய்துகொள்ள வேண்டிய பரிகாரத்தைச் செய்துகொண்டு நாம் சுகமுற்றிருக்கவேண்டும். அந்த விஷயத்தில் பண்டிதர்கள் ஆக்ஷேபிக்கமாட்டார்கள் என்று சொல்லிய தன்மனைவியைப் பார்த்து, ஓ மஹாராணியே! உனக்குச் சத்தியமாகிய சிலவார்த்தைகளைச் சொல்லுகிறேன் கேள்.

நீ சொல்லியபடி பிரயத்தனம் அவசியஞ் செய்யவேண்டியதே. அதற்குரியபலமோ தெய்வானுகூலமாய்த்தானிருக்கும். முன்னுள்ள பெரியோர்கள் புராணங்களிலும் ஆகமங்களிலும் பெத்தான்மாக்களுடைய கர்மங்களை ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தமென மூன்றுவிதமாகச்சொல்லுகிறார்கள். அவற்றுள் அநுபவத்துக்கு ஏதுவாயுள்ளது சஞ்சிதம். அநுபவிக்கவருவது பிராரத்தம். இவ்விரண்டிற்கும் இடமாய்ப் பெரிதாயுள்ளது ஆகாமியம். இந்த மூன்றனுள் ஆகாமியம் சஞ்சித பிராரத்தங்களுக் கிடமாயிருந்ததலால் அதன் விவரத்தைச் சொல்லுகிறேன் கேள். ஆகாமியமானது இன்பம் துன்பம் இதம் அகிதம் நல்வினை தீவினை என மூன்று பிரிவினையுடைத்தாயிருக்கும். இம்மூன்றனுள் புலன்களால் அநுபவிக்கவரும் விஷயங்களைச் செயல்வகையான அநுபவிக்குங்கால் அவ்வநுபவ, ரூபமாயுள்ளவை இன்பத்துன்பங்கள் அவ்வழியாலுண்டாகும் கருத்துவகையான் சஞ்சிதத்துக் கிடஞ்செய்யும் வகையாயுள்ளவை இதம் அகிதங்கள். அவ்வித அகிதங்காரணமாக அனேகம் பிறவிகளுக் கிட-

மாயுள்ளவை நல்வினை தீவினைகள். ஆகவே ஆகாமியமானது சஞ்சிதத்துக்கு விதையாய்ப் பிராரத்தத்துக்கு அதில் வினையும் பலனும் முதிர்ந்திருக்குமளவும் இடையறவுபடாது தொடர்ச்சியாயத் தொடர்ந்தோட்டுறும் இயல்புடையதாகலான் ஆன்மாவானவன் முற்பிறவிகளிற் சேகரித்த வினைகளிட்டாய் திவ்யதேகத்தினுல் சொர்க்கானுபவத்தையும், யாதனாதேகத்தினுல் நரகானுபவத்தையும் அநுபவித்து அவ்விரண்டின்முடிவில் பிறவியெடுக்குஞ்சமயத்தில் அதிசூக்ஷ்மமாயுள்ள தத்துவசமூகமாகிய லிங்கதேகத்தையுடைத்து இருவினைகளுக்கான ஆகாமியவினையை மீட்டுஞ் செய்து முன்போல இசைந்துகொண்டு இன்ப துன்பங்களையடைந்து பிராரத்தத்தை யநுபவிப்பான். ஓ அழகிய கண்ணுடையாளே! பிராயச்சித்தத்தினுல் முன் கூறியவாறு செயல்வகையான கன்மங்கள் நீங்காவாம் ஆதலால் அவற்றையநுபவித்தேயொழிக்கவேண்டுமென்றறிவாய் ஆகையால் உனது குழந்தையைவிக்கதிறுலும் கொடுத்துச் சத்தியத்தைக் காக்க எனது வார்த்தை உலகத்தில் நிந்திக்கத்தக்கதாயும் பொய்யாகவும் கூடாது. நிலையில்லாத இச்சம்சாரத்தில் மக்கள் மனைவிகளெல்லாம் தருமத்தைத்தான் சாரமாகக்கொள்ளவார்கள். ஜனனமரணமோ தெய்வாதீனமாயுள்ளது. ஆகலான் இவ்விஷயத்தில் வியாகுலமாகச் சோகமடைதல் யுக்தமன்று. எவன் சத்தியத்தைக் கைவிடுகிறானோ அவனுடைய பிழைப்பு வீணுகும் அவமே சாப்புகழியவுலாததை விட்டால் அவ்வுலகத்தையடையான். இதனால் நீ அவசியமாகக் குழந்தையைக் கொடுப்பையாயின் நான் கம்சனிடத்தில் கொடுக்கிறேன். சத்தியத்தை நினைப்பதால் மேல்சுகமுண்டாகும். சுகம் கேட்டாலும் துக்கமேற்பட்டாலும் புண்ணியத்தையே செய்யவேண்டும் என்றார் வசுதேவர்.

இவற்றையெல்லாம் கேட்ட தேவகி தடுக்கமாட்டாது துக்கித்து நடுங்கிக்கொண்டே குழந்தையைக் கொடுத்துவிட்டாள். தருமசீலரான வசுதேவரும் அக்குழந்தையை வாங்கிக்கொண்டு கம்சன் வீட்டைநோக்கிச்சென்றார். அவ்வூரிலுள்ளாரெல்லாம் இவரைப்பார்த்துத் திகைத்து அந்தோ! தர்மாத்மாவாகிய இந்த வசுதேவரைப்பாருங்கள். ஓ ஜனங்களே! தான்சொல்லிய சத்திய வாக்கின்படி குழந்தையை எடுத்துக்கொண்டு கம்சன்வீட்டுக்குப் போகின்றார் பாருங்கள், பொறுமையில்லாதவராயும் சத்யசந்தன

ராயு மிருக்கின்ற வசுதேவர் மிருத்யுரூபமாயிருக்கின்ற கம்சனுக்குக் குழந்தையைக் கொடுக்கப்போகிறார் பாருங்களென இவருடைய தருமத்தையும் சாபல்யமான இவருடைய ஜீவிப்பையும் அற்புதத்தையும் பாருங்களென்று ஆச்சரியமடைந்தனர்.

வசுதேவர் கம்சன் வீட்டிற்குப் போய்த் தெய்வரூபமாயிருக்கின்ற அக்குழந்தையை அந்தப்பாதகன் கையிற்கொடுத்தார். கம்சனும் இவர் தைரியத்தைப் பார்த்து மிகவும் ஆச்சரியமடைந்து குழந்தையைவாங்கிச் சிரித்துக்கொண்டே ஓ வசுதேவரே! உம்முடைய பிள்ளையை நீரே கொண்டு வந்து கொடுத்ததினால் உம்மைப் புண்ணியசாலியென்று போற்றுகிறேன். எட்டாவது பிள்ளையல்லவா எனக்குச் சத்துரு. இது [illegible] கொல்லத்தக்கதுமல்ல இது உம்முடைய வீட்டில் சுகமாய் வளரட்டும் ஓ அறிவிற்சிறந்த வசுதேவரே! எட்டாவது பிள்ளையைமாத்திரம் கட்டாயமாய்க் கொடுத்துவிடவேண்டும் என்று சொல்லிக் குழந்தையை வசுதேவரிடம் கொடுத்துவிட்டான். குழந்தையை வீட்டுக்குக் கொண்டுபோகலாமென்று நல்லவார்த்தையைக் கம்சன் சொன்னபிறகு அக்குழந்தையை எடுத்துக்கொண்டு தன் வீட்டையடைந்தார். கம்சனும் மந்திரிகளைப் பார்த்து எட்டாவது பிள்ளைதானே எனக்கு மிருத்யுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது இந்த முதற்பிள்ளையையும் மற்றைய பிள்ளைகளையும் ஏன் வீணாகக் கொல்லவேண்டுமென்றான். மந்திரிகளும் இதுவே நல்லயோசனையென்று சொல்லிப் புகழ்ந்து, அவனிடத்தில் விடைபெற்றுக் கொண்டு தங்கள் தங்களிடம்போய்ச் சேர்ந்தார்கள். மந்திரிகள் போனபின்னர் நாரதமுனிவரவர் அவருக்கு அர்க்கிய பாத்யாசமனாதிகள் தந்து யோகக்ஷேமங்களைக் கேட்டபின் வந்தகாரணத்தையுங் கேட்டான் அவர் சிரித்துக்கொண்டே கம்சனைநோக்கி ஓ கம்சனே! நான் மேருமலைக்குப் போயிருந்தேன். அங்கு பிரம தேவர் முதலாயினோர் கூடித் தேவகியினிடத்தில் அமரசிரேஷ்டரான விஷ்ணுவானவர் கம்சனைச் சங்கரிப்பதற்கு அவதரிக்கப் போகிறாரென்று ஆலோசித்திருந்தனர், ஆதலால் இப்பொழுது கொண்டுவந்த பிள்ளையை நியதியறிந்து ஏன் கொல்லாமல் விட்டனை யென்றனர். கம்சன் ஓ நாரதரே! அவர்கள் சொல்லியபடியே அசரீரியாலும் எட்டாவது பிள்ளை எனக்கு மிருத்யுவென்றுதான் சொல்லப் பட்டிருக்கிறபடியால் அந்தப்பிள்ளையைத்தான் கொல்லு

போகிறேனென்றான். நாரதர் அரசனே! நீ ராஜநீதியிலறியப் படும் நன்மை தீமைகளை யறியாமலிருக்கிறாய். தேவர்களுடைய மாயாபலத்தையு மறியாயிருக்கிறாய். வேண்டுமானால் சொல்லு கிறேன்கேள். சத்துருசந்ததைக் கோருகின்றவனை அற்பசத்து ருவையும் அலட்சியஞ்செய்யக்கூடாது. அவ்வெட்டுக் குழந்தை களையும் ஒன்றாய்ச்சேர்த்துப்பார்த்தால் எல்லாரும் எட்டாவது பிள்ளையாவார்களல்லவா? வசுதேவனுடைய பிள்ளைகள் சத்துரு வென்றறிந்தும் விட்டமையால் நீ சுத்தமூடனென்று சொல்லி விரைவாய்ப்போய்விட்டார். போனபின் கம்சன் நாரதர்சொல்லி யபடிக்குமதத்தை யெண்ணிக் குழந்தையை வாளாலறுத்துக் கற்பா றையிலெறிந்து மனம் நிம்மதியடைந்தனன்.

பிறந்தபோதே கொல்லப்பட்ட அந்தக்குழந்தை என்னபாவ ஞ்செய்தது? முனிசிரேஷ்டராயும் அறிவுள்ளவராயும் தருமத்திலா சை யுள்ளவராயும் பிரமசாரியாயுமிருக்கிற நாரதமுனிவரும் இப்படிப்பட்ட துராலோசனையான பாவத்தை ஏன்செய்தார்? பாவத்தைச்செய்கிறவனை செய்விக்கிறவன் ஆகிய இருவரும் சம மான பாவமுள்ளவர்களென்று பண்டிதர்கள் சொல்லுகின்றார்க ளல்லவா? அந்த நாரதமுனிவர் அந்தத்துஷ்டனை சிசுஹத்தியில் ஏன் பிரேரேபித்தார்? எந்தக்காமபலத்தினால் இந்தக்குழந்தை நாசமடைந்ததென்றால் நாரதமுனிவர் வேடிக்கைப்பார்க்கிறவர்; எப்போதுங் கலகத்தில் பிரீதியுள்ளவர்; இவ்விரண்டும் தேவ காரியத்துக்குச் சாதகமே ஆகையால் கம்சனிடத்தில் வந்துசொ ல்லியது தேவகாரியத்திற்குச் சாதகமென்றே அறியற்பாலது. அவர் எக்காலத்தும் பொய்வார்த்தையிற் பிரவேசிப்ப தில்லை. அவர் சொல்லும் பொய்யெல்லாம் நன்மை பயப்பனவே. அவர் தேவர்களுக்குரிய சாதகத்தைச் செய்வதே தமக்காசாரமாகவுடை யவர். அவரை எந்தபாபமும் அணுகாது. இவர்செய்தி யிங்ஙன மிருக்கக் கம்சன் அந்தவசுதேவருக்குப் பின் பிறந்த ஆறுகுழந் தைகளையும் பிறந்த அவ்வக்கணங்களிலேயே முன்னுள்ள சாபத் தினாற்கொன்றுவந்தனன். அச்சாபத்தின்காரணம் யாதென்றால், சுவாயம்பு மன்வந்தரத்தில் மரீசி ருஷியினுடைய பத்தினியா கிய ஊர்ணையென்பவளிடத்தில் பிறந்த ஆறுபிள்ளைகளும் ஓர் காலத்தில் பிரமதேவனானவர் தன் புத்திரியோடு சங்கமஞ்செய் யப் பிரயத்தனப் படுகிறதைப்பார்த்துச்சிரித்தார்கள். அப்போது

பிரமன் அவர்களைப்பார்த்து, நீங்கள் அசுரயோனியில் பிறக்கக் கடவீர்களென்று சபித்தனன். அவ்வண்ணமே அறுவரும் முன்னர் காலநேமி என்கிற அசுரனுக்குப் பிள்ளைகளாகப் பிறந்துப் பின்னர் ஹிரணியகசிபுவுக்குப் பிள்ளைகளாகப் பிறந்துப் பூர்வஜன்மஞான முள்ளவர்களாயும், ராட்சதவெண்ணமில்லாமற் சாந்தசித்த முடையவர்களாயுமிருந்து மனோவிகாரமற்றுச் சாவதானமாய்ப் பிரமனை நோக்கித் தவஞ்செய்தனர். பிரமன் சந்தோஷித்தவனாய் அவர்களுக்குப் பிரத்தியக்ஷமாய் அவர்களைப்பார்த்து, ஓ குழந்தைகளே! முன்னமேற்பட்ட உங்களிடத்தில் எனக்கிப்போது சந்தோஷமுண்டாயிருக்கிறது வேண்டிய வரங்களைக் கேளுங்களென்றனன். அவ்வாறவர் அந்த வார்த்தையைக்கேட்டுக் களிப்படைந்துப் பிரமனைநோக்கி ஓ பிரமதேவனே! நீர் எங்களிடத்தில் சந்தோஷமடைந்த தன்மையினாலே தேவராலும் மனிதராலும் சர்ப்பங்களாலும் கந்தர்வராலும் சித்தர்களாலும் எங்களுக்கு மரணமுண்டாகாவண்ணம் வரந்தருமென்று கேட்டனர். பிரமன் அவ்வண்ணமே தந்தனம் உங்களிடம்போய்ச் சேருங்கள் என்வார்த்தையில் சந்தேகங் கொள்ளவேண்டாமென்று சொல்லிப்போயினன். அறுவருஞ் சந்தோஷமடைந்திருக்கும்பொழுது இச்செய்தியை இரணியகசிபு அறிந்து கோபங்கொண்டவனாய் அவர்களையழைத்து நீங்களென்னைவிட்டுப் பிரமனைச் சந்தோஷிப்பித்து அவனிடம்வரம்பெற்று எப்பொழுது வன்மையுடையவர்களானீர்களோ அப்பொழுதே என்னை அவமதித்தவர்களானீர்கள். இனி நீங்கள் என்னிடம் இருப்பீர்களாயின் வெட்டிவிடுவேன். பிழைத்திருக்க வேண்டுமாயின் பாதலம்போய்ச் சேருங்கள். அங்கு ஒரு செயலுமற்று நித்திரைசெய்திருந்துப் பின் தேவகிகர்ப்பத்தில் வருடந்தோறும் ஒவ்வொருவராய்ப் பிறக்கக்கடவீர்கள். அப்பொழுது உங்களை உங்கள் பிதாவாகிய காலநேமி என்பவன் கம்சனாய்ப்பிறந்து கொல்லப்போகிறான் என்று சபித்தனன். அச்சாபத்தின் வண்ணமே இப்பொழுது நடந்தது.

அந்த அறுவரும் இவ்வாறுபோக ஏழாவது ஆதிசேஷனுடைய அம்சம் தேவகிகர்ப்பத்திற் பிரவேசித்து நான்குமாதம் வளர்ந்து ஐந்தாமாதம் யோகமாயா சொரூபிணியினுடைய மாயையால் ரோகிணிகர்ப்பத்திற் பிரவேசித்தது, பின்னர் தேவகியினுடைய கர்ப்பம்போய் விட்டதென்று பிரசித்தியாயிற்று: அந்த

னைக் கம்சன் கேட்டுச் சந்தோஷமடைந்தனன். எட்டாவது தேவகிகர்ப்பத்தில் பகவானான விஷ்ணுமூர்த்தி வசித்தார். இதுவரையில் சொல்லிவந்த தேவாசுரர்களின் அம்சங்கள்போக ஏனையோருடைய அம்சங்களைச் சுருக்கமாகச் சொல்லுவோம். வசுதேவர் காசிபரம்சம், அவர்பத்தினியாகிய தேவகி அதிதியம்சம், பலதேவர் ஆதிசேஷனம்சம், கிருஷ்ணமூர்த்தி நாராயணரம்சம். அருச்சுனன் நரனம்சம். தருமர் யமனுடைய அம்சம். வீமசேனன் வாயுவினுடைய அம்சம் நகுலசகாதேவர் அஸ்வினிதேவதைகளின் அம்சம். கர்னன் சூரியனம்சம், விதுரர் யமாம்சம், துரோணர் பிரகஸ்பதி அம்சம், அசுவத்தாமா ருத்திராம்சம், சந்தனு சமுத்திராம்சம், அவன் மனையாட்டி கங்காதேவி அம்சம். தேவகர் கந்தர்வராஜனுடைய அம்சம், பீஷ்மர் வசு அம்சம், விராடன் சப்தமருத்துக்களம்சம், திருதராஷ்டிரன் அரிஷ்டனுடையபிள்ளையினம்சம், கிருபர் மருத்துக்களம்சம், துரியோதனன் கலியம்சம், சகுனி துவாபராம்சம், சுவர்ச்சாக்கியன் புதனுடையஅம்சம், திருஷ்டத்துய்மன் அக்னியம்சம், சிகண்டி ராக்ஷசாம்சம், பிரத்யும்னன் சனற்குமாராம்சம், துருபதன் வருணனம்சம், திரௌபதி இலக்குமி அம்சம், இளம்பஞ்சபாண்டவர் விசுவதேவாம்சம், குந்தி சித்தி அம்சம், மாத்ரி திருதிஅம்சம், காந்தாரி மதிஅம்சம், கேசபால ஸ்திரீகள் இந்திரனுடைய அப்சரஸ்திரீகளம்சம், ஏனைய ராஜாக்கள் அசுராம்சம், சிசுபாலன் இரணியகசிபனம்சம், ஜராசந்தன் விப்ரசித்தியினுடைய அம்சம், சல்லியன் பிரகலாதனுடைய அம்சம், கம்சன் காலநேமியினம்சம், கேசி அயசிரசினுடைய அம்சம், அரிஷ்டன் பாணாசுரனுடைய அம்சம், திருஷ்டகேது அநுல்லாதனம்சம், பகதத்தன் பாஷ்கலாம்சம், பிரலம்பன் லம்பனம்சம், தேனுகன் கரனம்சம், சாணூரமுஷ்டிகன் என்கிற இருவரும் வராஹனகிசோரனென்கிற இருவருடைய அம்சம், அரிஷ்டன் திதிபுத்திரனுடைய அம்சம், குவலயன் கஜாசுரனம்சம், பகியும் பகனும் பலியினுடையஅம்சம், துரோணபுத்திரன் யமன் ருத்திரன் காமன் குரோதன் என்னு நால்வருடைய அம்சம், அசுராம்சமாகப் பிறந்தவர்களெல்லாம் முற்பிறந்தவர்கள். தேவாம்சமாகப் பிறந்தவர்களெல்லாம் பின்பிறந்தவர்கள். பிரமன் முதலியோருடையபிரார்த்தனைக்கு விஷ்ணுமூர்த்தியால் வெண்கேசமும் கரியகேசமும் கொடுக்கப்பட்டபடியால் கரியகேசாம்சமாகவந்த கிருஷ்

ணமூர்த்தி சரீரமுடையவர்களாகவும் வெளியிலே சத்வாம்சமாகவந்த பலராமர் வெண்ணிறமுடையவராகவு மிருந்தனர். இந்த அம்ச ங்களுண்டானதைச் சொன்ன பாகவதரீதியைக் கேட்பவன் சர்வபாபத்தினின்றும் விடுபட்டவனாய்ப் பக்தர்களோடு கூடிச் சந்தோஷத்தை யடைவான்.

நாரதர் கம்சனிடம் செய்தகலகம் - முற்றிற்று.

## 22. நாரதர் துருவனுக்குத் தபோமார்க்கங் காட்டியது

சனகசனந்தனசநத்குமாரரும்-நாரதரும்-ருபுவும்-அம்சனும்-அருணியும்-யதியும்-பிரம புத்திரர்களான இவர்களெல்லாம் ஊர்த்வரேதஸ்களாய் நைஷ்டிக பிரமசரியத்திலே யிருந்துகொண்டு கிருகஸ்தாசிரமத்திலே வாசம்பண்ணவில்லை. அதர்மத்தினுடைய பாரியையான மிருஷையானவள் டம்பனென்னு மொரு பிள்ளையையும், மாயையென்னு மொரு பெண்ணையும், இரண்டு பேரைப்பெற்றாள். அந்த இரண்டு பேரையும் அபுத்திரனான நிருதியானவன் வாங்கிக்கொண்டான். அந்த டம்பமாயைகளுக்கு லோபமும் நிகிருதியும் உண்டாயின. அவைகளினின்றும் குரோதமும் இம்சையும் உண்டாயின. அந்தக் குரோதத்தினிடத்தில் கலியானவன் பயத்தையும் மிருத்யுவையும் உண்டாக்கினன். அவைகளினின்றும் யாதனையென்றும் நிரயமென்றும் ஒரு ஸ்திரீபுருஷருமாய் மிதுனமுண்டாயின. இவர்களெல்லாம் அதர்ம விருக்ஷத்தினுடைய சம்சாரஹேதுக்களான சாகைகள். இந்தச் சாகைகளின் சிருஷ்டியைச் சொல்லுகின்ற புருஷனை ஆசரியமிருக்கக் கடவன். பிரதிசர்க்கம் என்னப்பட்ட பிரளயஞ் சொல்லப்பட்டது. புண்ணியகரமான இந்தப்பிரதிசர்க்கத்தைக்கேட்ட புருஷன் தன்னுடைய சம்சாரத்திகத்தை விட்டு விடுகிறான

இனிமேல் புண்ணிய கீர்த்தியாகியும், ஹரியினுடைய அம்ச மான பிரமாவினுடைய சித்தாந்தரத்தில் நின்றும் பிறப்பையுடை யவனான ஸ்வாயம்பு மநுவினுடைய புத்திர வம்சத்தைச்சொல் லுகிறேன். சதரூபை யென்னப்பட்ட ஸ்திரீக்குப் பதியான மநு வினுடைய பிள்ளைகளான பிரியவிருதன் உத்தானபாதன் இவர் களிரண்டு பேரும் வாசுதேவமூர்த்தியினுடைய அம்சமாகையி னாலே ஜகத்தை யிரட்சித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு

ள்ளை உத்தான பாதனுக்கு சுனீதியென்றும், சுருசியென்றும் இரண்டு ஸ்திரீகள், அவர்களுக்குள்ளே சுருசியென்கிறவள் பதிக்கு அத்தியந்த இஷ்டையாயும், சுனீதியானவள் பதிக்கு இஷ்டமில்லாதவளாயுமிருந்தார்கள். அந்த சுனீதியினுடைய பிள்ளையானது துருவன் தனது சக்களத்தித் தாயாகிய சுருசியின் பிள்ளையான உத்தமனை சீராட்டிக்கொண்டிருக்கிற தகப்பனுடைய மடியிலேற வேணுமென்று உத்தானபாதன் அருகிற்சென்ற துருவனைப்பார்த்து ராஜா சந்தோஷப்படவில்லை. அந்தச்சமயத்தில் சுருசியானவள் சக்களத்தியின் பிள்ளையான துருவனைப்பார்த்து ராஜா கேட்டுக்கொண்டிருக்கப் பொறாமையுடனே கர்வத்தினாலே ஒருவார்த்தை சொல்லுகிறாள்.

வாராய் குழந்தாய்! நீ ராஜகுமாரனாயிருந்தாலும் என் கர்ப்பத்திலே பிறவாததால் உனக்கு ராஜாசனம் கிடைக்கமாட்டாது. ராஜாவினது சிங்காசனத்தை இச்சிக்கிறவனேயானால் தபசினாலே பரமபுருஷனை ஆராதித்து அவருடைய அநுக்கிரகத்தினாலே என்னுடைய கர்ப்பத்திலே பிறப்பை சம்பாதிக்கக் கடவாயென்று சொன்ன சபத்தினி மாதாவுடைய துர்வார்த்தைகளினாலே அடிக்கப்பட்டவனாய் தண்டத்தினாலே அடிக்கப்பட்ட சர்ப்பம்போல் ரோஷத்தினாலே பெருமூச்சுவிட்டுக்கொண்டு அழுகையுடன் தாயாருடைய சந்நிதானத்திலே போய்த்துடிக்கின்ற உதட்டையுடைய அந்தக் குழந்தையை சுனீதியானவள் மடியிலெடுத்து வைத்துக்கொண்டு சபத்தினியான சுருசி சொன்ன வார்த்தையை அந்தப்புரஜனமுகமாய்க்கேட்டு சோகமாகிற காட்டுத்தீயினாலே வாடினகொடிபோலே தைரியத்தைவிட்டு, தாமரைப்புஷ்பம்போலொத்த நேத்திரங்களினாலே கண்ணீர்விட்டு, தீர்க்கமானபெருமூச்சுடன் சோகத்தினுடைய கரையைக்காணமாட்டாமல் தன்னுடைய குழந்தையைப்பார்த்து ஒருவார்த்தை சொன்னாள். வாராய் குழந்தாய்! பாராளிடங்களிலே அபராதத்தை யெண்ணாதே. பரனைத்துதிக்கப்படுகிறவன் தானே அந்தத் துக்கத்தையனுபவிக்கிறான். பாக்கியஹீனையான என் உதரத்திலே தரிக்கப்பட்டு என்னுடைய ஸ்தன்னியத்தினாலே விருத்தியும் அடைந்தாயென்று சுருசி சொன்னவார்த்தை யதார்த்தமே. ராஜாவானவன் என்னைப் பாரியையென்றும் தாஸபாத்தாவென்றும் அங்கீகாரம் பண்ணுகைக்குச் சங்கோசப்படுகிறான் ஆனபடியினாலே, நீ துவே

ஷத்தைவிட்டவனாய்ச் சுருசியின் குமாரனான உத்தமனைப்போல் ராஜாசனத்தை இச்சிக்கிறவனானால் அதோக்ஷஜனான சுவாமியினுடைய பாதாரவிந்தத்தை ஆராதிக்கக்கடவாயென்று அவள் சொன்ன வண்ணம் செய்யத்தக்கது யதார்த்தமே. பிரமாவானவர் சத்துவாதிகுணங்களையுடையவரான பகவானுடைய பாதபத்மத்தைப் பூசித்து யோகிகளாலே சேவிக்கத்தக்கதான பாரமேஷ்டிய பதத்தை யடைந்தார். உனக்குப் பாட்டனாகியும் பூச்சியனாகியு மிருக்கிற மநுசக்கரவர்த்தியானவர் அந்த பகவானை சர்வாந்தரியாமி யென்கிற புத்தியினால் அதிகமான தட்சணையையுடைய யக்கியங்களினாலே பூஜித்து அன்னியர்களாலே அடையக் கூடாமலிருக்கிற அகண்டமண்டலாதிபத்தியத்தையும் அந்தியத்திலே மோக்ஷசுகத்தையும் அடைந்தார் வாராய்குழந்தாய் பக்தாளிடங்களிலே வாற்சல்லியத்தை யுடையவராகியும் மோட்சத்தை இச்சித்த யோகிகளாலே தேடத்தக்கதான பாதாரவிந்தத்தை யுடையவராகியும் பிரமாதிகளாலே தேடப்பட்டும், அஸ்தத்திலே பத்மத்தைத்தரித்து கொண்டிருக்கிற ஸ்ரீ மகாலட்சுமியினாலே தேடப்படுகிற அவனைவிட வேறொருவனா உனது துக்கத்தைப் போக்கடிக்கிறவனைக் காணேனென்று சொல்லுகிற தாயாருடைய வார்த்தையைக்கேட்டு தைரியத்தினாலே மனத்தை நிக்கிரகித்து, துருவனானவன் பிதாவினுடைய பட்டணத்தில் நின்றும் வெளிப்புறப்பட்டான் அந்த விருத்தாந்தத்தை நாரதர்கேட்டு அவனிடத்துக்குவந்து அவனுடைய செயலை அறிந்து, பாவத்தைப்போக்கடிக்கின்ற கையினாலே சிரசிலே ஸ்பரிசித்து ஆச்சரியத்துடனே ஒருவார்த்தைசொன்னார். இவன் சிறுபிள்ளையாயிருந்தாலும் தன் மாற்றாந் தாயாருடைய மானக்குறைவான துஷ்ட வார்த்தைகளைக்கேட்டு சகியாத க்ஷத்திரியாளுடைய ஆச்சரியகரமாயிருக்கிற பிரபாவத்தை என்னசொல்லப் போகிறேனென்று தமக்குள்ளே ஆச்சரியத்தையடைந்து, அவனைநோக்கி வாராய் குழந்தாய்! சர்வசம்பத்துடனேகூடின தகப்பனாருடைய கிருகத்தைவிட்டு நீ ஒருவனாய் எங்கேபோகிறாய் உனது சுவஜனத்தில் நின்றும் உண்டான அவமானத்தினாலே தபித்துக்கொண்டிருக்கிறவனாகத் தோணுகிறதென்ற நாரதருடைய வார்த்தையைக்கேட்டு துருவன் சொல்லுகிறான்.

ஓ சுவாமி! பகவத்தியானத்தைப் பார்க்கிலும் இந்த ஐசுவரியம் எவ்வளவென்று சொல்லுகிற அவனுடைய கருத்தை நாரதர் அறிந்து, மாற்றாந்தாயாரான சுருசியினுடைய மர்மபேதியானவார்த்தைகளால் நொந்திருக்கிற மனதையுடைய இவன சமாதானத்திற் குட்படமாட்டானென்று அறிந்துகொண்டு நாரதர் அவனைநோக்கி ஒருவார்த்தை சொன்னார். வாராய் குழந்தாய்! விளையாட்டிலே ஆசக்தி யுடையவனாகியும் சிறுபிள்ளையாகியுமிருக்கிற உனக்கு அவமானமும் சன்மானமும் இப்போது யோக்கியமாகப் பார்க்கவேண்டியதில்லை. மானம அவமானமென்கிற விவேகமிருந்தாலும் புருஷனுக்கு மோகத்தைவிட்டால் விசனத்துக்கு வேறே ஹேதுக்களில்லை. வித்துவானானவன் ஈஸ்வரனுடைய அநுகூலத்தையன்றி நம்முடைய வியாபாரங்கள் பலவேதுக்கள் ஆகமாட்டாதென்றறிந்து பகவத்சங்கற்பததினால் உண்டானமட்டுக்கும் சர்தோஷத்தை யடைவன். நீ தாயாராலே உபதேசிக்கப்பட்ட யோகததினாலே பகவானுடைய பிரசாதத்தையடையவேணுமென்று இச்சிக்கின்றாய். அந்த பகவானை ஆராதிக்கிறது மகாப்பிரயாசையென்று உன்னுடையநிச்சயம். மன்னசீலாளான ருஷிகள் நாநாபபிரகாரங்களாகக் கர்மயோகஙகளினாலேயும்,சமாதியினாலேயும், தேடிககணடு பிடிககவில்லை ஆனபடியினாலே இநத நிஷ்பலமான கோரிககையை யொழிக்கத்தககது. புருஷார்த்தங்களுக்கு யோக்கியமான வயசுவநதபோது எததனம பண்ணப்போகிறாய், குணசிரேஷ்டனான புருஷனைக்கண்டு சந்தோஷிக்கவும் குணமில்லாத புருஷனைக்கண்டு தயைபணணவும் சமானமான புருஷனிடத்திலே சினேகம் பண்ணவும வேணடும, அவர்களிடங்களில அசூயையும் அவமானத்தையும விரோததகதையும் பண்ணக்கூடாதென்று சொன்ன நாரதமசாமுனியின் வார்த்தையைக்கேட்டு, துருவன் சொல்லுகிறான் வாரீர் பகவானே சுகதுக்கங்களிலே சமமான மனதையுடைத்தான மகாததுமாக்களுக்கு இந்தச்சாநதியானது சொலலத்தக்கது க்ஷாததிர சுபாவத்தை யடைநது விநயமிலலாத என்னுடைய மனதிலே சுருசியினுடைய துர்வார்த்தைகளாகிற பாணஙகளினால் பிளக்கப்பட்டிருக்கிற படியினாலே இந்தச்சாந்தியானது மனதில் தரிக்கவில்லை. எனது பிதுர்பிதா மகாதிகளினாலேயும் அன்னியாளாலேயும் அடையப்படாமலிருக்கிற மூன்றுலோகத்தைக்காட்டிலும் உத்திரு

ஷ்டமாயிருக்கிற ஸ்தானத்தை யடையவேண்டுமென்று இச்சையையுடைய எனக்கு நல்வழியைச் சொல்லுமென்று துருவனாலே சொல்லப்பட்ட வசனத்தைக்கேட்டு, நாரதமகா முனியானவர் சந்தோஷப்பட்டு, பாலனாயிருக்கிற துருவனைப்பார்த்து தயையுடன் ஒருவார்த்தை சொல்லுகிறார்.

வாராய்குழந்தாய் உன்னுடைய பிஷ்டத்துக்கு தாயாராலே சொல்லப்பட்ட மார்க்கம் ஷாட்குண்யபரிபூரணரான வாசுதேவனே காரணராகையினாலே அவரிடத்தில் அசஞ்சலமானமனதினாலே பஜனைபண்ணவேண்டும். தர்மார்த்த காம மோக்ஷங்களென்கிற புருஷார்த்தங்களுக்கு ஸ்ரீ ஹரியினுடைய பாதபஜனமே முக்கியம் உனக்குமோக்ஷமுமுண்டாகப்போகிறது. யமுனையினுடைய தீரத்திலிருக்கின்ற மதுவனத்திலே அந்த ஸ்ரீஹரியானவர்முக்கியமாய் வாசஞ்செய்வர் அந்த வனத்தைக்குறித்துப்போய் யமுனையின் மங்களகரமான தீர்த்தத்திலே திரிகாலமும்ஸ்நானம்பண்ணி உனக்கு உசிதங்களான தேவதாநமஸ்காராதி நித்தியகர்மங்களைச்செய்து தர்ப்பைகளால் பண்ணப்பட்ட ஆசனத்திலே யிருந்துகொண்டு ரேசக பூரக கும்பகங்களென்கிற மூனறு பிரகாரமான பிராணயாமத்தினாலே பிராணவாயு இந்திரியங்கள் மனது இவைகளுடைய சஞ்சலத்தை மெள்ளதள்ளிப்போட்டு, தைரியத்துடனே ஆதிகுருவான ஸ்ரீமந்நாராயணனைத் தியானம்பண்ணி பக்தாளிடங்களிலே சாவகாலமும அநுக்கிரகத்தைப்பண்ணுகிறவராகியும், வரங்களைக்கொடுக்கின்ற பேர்களுக்குள்ளே சிரேஷ்டராகியுமிருக்கிற பகவானை ஏகாக்கிரமான மனதினாலே தியானம் பண்ணுகிறவன் அந்த பகவத்தியானத்தில நின்றும் திரும்புகிறதில்லை. சிரேஷ்டமாகியும் ரகசியமாகியுமிருக்கிற அந்தத் தியான மந்திரத்தை ஏழுநாளைக்கு ஜபிக்கிறபுருஷன் தேவதைகளையெல்லாம் காண்பான். அப்படிப்பட்ட துவாதசாக்ஷரிக்கொப்பான பூஜையைசசொல்லுகிறேன்கேள். பரிசுத்தங்களான தீர்த்தங்களினாலேயும், புஷ்பமாலைகளினாலேயும, கந்தமூலபலங்களினாலேயும், சிலாக்கியமான அறுகினாலேயும், தளிர்களினாலேயும், பிரியமான துளசியினாலேயும், பூச்சிய பாததிராதிகளினாலேயும், சுவர்ணம் வெள்ளிமுதலான பகவத்பிரதமை அல்லது பிருதிவி ஜலாதிகளிலே பூஜித்து விஷயங்களிலே பிரவர்த்தியாம லிருக்கிறமனதையுடையவனாய் ஞானசீலனாய் சாந்தனாய் மௌனத்தோடேகூடி

னவனாய் மிதமாக கந்தமூலபலங்களைப் புசித்து பெரியோர்களால் விதிக்கப்பட்டபடி பூஜைகளையும் மந்திர இருதயமான துவாதச அக்ஷரியினாலே மந்திரமூர்த்தியான பகவான பொருட்டு பண்ணக்கடவாய், மனோவாக்கு காயங்களால் பக்தியுடனே கூடி பூஜிக்கிறபேர்களுக்கு பக்தியை விருத்தி பண்ணுகிறதாய்க்கொண்டு பிராணிகளுக்கு தாமார்த்த காம மோக்ஷங்களிலே இஷ்டமானதைக்கொடுக்கிறா. இந்திரிய சுகங்களிலே விரகதனைவன அதிகமான பக்தியினாலே அந்தப் பகவானை ஆதமாவினுடைய மோக்ஷத்தினபொருட்டு பஜனை பண்ணவேண்டுமென்று நாரதராலே சொலலப்பட்ட வார்த்தையை ராஜகுமாரனை துருவன் கேட்டு, நாரதரைபபிரதக்ஷணம்பண்ணிசேவித்து ஹரியினுடைய சரணங்களினாலே அலங்கரிக்கப்பட்டிருக்கிற மனோகரமான மதுவனத்தைக் குறித்துபபோனான் பிறபாடு நாரதர் உத்தான பாதராஜாவினுடைய அந்தப்புரத்திலே பிரவேசித்து அநதராஜாவினாலே பூஜிக்கப்பட்டவராய் சுகமாக ஆசனத்திலே யிருநது கொண்டு ஒரு வார்த்தைசொனனார்.

வாராய் ராஜாவே! வாட்டத்துடன் கூடின முகத்தோடே தீர்க்கமாக எனனயோசனைபண்ணுகிறாய். உனனுடைய தர்மார்த்தகாமங்களுக்கு இழிவோவென்று பிரஸ்னைபண்ணுகின்ற நாரதமுனியைப்பார்த்து ராஜாசொலலுகிறா் வாரீர் பிரம்மநிஷ்டரே! என்னுடைய குழநதை ஐந்துவயதிலே மகாபுததிமானாய் திருஷ்டிப் பிரியனாயிருக்கிறவன். தன் தாயாருடனே தயையில்லாத ஸ்திரீசனத்தினாலே துரததிவிடபபட்டான். இளப்பையடைநது பசியுடனேவாடுகின்ற முகாரவிநதததைதயுடையவனாய் அநாதனாய் வனத்திலேபடுததுக்கொண்டிருக்கின்ற எனது குழநதையைமிருகங்கள் பக்ஷியாமலிருக்குமா? ஸதிரீமோகத்திலே துர்ச்சனனுக்கெல்லாஞ் சிரேஷ்டனாயிருக்கிற நான பிரீதியினாலே மடியிலே யேறவந்த பிள்ளையைப்பார்த்துச சநதோஷியாமறபோன என்னுடைய துஷ்டபாவத்தைப் பாருமெனறுசொலலுகிற ராஜாவைப்பார்த்து நாரதர்சொல்லுகிறா. வாரும்பிள்ளாய் ராஜாவே! ஜகத்தையெல்லாம் வியாபிக்கததக்கினகீர்ததி சம்பாதிக்கப்போகிற பிள்ளையினுடைய பிரபாவத்தையறியாமல் தெய்வத்தினாலேரட்சிக்கப்பட்டிருக்கின அந்தப் பிள்ளையைககுறிதது நீ விசனப்படவேண்டாம். லோகபாலாளாலேயுஞ் செய்யக்கூடாத தபசுமுத

வான கர்மத்தைப்பண்ணி உன்னுடைய கீர்த்தியை விஸ்தரிப்பித்துக்கொண்டு சீக்கிரமாக வரப்போகிறானென்று தேவருஷியான நாரதராலே சொல்லப்பட்ட வார்த்தையை விசுவாசத்துடனே கேட்ட ராஜாவானவன் ராச்சியலட்சுமியிலே அநாதரவு பண்ணிப் பிள்ளையைத்தானே சிந்தித்துக்கொண்டிருந்தான். துருவனானவன் அந்த மதுவனத்திலேபோய் புண்ணிய தீர்த்தத்திலே ஸ்நானம்பண்ணி சுசியாய் அந்தராத்திரி உபவாசமாகவிருந்து புத்திர சமாதானத்துடனே கூடினவனாய் நாரதருடைய ஆஞ்ஞைப்பிரகாரம் பரமபுருஷனை ஆராதித்துச சரீரமிருக்கிறதற்காக மூன்று நாளைக்கொருதரம் விளாம்பழம் இலந்தைப்பழம் இவைகளைப் பக்ஷித்துக்கொண்டு ஹரியைப் பூஜித்தவனாய் ஒருமாதத்தைப் போக்கி, மறுமாசம் ஆறுநாளைக்கொருதரம்பழுத்து உதிர்ந்தஇலை திரணங்களைப் பக்ஷித்தும், மூன்றுமாசம் ஒன்பதுநாளைக்கொருதரம் தீர்த்தத்தைப்பருகியும், புண்ணியகீர்த்தியான சுவாமியைச் சமாதியோகத்தினாலே பூசித்தும், நான்காமாசத்திலே பன்னிரண்டு நாளைக்கொருதரம் வாயுவைப் பக்ஷித்துக்கொண்டு சுவாச நிரோதனம் பண்ணவராய் சுவாமியைத்தானே தியானம் பண்ணிக்கொண்டும், ஐந்தாமாசத்திலே சுவாச நிரோதமுடையவனாய்ப் பிர்ம்மத்தைத் தியானம்பண்ணிக்கொண்டு ஒருபாதத்தினாலே சலியாமல ஸ்தாணுவானதுபோலே யிருந்துகொண்டும் பூதேந்திரியங்களுக்கு இருப்பிடமானமனதை சப்தாதிவிஷயங்களில நின்றும் ஆகருஷித்துப் பகவானுடைய ரூபத்தைத் தியானம் பண்ணிக்கொண்டும் மகத்தகங்காரங்கள் முதலான தத்துவங்களுக்கெல்லாம் இருப்பிடமாகியும், பிரகிருதி ஜீவர்களுக்கு ஈசுவரனாகியுமிருக்கிற பிர்மத்தைத் தரிக்கின்ற துருவனுக்கு மூன்றுலோகங்களும் நடுங்கின. துருவனுடைய பாதாங்குட்டத்தினாலே ஊன்றப்பட்ட பூமியானது கஜேந்திரன் ஏறியிருக்கின்ற ஓடமானது அடிக்கடி இடம் வலமாக வணங்குவதுபோல் பூமியானது பாதி மட்டும் வணங்கிறது. அந்தத் துருவனானவன் தன்னுடைய இந்திரியத் துவாரங்களையும், பிராணவாயுவையும விஷயங்களிலே ஓடாமல்நிறுத்தி ஏகாந்தபக்தியினாலே விசுவரூபியான பகவானைத்தியானம் பண்ணிக் கொண்டிருக்கையில, லோகபாலருடனே கூடின லோகங்களெல்லாம் மூச்சடங்கி உபத்திரவத்துடனே பகவானைச் சரணமாக அடைந்து விஞ்ஞாபனம் பண்ணுகிறார்கள்.

வாரீர்! பகவானே சராசராத்மகமான சர்வப்பிராணி சரீரத்துக்கும் இப்படிப்பட்ட பிராணசங்கடத்தைசையை ஒருகாலும் அறியோம், ஆனபடியினாலே எங்களை இந்தத்துக்கத்தில் நின்றும் ரட்சிக்கவேண்டுமென்று சொல்லுகின்ற தேவதைகளைப்பார்த்து பகவான் சொல்லுகிறார். வாருங்கள் தேவதைகளே! இந்தப்பாலனை துருவன் அரிதான தபசுசெய்கிறதினாலே உங்களுக்குப் பிராணவாயுவினுடைய தகை உண்டாச்சுது இவன் என்னிடத்திலே நிறுத்தப்பட்ட மனதையுடையவனாய் இருக்கிறான். அவனைநிவர்த்திப்பிக்கிறேன் நீங்கள் பயப்படாமல் சுயஸ்தானத்துக்குப் போங்களென்று அருளிசெய்தார்.

பகவத் வாக்கியத்தினாலே பயத்தைவிட்ட தேவதைகள் பகவானை நமஸ்கரித்துச் சுவர்க்கத்தை யடைந்தார்கள். பிற்பாடு ஆயிரஞ்சிரசுடைய பகவானும் கருடாரூடராய் பக்தனை துருவனைப் பார்க்கவேண்டுமெனகிற இச்சையினாலே மதுவனத்தைக் குறித்துப்போனார் அந்தசதுருவன் யோகபரி பககுவத்தினாலே ஸ்திரமான புத்தியினால தனனுடைய இருதய புண்டரீகத்திலே கருடாரூடராய் மின்னலைபபோல் பிரகாசித்து மறைந்தபகவானைச் சீக்கிரமாக வெளியிலே அநதப்பிரகாரமேகண்டு பயந்தவனாய்ச் சரீரத்தைத தண்டதைப்போலேவணங்கிப் பூமியிலே நமஸ்கரித்து அந்தபகவானைக் கண்களினாலேபார்த்து பானம்பண்ணுகிறவன் போலவும், கையினாலே ஆலிஙகனம பண்ணிகொள்ளுகிறவன்போலவு மிருநதான். அதைசகண்டு பகவான் தன்னுடைய குணங்களைத் தோத்திரம் பண்ணவேணடுமென்று இசசித்துத் தோத்திரம் பண்ணதெரியாமல கையை கூப்பிக்கொண்டிருக்கின்ற துருவனைப்பார்த்து வேதமயமான சங்கத்தினாலே கிருபையோடே அவன் கபாலத்தில் பரிசித்தார். அநத க்ஷணத்திலேதானே வேதமயமான சரஸ்வதியையடைந்து சீவேசுவர சுவரூபத்தின் நிச்சயத்தை யறிநதவனாகியும், பக்தியினாலே புணடான பிரீதியையுடையவனாகியும், சாசுவத ஸ்தானத்தை யடையப் போகிறவனாகியுமிருக்கிற துருவனானவன பகவானைத் தோத்திரம் பண்ணினான்.

சமஸ்தசக்தியை யுடையவராயும் பிரகாசியாமலிருந்த என்னுடைய வாக்கிந்திரிய முதலானவற்றைப் பிரகாசிப்பிக்கச் செய்

தவராகியுமிருக்கிற உமக்குப்பிரணாமம் பண்ணுகிறேன். வாரீர் பகவானே! சத்வாதிகுணங்களையுடையதாகியும் மாயையென்றுஞ் சொல்லப்படுகின்ற உம்முடைய சக்தியினாலே மகத்தகங்காரங்கள் முதலான சர்வபிரபஞ்சத்தையுஞ் சிருஷ்டித்து அதிலே அநுப்பிரவேசித்து அந்தர்யாமியாயிருந்துகொண்டு மாயாவிகாரங்களாய இந்திரியங்களினாலே காருகளிலே ஒரு அக்கினிதானே நாநாவிதமாகப் பிரகாசிக்கிறதுபோல நாநாரூபமாகப்பிரகாசிக்கிற உம்மாலேகொடுக்கப்பட்ட ஞானத்தினாலே சரணாகதனடைந்த பிரமாவானவன் தூங்கியெழுந்த புருஷனைப்போலே இந்தப்பிரபஞ்சத்தைப்பார்த்தார். முக்தாளுகளெல்லாம் ரக்ஷகமான உம்முடைய பாதமூலமானது செய்தநன்றியறியாத புருஷனாலே எப்படிதான மறக்கப்படும் சமுசாரத்தை ஒழிகையும் மோக்ஷத்தையும் கொடுக்கின்ற உம்மை ஆத்மகாம நிமித்தமாக உபாசிக்கிறவர்கள் நிச்சயமாக உம்முடையமாயையினாலே வஞ்சிக்கப்பட்ட புத்தியையுடையவர்கள். சமானமான தேகத்தினாலே அநுபவிக்கத்தக்கதான சுகத்தைக்கோரி கற்பகவிருக்ஷமான உம்மை அர்ச்சிக்கின்றார்கள். விஷய சம்பந்தத்திலே உண்டாகத்தக்க சுகம் நரகத்திலேயும் உண்டாகும் அது கோரத்தக்கதன்று. அவர்கள் அப்படிப்பட்ட தேகபோக்கியமான சொற்பசுகத்தைக் கோருகிறதினாலே உம்முடையமாயையினாலே வஞ்சிக்கப்பட்டவர்களே. பிராணிகளுக்கு உம்முடையபாதாரவிந்தத் தியானத்தினாலும், உம்முடைய பக்தர்களுடைய சத்கதைகளைக்கேட்கிறதினாலும், உண்டாகிறசுகம் தன்னுடைய ஆனந்தரூபமான பிரம்மாநுபவத்திலே உண்டாகமாட்டாது. உம்மிடத்திலே சர்வதா பக்தியையுடையவர்களாகியும், நிர்மலமான இருதயத்தை யுடையவர்களாகியும் மகான்களாகியுமிருக்கிற பேர்களுடைய சகவாசமானது எனக்கு இடைவிடாமலிருக்கும்படி அநுக்கிரகிக்கவேண்டும். அவர்களுடைய சகவாசத்தினாலும், உம்முடைய குணகதையாகிற அமிர்தபானத்தினால் பயங்கரமாகியும் அதிகமான துக்கத்தையுடையதாகியுமிருக்கிற சமுசார சமுத்திரத்தினுடைய கரையைச் சீக்கிரமாக ஏறுவேன். ஸ்தாவரசங்கம ரூபங்களாயிருக்கிற பிரபஞ்சத்துடன் கூடினதாகியும், ஸ்தூலமாகியுமிருக்கின்ற இந்த விராட் ரூபத்தை நான் அறிவேன். இதைப்பார்க்கிலும் வேறுபட்டதாகியும் மனோவாக்குகளினாலே எட்டப்படாமலு மிருக்கிற உம்மு

னுடைய நிசஸ்வரூபத்தை நான் அறியேன் ; பிரபஞ்சத்திலும் கர்மத்திலும் அகப்படாதவராகியும், அளவில்லாத ஞானமுடையவராகியும், ஷட்குண பரிபூரணராகியும், திரிகுணத்தில் அகப்படாதவராகியும், சங்கற்பஞானத்தினுலே அகப்பட்டதாகியும், நிபந்தனையுடைத்தான மரியாதையையுடையதாகியு மிருக்கிற சர்வத்தையும் பூரணமானஞானத்தினுலே பார்த்துக்கொண்டு பிரபஞ்சவிலட்சணமாக யக்கிய ரூபியாகியும், விசுவகாரணராகியும், அத்தியந்த சூனியராகியும், ஆநந்த ஸ்வரூபராகியும், நிர்விகாரராகியுமிருக்கிற உம்மைச்சரணமாக அடைகிறேன். இச்சிக்கப்படுகின்ற பசுபுத்திராதிபலன்களைச் சிந்திக்கச்செய்கின்ற உம்முடைய பாதபதுமத்தை அர்த்தகாமாதி அபேட்சையினுலே பஜனை பண்ணுகிற தீனரான எங்களையும் புருஷார்த்த ஸ்வரூபியான நீர் கன்றைவிட்டுத் திரும்புகிற பசுவானதுபோலே ரட்சிக்கிறீரென்று பத்திமானுன துருவனுலே தோத்திரம் பண்ணப்பட்டவராய் பக்தாளிடத்திலே பிரீதியை யுடையவரான பகவான் அந்த துருவனைப் பார்த்துச் சந்தோஷித்து ஒருவார்த்தைசொன்னார்.

வாராய் ராஜகுமாரனே! உன்னுடைய மனதிலே இருக்கிற இஷ்டத்தை நான் அறிவேன. போசனமான விரதத்தையுடையவனுன நீ அன்னியர்களாலே அடையப்படாமலும தேசோமயமாயும் சூரியாதிநவக்கிரகங்கள் அசுவனியாதிநட்சத்திரக்கூட்டமும் செக்கிலே பிணைக்கப்பட்ட சுழல் மரமானதுபோல சுழலத்தக்கதாகியும, அவாந்தர கற்பவர்சிகளுக்குப் பிறபாடு இருக்கிறதாகியும், நட்சத்திர ரூபாளான யமன - அககினி - காசிபா-சப்தரிஷிகள் முதலானபேர்களும் பிரதட்சணமாகச சஞ்சரித்துக்கொண்டிருக்கிற பதத்தை உனக்குக்கொடுக்கிறேன உன்னுடைய தகப்பன் உன்வசத்திலே ராச்சியத்தை வைத்துபபோட்டு தபசுக்கு வனத்தையடைந்தபிறபாடு தாமத்தை ஆசிரயித்தவனுய்ச் சித்திக்கப்பட்ட இந்திரபோகத்தையுடையவனுய் இருபத்தாறுயிரம் வருஷம் பூமியை ரட்சிக்கபபோகிறுய் உன்னுடைய பிராதாவான உத்தமனனவன் வேட்டைக்குபபோனவிடத்திலே நாசத்தையடைந்திருக்கையில், அவனிடத்திலே பிரீதியையுடைய அவன் தாயாரான சுருசியானவள் அவனைத் தேடிக்கொண்டு காட்டுத்தியிலே பிரவேசிக்கப்போகிறுள். நீ யக்கியமூர்த்தியான என்னை பூரணமான தட்சணையையுடைய யக்கியங்களினுலே பூசித்து தே

காநத்திலே எண்ணினைத்தும் ஒருபடியும் ஜன்மத்தையடையாத யதிகளுடைய உயர்ந்த ஸ்தானத்தைப்போலும் சப்தரிஷிகளுடைய பதத்தைக்காட்டிலும் மேலானதாயும் சர்வலோகங்களினாலும் நமஸ்கரிக்கப்பட்டதாயு மிருக்கிற ஸ்தானத்தை யடையப்போகிறாயென்று அநுக்கிரகித்து அவனைப்பார்த்துக்கொண்டிருக்கத் தம்முடைய ஸ்தானத்தை யடைந்தார்.

ஜிதேந்திரியாளான சனந்த முதலான ருஷிகள் அநேக ஜன்மங்கள் யோகாப்பியாசஞ்செய்தும் அறியப்படாத பகவானுடைய பாதாரவிந்தச் சாகையை ஆச்சிரமங்களில் அடைந்தும் பேதயுக்தியால் அஞ்ஞானிகளுக்கெல்லாம் நிலைவுணரான நாரதருடைய செனத்தை யதார்த்தமாகக் கிரகிக்காமல் எனக்கும் கீழ்ப்பட்ட ஸ்தானத்தையடைய தேவதைகளினாலே மோசம்போய் நம்மாலே பிரார்த்திக்கப்பட்ட இந்தஸ்தானமானது ஆபசில்லாத புருஷனிடத்திலே வைத்தியஞ்செய்ததுபோல விபாகமாயிற்று. சமுசாரதுக்கத்தைப்போக்கடிக்கின்ற ஜகத்குருவியான பகவானைத் தபசினாலே பிரசன்னராகப் பண்ணிவித்துக்கொண்டும் மோட்சத்தைவிரும்பாமல் பாக்கியஹீனனான நான், தரித்திரனானவன் சக்கரவர்த்தியான ராஜாவினிடத்திலே நின்றும் உமித்தாகம் யாசித்ததுபோல, திரும்பவும் சமசாரத்தைதேயாசித்தேனென்று தன்னைத்தானே வெறுத்துக்கொண்டு வருகின்ற துருவனை அங்கிருக்கிறவர்கள் கண்டு, உத்தானபாத ராஜாவினிடத்திற்சென்று இச்சேதி உரைக்க அவன்மரித்துப்போனபிள்ளை பிழைத்து வந்ததுபோல் நினைத்து இந்தச் சந்தோஷ சமாசாரஞ் சொன்னவனுக்கு மகத்தாகிய விலைபெற்ற முத்தாரத்தைக்கொடுத்து, உத்தமமான அசுவங்களையுடையதாகியும் சொர்ணபட்டங்களினால் அலங்கரிக்கப்பட்டுமிருக்கிற ரதத்தின்மேலேறிக்கொண்டு பிராமணர் பெரியவர்களாயிருக்கிற பந்துக்களாலேயும், மந்திரிகளாலேயும், சூழப்பட்டவனாய் சங்கத்தொனி, பேரிவாத்திய, மத்தளம், வேதகோஷம், புல்லாங்குழல் இவைகளுடனே பட்டணத்தில் நின்றும் வெளிப்புறப்பட்டான. அவனுடைய பட்டமகிஷிகளான சுநீதியும் சுருசியும் சொர்ணத்தினாலே அலங்கரிக்கப்பட்ட பல்லக்கின் பேரிலே உத்தமனென்கிற பிள்ளையுடனே யேறிக்கொண்டுபோய் பட்டணத்துக்கு வெளியிலே யிருக்கின்ற உத்தியானவனத்தினுடைய சமீபத்திலே வருகின்ற துருவனைப்பார்த்து உத்தான

பாதராஜா ரதத்தினின்றும் சீக்கிரமாக இறங்கி மௌனத்துடனே கிட்டப்போய் உடம்புதெரியாத ஆசையையுடையவனாய்ப் பிள்ளையைக் கைகளினாலே ஆலிங்கனம்பண்ணி அடிக்கடி உச்சியில் முகந்துகொண்டு குளிர்ச்சியான ஆனந்தபாஷ்பங்களினாலே ஸ்நானம் பண்ணுவித்தான். சற்சனருக்கெல்லாம் சிரேஷ்டனான துருவனானவன் தகப்பனாருடைய பாதங்களிலே நமஸ்கரித்து அவருடைய அநுக்கிரகம்பெற்று மாதாவான சுநீதியையும், சுருசியையும் நமஸ்காரம்பண்ண மாற்றாந்தாயான சுருசியானவள் பிள்ளையான அந்தத்துருவனை யெடுத்துக் கட்டிக்கொண்டு ஆநந்தபாஷ்பங்களினாலே தடைக்கப்பட்ட வார்த்தையுடன் சிரஞ்சீவியாயிருக்கக் கடவையென்று அநுக்கிரகம்பண்ணினாள். சகல பிராணிகளும் ஜலங்கள் பள்ளத்தில் பாய்கிறாப்போல துருவனை வணங்கினார்கள். உத்தமனும் துருவனும் இரண்டுபேரும் ஒருத்தருக்கொருத்தர் பிரீதியையுடையவர்களாகக் கட்டிக்கொண்டு சரீர சம்பந்தத்தினாலே ரோமாஞ்சலிகளுடனே பொருந்தினவர்களாக மிகவும் சந்தோஷத்தையடைந்தார்கள். துருவனுடைய தாயாரான சுநீதியானவள் தன்னுடைய பிராணனைப்பார்க்கிலும் இஷ்டனான பிள்ளையை ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு அவனுடைய சரீரசம்பந்தத்தினாலே சுகத்தையடைந்தவளாக மனோவியாதியினின்றும் விடுபட்டாள்.

இப்படியாக ஆநந்தபாஷ்பங்களினாலே நனைக்கப்படுகின்ற வீரமாதாவான சுநீதியினுடைய ஸ்தனங்களினின்றும் புத்திர வாத்சல்லியத்தினாலே பாலானது அடிக்கடி பெருகிற்று. அந்தச் சமயத்தில் ஜனங்கள் சுநீதியைப்பார்த்து தெய்வாதீனமாக உன்னுடைய பிள்ளையானவன் வெகுகாலம் காணாமற்போய் திரும்பவும் உன்னையடைந்து உன்னுடைய மனோவியாதியை யெல்லாம் போக்கடித்ததுந் தவிர, இப்பூமண்டலத்தையும் இரட்சிக்கப்போகிறானென்று சொல்லி துருவனைப்பார்த்து பக்தாளுடைய துக்கத்தைப் போக்கடிக்கின்றவராயும், தீராளான புருஷாளால் பூஜிக்கப்பட்டவராயுமிருக்கின்ற பகவான் உன்னாலே நன்றாகப் பூஜிக்கப்பட்டாரென் றிந்தப்பிரகாரம் ஜனங்களினாலே கொண்டாடப்பட்டவனாகிப் பிராதாவுடனே கூடியிருக்கிற துருவனை உத்தானபாத ராஜாவானவர் பட்டணத்து யானையின்பேரிலேற்றிக்கொண்டு சந்துஷ்டனாகவும், ஜனங்களினாலே தோத்திரம்பண்

ணப்பட்டவனாகவும், பட்டணத்திற பிரவேசித்தான். அந்தப்பட்டணத்திலே அந்தந்த வீதிகளதோறும் கட்டப்பட்டிருக்கிற மகரதோரணங்கள் பல புஷ்பங்களுடனேகூடின வாழைமரங்கள-கமுகமரங்கள்-மாந்தளிர்கள-நூதனவஸ்திரங்கள் - புஷ்பமாலிகைகள்-முத்துமாலைகள இவைகளினால் கட்டப்பட்ட தோரணங்களினாலும் வாசல்களதோறும அலங்கரிக்கப்பட்ட தீபஸ் தமபங்களுடனே கூடின பூரணகுமபங்கள சொர்ணமயங்களான உபகரணங்களுடனேகூடின மெத்தைகளினாலும் நான்கு திக்குகளிலும் அலங்கரிக்கப்பட்ட சமபத்துடனே கூடின விமான சிகரங்களுடைய காந்திகளினாலே விளங்குகின்ற நாற்சந்தி வீதிகளுடன் பூரணமாய் மார்ச்சனதனக் குழம்பினாலே நனைக்கப்பட்டு, பொரிகள் அக்ஷதைகள் புஷ்பங்களினாலும் வெகுபிரகாசமான அலங்காரங்கள் செய்திருக்கிற பட்டணத்திலே பிரவேசமாய் வருகிற துருவனைப்பார்த்துப் பாஸ்திரீகள் மங்கள திரவியங்களான அக்ஷதைகள் வெள்ளைக்கடுகுகள் தீர்த்தம் அறுகமபுல் பழங்கள் இவைகளையெல்லாம அசீர்வாதங்களைப்பண்ணி இறைக்க, இப்படி சகல வைபவத்துடனே மனோகரமான கீதங்களைக் கேட்டுக்கொண்டு விலையில்லாத ரத்தினமயமாயும், பால் நுரைகளுக்குச் சமானமாகிய படுக்கைகளையும, சுவர்ணமயங்களாகியுமிருக்கிற வுபகரணங்களும விலையில்லாத ஆசனங்களுளளதாயும், ஸ்படிகமயமாயும், மரகதமயமாகியுமிருக்கிற சுவர்களிலே ரத்தின தீபங்கள் ஸதிரீ பிரதமைகளுடன விளங்குகிறதாயும, ரமணீயமான உத்தியானவனங்களினாலேயும், நாநாவிதங்களான திவ்ய தருக்களினாலேயும் மதுரமாகச சபதிக்கின்ற பட்சிமிருகங்களினாலும், மதுரமாகக் கானம் பண்ணுகின்ற வண்டுகளினாலும், வைடூரியமயமான படிக்கட்டுகளையுடையதான நடபாவிகள பதமங்கள் கருநெய்தல ஆம்பல் இவைகளையும, அம்சங்கள் சீர்க்காக்கைகள்முதலான பக்ஷிக்கூட்டங்களினாலே ரமணீயமான கோஷங்களை யுடையதாயும், சுவர்க்கம்போல் மனோக்கியமாயிருக்கிற பிதாவினுடைய கிருகத்தில் பிரவேசித்து வெகுபிரகாசமாகப் பிதாவினால் உபலாலனம் பண்ணப்பெற்று ஜயந்தனைப்போலச் சுகமாகவிருந்தான். அப்படிப்பட்ட கிருகத்திலே துருவன் வாசம் பண்ணிக்கொண்டிருக்கையில் ராஜருஷியான உத்தானபாதனும் தன்பிள்ளையான துருவனுடைய ஆச்சரியமான பிரபாவத்தைக் கேட்டு மிகவும் மகிழ்ச்

சியை யடைந்து யவ்வனத்தையடைந்த துருவனுக்கு விவாகம் செய்வித்து தன்னுடைய ராச்சியத்தை பட்டங்கட்டி வைத்து சுகமாக வாழுக்கடவாயென்று ஆசீர்வதித்து யோகபூமியைநோக்கித் தவமியற்றச்சென்றனன்

நாரதர் துருவனுக்குத் தபோநிலைகாட்டியது-முற்றிற்று.

---

நாரதர்கலகம் மூன்றாம்பாகம்

முற்றிற்று.

## உயிரெழுத்து

# மூலிகைமர்மம் 4 பாகம்.

முன்னோர்களால் கையாண்டுவந்த பூர்வீகசாஸ்திரம்

| | | | |
|---|---|---|---|
| முதற்பாகம் | விலை | அணா | 8. |
| இரண்டாம்பாகம் | ,, | ,, | 8. |
| மூன்றாம்பாகம் | ,, | ,, | 8. |
| நான்காம்பாகம் | ,, | ,, | 8. |

1. மூலிகைமர்மம் முதலாம் பாகத்தில் பிரமசிருஷ்டியால் உலகத்திலுண்டாயிருக்கும் 600-வித மூலிகையின் தலையெழுத்துக்களை அ - ஆ - இ - ஈ-உ-ஊ-எ-ஏ-ஐ-ஒ-ஓ- ஆகிய உயிர் மெய்யெழுத்துகளின் வரிசைக்கிரமம்போல் பெயர்களைப் பிரித்து ஒவ்வொரு மூலிகையால் நிவர்த்தியாகக்கூடிய வியாதிகளையும் அந்தந்த வியாதிகளுக்கு இன்னின்ன விதமாய் உபயோகிக்க வேண்டுமென்ற செய்முறைகளையும் ஆயுர்வேத விதிப்படி அச்சிட்டிருக்கின்றது. உயர்ந்த பதிப்பு. விலை அணா 8.

2 மூலிகைமர்மம் இரண்டாம் பாகத்தில் அனேகவிதமான ரோக பாகங்களை அங்கன் னியாச விதிப்படி எண்ணூறுடனுக்கும் சிரசே பிரதானமாகையால் சிரரோகம், நேத்திரரோகம், தந்தரோகம், நாசிரோகம், செவிரோகம், சுரரோகம், கண்டமாலை, அறையாப்பு, பாமியம், பிரமேகம், பவுத்திரம், நீரடைப்பு, நீர்க்கட்டு, தாருட்டிய விருத்தி முதலான, ரோகபாகங்களை பாதாதிகேசம் வரையில் அங்கம்பிரித்து கைபாகம் செய்பாகத்தோடு அச்சிட்டிருக்கின்றது. உயர்ந்தபதிப்பு. விலை அணா 8.

3. மூலிகைமர்மம் மூன்றாவது பாகத்தில் அஷ்டகாமமென்னும் வசிய மூலிகை, மோகனமூலிகை, தம்பனமூலிகை, உச்சாடனமூலிகை, ஆகிருஷ்ண மூலிகை வித்துவேடண மூலிகை பேதன மூலிகை மாரண மூலிகை ஆக (எட்டெட்டு) 64 மூலிகையும் இன்னின்ன பாகத்திற்கு உபயோகமாகுமென்பதையும் அவைகளை யெடுப்பதற்கு அதாவண வேதப்படி காலம் வாரம் ஒரைபூசை மந்திரம் இவற்றுடன் சொல்லியிருப்பது மன்றி திரளான அனேக ரோகசாந்தி மூலிகையும் செய்பாகமும் அச்சிட்டிருக்கின்றது. உயர்ந்த பதிப்பு. விலை அணா 8.

4. மூலிகைமர்மம் நான்காம் பாகத்தில், பெண்பாலுக்குரிய வியாதிகூட்டங்களை, அங்கம்பிரித்து பிள்ளையில்லாதவர்க்கு, பாலில்லாதவர்க்கு, பால் அதிகப்பட்டவர்களுக்கு, ருதுவில்லாதவர்க்கு, மாதமுழுக இல்லாதவர்க்கு, சூதகக்கட்டுக்கு, பெரும்பாட்டுக்கு, ஜனனிகளுக்கு, இம்மாதிரிரோகபாகங்களைப், பிரித்து பற்பல தொடர்வியாதிகளுக்கும், இவ்வியாதிகட்கும் வைரியான அனேக அரிய பெரிய மூலிகையின் உபயோகம் யாவத்தும் கைபாகம் செய்பாகத்துடன் அச்சிட்டிருக்கின்றது. உயர்ந்த பதிப்பு. விலை அணா 8.

நான்குபாகமும் ஒரேகட்டமாய் வாங்குவோருக்கு

புல்காலிக்கோ கிலிட்டு பயின்டு செய்து அனுப்பப்படும்


விலை ரூ 2—0—0 முழுப் புத்தகம்.

# இரு 200 நூறு

## இரணூருபுத்தகங்கள் ஒன்ருய்ச்சேர்ந்த

## பலபாட்டுச்

# சில்லரைக் கோர்வை.




பலபாட்டுச் சில்லரைக் கோர்வை என்னும் புத்தகமானது டிம்மி 16-பேஜ் அளவில சைசுகளுள்ள பெரிய புத்தகம 1400- சுமார்50 - 60 - வருடங்களுக்குமுன் னிருந்த பழைய வித்வான்கள் பாடிய பாட்டுகள் முதல் தற்காலத்துவித்வான்கள் பாடியவரையில எல்லாக் கவிராயர்களுடைய பாட்டுகளும் அனேக பதிகங்களும் தோத்திரங்களும் கும்மிகளும் சிந்துகளும் ஜாவளிகளும் டப்பான்களும் ஏசல்களும ஓடம் முதலான சகலமான பாட்டுகளும் ஒரேகோர்வையாய் அச்சிட்டு கலிககோபயிண்டு செய்திருக்கின்றது இந்தப் புத்தகங்களைத் தனித் தனியாக வாங்கினால் சுமார் 3—2—0 ரூபாய்கு மேலாகும் ஒரே கட்டடமாய் அச்சிட்டிருக்கின்றோ மாகையால் வாங்குபவர்களுககுச் சகாயமாய்க் அரை விலையாய் கொடுக்கப்படுகிறது

கலிக்கோபயிண்டு விலைரூபா 1 8 0

ஷை தோல்பயிண்டு விலைரூபா 2 0 0

## மதிகெட்டான் நாடகம்.

இந்திரன் மகனாகிய கொந்தி ராஜனென்பவன் மாதர்மோகத்திற் காதல் கொண்டவனாகி தொட்டுக்கெட்ட பத்மாசூரன்போலவும் தொடாமல்கெட்ட கர்ணன்போலவும் விட்டுக்கெட்ட மாபலிப்போலவும் விடாமல் கெட்ட ராவணன்போலவும் மதிகெட்ட மகாராஜனது அதி யற்புதமான நாடகம்.

இதன விலை அணா-5.

---

சிறுமணவூர்-முனிசாமி முதலியார் அண்டு ஸன்ஸ்,

நெ. 12, சட்டணநாய்க்கன் தெரு, சூளை போஸ்டு, மதராஸ்.

### சுகர்நாடி என்னும்

# சோதிட சிகாமணி.

## திருகாலகணிதம் மூலமும் உரையும்.

## பெரிய புத்தகம்.

ஜோதிடங்களில் - முதநூல, வழிநூல், யென்று சொல்லப்பட்ட பூர்வீக சாஸ்திரங்களில் இந்த சுகாநாடியென்னும் சோதிடசாஸ்திரம் ஒன்றைத்தான் முதல நூலென்று சொல்லப்படும் (அதாவது) பசும்பாலினிடமாக தயிர், மோர், வெண்ணெ, நெய்முதலியவைகளை யெப்படி உண்டுபண்ணிக் கொள்வார்களோ, அதுபோலவே இவ்வுலகத்திலுள்ள எல்லாஜோதிட சாஸ்திரங்களும் எல்லா ஆரூட சாஸ்திரங்களும் இந்த சுகாநாடியென்னும் பெருநூலிலிருந்து உற்பத்தியான சிற்சில நூல்களென்று யாவரும் பரிஷ்காரமாய் தெரிந்து கொள்ளலாம்.

இந்த சுகாநாடி யென்பது சுமார் ஐயாயிரசுலோக தாத்பரியங்களும் அனேகநூறு கணக்கான காலசக்கரங்களும் அடங்கியிருப்பதனாலில், சந்தேக வினாக்களுக்கு விடையும் தெரிவித்திருப்பதனால் இந்த சாஸ்திரம் ஒன்றைக் கொண்டே யூகிக்குமளவில் எல்லா காலங்களுக்கும் எல்லா ஜெனனங்களுக்கும் பனிதா விலங்குபறவை முதலிய ரூபபேத குறிப்புகளும் பிரித்தெழுத ஒழுங்கான பிரமாணமான பெரியசாஸ்திரம் **840**-பக்கங்களுடைய பெருவாரிநூல்.

இதன் விலை ரூபா - 3

## மாமாங்க புராணவசனம்.

பல தலங்களுள் பெருமை பெற்றோங்கும் கும்பகோணக்ஷேத்திரத்தில் வருடந்தோறும் நடந்தேறும் மாசிமகதீர்த்த உச்சவம் பன்னிரண்டு கூடிய மகாமகமென்னும் மாமாங்கதீர்த்த ஐதிகத்தை ஆதிகாலத்தில் தேவேந்திரனால் பூஜித்து பூலோகத்தில் கும்பகோணமென்று பேருண்டான காரணங்கள் முதலிய 11-அத்தியாமாக வசனகாவியமாய அச்சிட்டிருக்கிறது. இதன்விலை அணா-4.

18-24-அளவு மாமாங்கபடம் ஒன்று இனாம்.

## மார்க்கண்டேய நாடகம்.

இந்த மார்க்கண்டேயர் நாடகமானது முன்னிருந்த தஞ்சை கும்பகோணம் முதலிய வர்ன்னமெட்டுகளை பார்க்கிலும் சிறு பிள்ளைகள் கூட மிகு லேசாய்ப்பாடும்பொருட்டு மீனாட்சிசுந்தர முதலியாரால் இயற்றப்பட்டு அச்சிட்டிருக்கின்றது.

இதன் விலை அணா-4.


---

சிறுமணவூர்-முனிசாமி முதலியார் அண்டு ஸன்ஸ்,
நெ. 12, சட்டணநாய்க்கன் தெருவு,
சூளை போஸ்டு, மதராஸ். என்., சி.

# பிரபஞ்ச உற்பத்தி.

தேவ மனிதா விலங்கு ... உலக

சகல உற்பத்தியடங்கியது 610 சமிடங் ...



1 [illegible] ... பிரபஞ்சமென்னு ... [illegible]

2 [illegible]

... யோ, சுமித்திரா, மலயா, ... பிலிப்பி, ... முதலிய எல்லா ... களும் அதுகளுக்குரிய பூர்வ ... பிரபஞ்சவுற்பத்தி என்னும் ... புத்தகத்திற் காணலாம்.

**3** தெய்வபோதம். பிரமா, விஷ்ணு, ... முதலிய திரு ... களின் அவதாரங்களும், அவாசமின ... விருத்து ... காரணங்களும், கணேசா, சுப்பிரமணியா, ... முதலாக முப்பத்து முக்கோடி தேவர்கள், ... அஷ்டவசுக்கள், கருடகாந்தருவா, ... அப்சரஸ்திரீகள் ... கூறப்பட்டிருக்கின்றது.

இந்த பிரபஞ்சவுற்பத்தி என்னும் சாஸ்திரமானது தமிழ், தெலு, இங்கிலீஷ், துலுக்கு முதலிய எல்லா ... மொழியில் எழுதியது. இதை சகல ஜாதியாரும் ... வாசிக்கத் பொதுவான சாஸ்திரமென்றறிக்.

இதன் விலை ரூபா 2


சிறுமணவூர்-முனிசாமி முதலியார் அண்டு ஸன்ஸ்,

சூளை போஸ்டு, மதராஸ். என்